இது
# நம்தேசம்

| | | | | |
|---|---|---|---|---|
| பார்வை 01 | வியூகம் 15 | சித்திரை – 2014 | பக்கங்கள் : 24 | விலை ரூபா : 30.00 |





## நான் செய்த குற்றம் என்ன?

## ஐ.நாவில் முழங்கிய தமிழரின் உண்மைக்குரல்கள்

உள்ளே

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அனந்தி தனித்துவிடப்படுகிறாரா? 06

பரிணாம வளர்ச்சி பெற்றுவரும் தமிழக போராட்டங்கள் 08

தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து கிழக்கு விலக்கப்படுகிறதா? 10

தமிழக மக்களின் அழுத்தம்தான் இந்தியாவை ஈழத்தமிழ் மக்கள் மீது திருப்பும் – தோழர் தியாகு 12

# இந்தியா தொடர்பான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை விவேகமற்றது

**- தயான் ஜயதிலக**

2009க்கு பிறகு இந்தியா தொடர்பாக இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை விவேகமற்றது என அரசியல் ஆய்வாளரும் இலங்கைக்கான முன்னாள் ஜெனிவா தூதுவருமான தயான் ஜெயதிலக குறிப்பிட்டுள்ளார்.

2009 மே மாதம் இலங்கை அடைந்த இராணுவ வெற்றிக்கு பின்னர் இயல்புவாத வெளிநாட்டுக் கொள்கையை இலங்கை பின்பற்றியிருக்க வேண்டும். இந்த இயல்பு வாத கொள்கை என்பது இலங்கைக்கு அருகில் பிராந்திய வல்லரசாக இருக்கின்ற இந்தியாவை அனுசரித்துச் செல்ல வேண்டும் என்பதே ஆகும். இயல்புவாதக் கொள்கையின் மையக்கருத்து உலகம் பல்துருவ மையங்களை கொண்டது என்பதாகும். நாம் அதனை பயன்படுத்த வேண்டும். புதிதாக எழுச்சி பெறும் முக்கிய வல்லரசுகளை நட்பாக்கி கொள்ள வேண்டும். 3ம் உலகுடன் கூட்டாளியாக இணைய வேண்டும். 2009 இராணுவ வெற்றிக்கு பின்னர் அதனை நீண்டகால எல்லைக்கு நீடிப்பதற்கு இந்த நோக்குநிலை அவசியம்.

2009 மேயில் ஜெனிவா சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்பதிலிருந்து இலங்கையை பாதுகாத்தது இந்தக் கொள்கை தான். ஆனால் தற்போது அதற்கு நேர்மாறான கொள்கையினையே பின்பற்றுகின்றது. முன்னைய கொள்கை தமிழ் நாட்டிற்கும் முக்கிய இடத்தை வழுங்கும். இலங்கை அரசு அதிகாரப் பரவலாக்கலை செயற்படுத்தாவிட்டால் இலங்கை இந்திய உறவில் விரிசல் ஏற்படும். இந்தியாவுடன் உறவை பேணுவதற்கு ஒரேஒரு வழி 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தான் என இக் கொள்கை வற்புறுத்துகின்றது.

இந்தியாவை மீறி இலங்கைக்கு உதவுவதற்கு எவரும் முன்வரப் போவதில்லை. 1987ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உணவுப்பொட்டலங்களை இந்திய விமானங்கள் வீசிய போது இலங்கை பதிலடி கொடுத்திருந்தால் தேர்ந்தெடுத்த இலக்குகள் மீது இந்தியா வான் தாக்குதலை நடத்தியிருக்கும். இந்த சம்பவம் நடந்தவுடன் அப்போதய ஜனாதிபதி J.R.ஜெயவர்த்தன ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை விமானங்களை சுட்டு வீழ்த்துவதற்கான ஏவுகணைகளை கொள்வனவு செய்யும் படி சீனாவிற்கும் பாகிஸ்தானிற்கும் அனுப்பினார். ஆனால் ரணில் வெறும் கையோடு தான் திரும்பினார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க சர்வதேச விசாரணை ஒன்றுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் இந்திய அமைதி காக்கும் படையின் காலத்தையும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என கூறியிருக்கிறார். இது இந்தியாவை அச்சுறுத்துவது என்ற பெயரில் விடுக்கப்பட்ட விவேகமற்ற கூற்றாகும். இதற்கு ஐ.நா மனித உரிமை கவுன்சிலும் ஆதரவு தராது. இதைவிட வரும் தேர்தலின் மூலம் நரேந்திர மோடி இந்திய ஆட்சியை கைப்பற்றக்கூடும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. இந்திய எதிர்ப்பு வார்த்தைகளை காங்கிரஸ் அரசாங்கம் பொறுத்துக்கொள்வது போல மோடியின் அரசாங்கம் நடந்துகொள்ளப் போவதில்லை.



2009 மே க்கு பின்னர் இலங்கை அரசாங்கம் நவ பழமைவாத கொள்கையே பின்பற்றுகின்றது. இதனை இலங்கையில் தொடக்கி வைத்தவர்கள் முன்னாள் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலக் முதலியும் J.R ஜெயவர்தனாவின் புதல்வர் ரவி ஜெயவர்த்தனாவுமே ஆவர். 1980 களில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையாக பின்பற்றப்பட்ட இக் கொள்கை மீண்டும் மேலெழ தொடங்கியுள்ளது. இந்தியாவுடன் இலங்கை கொண்டிருந்த நல்லுறவும் அது வழங்கிய பாதுகாப்பு என்ற கவசமும் 13வது திருத்தம் என்ற ஆதாரத்தில் தான் தங்கியிருந்தது. இன்று அது கைவிடப்பட்டு இந்தியாவிலிருந்து இலங் கையை எப்படி பாதுகாக்கலாம் என சிந்திக்கப்படுகிறது. J.R ஜெயவர்த்தன இக் கோட்பாட்டின் படி அமெரிக்காவிற்கு இடம் ஒதுக்கினார். இன்று அந்த இடம் சீனாவிற்கு ஒதுக்கப்படுகிறது. இக் கொள்கையின் படி அமெரிக்கா சீனா என்ற இரு நாடுகளுக்கும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை பல் துருவ சமநிலை என்பது தேவையற்ற விடயம் என்கின்ற கருத்துநிலை பேணப்படுகின்றது.

இலங்கையின் கொள்கை மாற்றத்திற்கான ஆரம்ப அறிகுறிகள் ஜெனிவாவில் தான் ஆரம்பித்தன. அதன் கசப்பான விளைவுகளையும் ஜெனிவாவிலேயே சந்திக்க வேண்டும். இக் கொள்கையின் பிரதிபலிப்பு தான் ஐ.நாவுடனும் உலக நாடுகளுடனும் விரைந்து சண்டைக்கு போக முற்படுகிறது. இஸ்ரேலின் உதவியுடன் அமெரிக்காவின் இலங்கை கொள்கையை மாற்றி விடலாம் என்ற எண்ணமும் உள்ளது. இவையெல்லாம் நடக்க முடியாதகாரியம்.

## முல்லைத்தீவு மாவட்டத்தின் பல இடங்களில் பௌத்தமத அடையாளங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களில் பௌத்தமத அடையாளங்களை நிறுவி வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பௌத்தமத அடையாளங்களை தமிழர் பிரதேசங்களில் நிறுவுவதனூடாக தமிழர்களின் நிலங்களை அபகரிக்கவும், திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை மேற்க் கொள்ளவும் அரசு முயற்சித்து வருவதாக மேலும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.



இராணுவத்திற்கு சொந்தமான காணிகள் என்று கூறி ஏற்கனவே பல நிலங்கள் பறிக்கப்பட்டு வருகின்றது. அதன் அடுத்த கட்டமாக பௌத்த மத அடையாளங்களை தமிழர்களின் சொந்த நிலங்களில் நிறுவி அவற்றையும் கைப்பற்ற அரசு முனைப்பாக செயற்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு கோட்டாக்கேணி பிள்ளையார் கோயில், கொக்கிளாய் பிரதேசம் ஒதியமலை மலையடி வைரவர் கோயில் ஒட்டிசுட்டான் பகுதி வட்டு வாகல் கன்னிமார் கோயில் நாயாறு நீராவியடி ஏற்றம் போன்ற இடங்களில் காணிகள் அபகரிக்கப்பட்டும் இந்துக்கோயில்களுக்கு முன்பாக பௌத்த விகாரைகள் கட்டப் பட்டும் உள்ளது. காணியின் உரிமையாளர்கள் வழக்கு தாக்கல் செய்தும் இன்னும் தீர்வு கிடைக்கப்பெறவில்லை என வெளியிட்டுள்ளனர்.

## நுவரேலியா பதுளை மாவட்டங்களிலிருந்து கிராம சேவையாளர்களாக 8 பேர் மாத்திரமே தமிழர் தெரிவு

நுவரேலியா பதுளை மாவட்டங்களிலிருந்து கிராம சேவை அலுவலர்களாக எட்டு தமிழர்கள் மட்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் கடந்த ஒக்டோபர் மாதம் கிராம சேவை அலுவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இதனால் பதுளை, நுவரேலியா மாவட்டங்களில் இருந்து 4000 இற்கும் அதிகமான மலையக இளைஞர்கள் இப்பதவிக்கு விண்ணப்பித்தனர். போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் பின்னர் இவ்விரு மாவட்டங்களிலும் இருந்து எட்டு தமிழர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதே வேளை இவ்விரு மாவட்டங்களிலும் கிராம சேவை அலுவலர் பதவிக்கான தமிழ் பேசும் உத்தியோகத்தர்களின் தேவை மிக அதிகமாக உள்ளது. தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இந் நிலைமை ஏற்பட்டுள்ளதால் அங்குள்ள மக்கள் தமது அரச நிர்வாக ரீதியான கடமைகளை நிவர்த்தி செய்து கொள்வதில் கடுஞ் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள்.

## கிழக்கு ஆசியாவை நோக்கி இந்தியாவின் பார்வை விரிகின்றதா?

சர்வதேச ரீதியாக பிராந்தியங்களின் அதிகாரச் சமநிலையில் சக்தி வாய்ந்த அரசுகள் பங்கெடுக்கின்றன. தெற்காசியா, கிழக்காசியா, தென்கிழக்காசியா ஒன்றும் விதி விலக்காக இல்லை. தெற்காசியாவின் அதிகாரச்சமநிலை சீனாவிற்கு சார்பாக சரியும் நிலையைத் தடுக்க அமெரிக்காவும், இந்தியாவும் கூட்டுச் சேர்ந்து முனைகின்றது என்பது எல்லோரும் அறிந்தவையே!

இதே போன்ற ஒரு நிலை கிழக்காசியாவிலும் எற்படத் தொடங்கியுள்ளது. அங்கு சீனாவிற்கு சார்பான அதிகாரச் சமநிலையைச் சரி செய்ய இந்தியா களமிறங்கியுள்ளது. யப்பான், தென்கொரியா ஆசிய நாடுகளுடன் மட்டுமல்ல தென்கிழக்காசிய நாடுகளின் அமைப்பான ஆசியானுடனும் நெருங்கிய உறவுகளைப் பேணத் தொடங்கியுள்ளது.



இந்திய குடியரசு தின கொண்டாட்டங்களுக்காக யப்பான் பிரதமர் ஷின்சோ அபே புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருந்தார். இவரது வருகை புதுடில்லி - டோக்கியோ உறவுகளில் உச்சத்தை தொட்டது. யப்பான் - சீன உறவுகளில் விரிசல் ஏற்பட்டு வருகின்ற சூழலில் புதுடில்லி - டோக்கியோ உறவுகள் உச்சத்தை தொட்டமை தான் இங்கு முக்கிய விடயம். இந்தச் சந்திப்பின் போது இரு நாட்டுத் தலைவர்களினாலும் ஒரு தொலை நோக்கு அறிக்கை வெளியிடப்பட்டது. இவ் அறிக்கையில் கடற்பிராந்தியத்தில் கூட்டுறவு முயற்சிகளை மேம்படுத்துதல், கடல் வலய பாதுகாப்பு, கப்பற் போக்குவரத்திற்கான சுதந்திரம், கடல் வழிகளில் போக்குவரத்திற்கு பாதுகாப்பு, வர்த்தக நடவடிக்கைகள் தடையின்றி சர்வதேச சட்டங்களுக்கு அமைய இடம் பெறுதல் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.

யப்பான் விஜயத்திற்கு முன்னரே தென்கொரிய ஜனாதிபதி பார்க்கியோன்னஹ மூன்று நாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இந்தியா சென்றிருக்கின்றார். இது புதுடில்லிக்கும் சியோலுக்கும் இடையே புதிய உத்வேகத்தை உருவாக்கும் சந்தர்ப்பமாக அமைந்தது. வடகொரியா வின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்கு சீனா ஆதரவளித்தல், தென்கொரியாவின் எல்லை களில் சீன ஆக்கிரமிப்பு என்பன சீன - தென்கொரிய உறவில் பாதிப்புக்களை ஏற்படுத்தியது. இந் நிலையில் கொரிய தீப கற்பத்தில் ஒரு அதிகாரச் சமநிலையைப் பேண அது இந்தியாவை நாடுகின்றது போல தெரிகின்றது.

தனது நாட்டின் பாதுகாப்பினை பலப்படுத்த பிராந்தியத்தில் தனது இருப்பை பலப்படுத்த வேண்டும். இதற்கு அருகிலுள்ள பிராந்தியங்கள் முதல் தடுப்பு அணையாக இருக்கும். இந்த அணுகு முறையைத்தான் கிழக்காசியா தொடர்பில் இந்தியா பின்பற்றுவது போல தெரிகின்றது.

# ஐ.நாவில் முழங்கிய தமிழரின் உண்மைக்குரல்கள்

**இருபத்தைந்தாவது ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டத் தொடரில் 26.03.2014 அன்று ஐ.நா மனித உரிமை பேரவை ஆணையாளர் நவனீதம்பிள்ளை அவர்களின் அறிக்கை மீதான விவாதம் இடம்பெற்றது. அதில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தனர். அவர்கள் ஆற்றிய உரையின் முழுவிபரம் வருமாறு**

## தமிழ் தேசத்தின் மீது தொடர்ச்சியாக இனஅழிப்பு மேற்கொள்ளப் படுகிறது பொறுப்புக்கூறலுக்கு நம்பகமான சர்வதேச விசாரணை வேண்டும்

**- கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**



நடைபெற்ற பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் சர்வதேச நம்பத்தகுந்த விசாரணையும். அத்துடன் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கூடான நடவடிக்கையும் தேவை என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் ஆற்றிய உரையில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் இந்த அவைக்கு பல எழுத்து மூல அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கிறோம். இறுதியாக எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், 2013ம் ஆண்டு நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தினால் கடந்த கால போரின் போதும், தற்போதும் இலங்கைத் தீவில் இனஅழிப்பு நடைபெற்று வருகிறது என்று தீர்ப்பளிக்கப்பட்டமையை சுட்டிக் காட்டியிருந்தோம்.

நாங்கள் ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையை கவனமாக படித்தோம். அதன் பிரகாரம், மூன்று பிரதான பிரிவுகளில் எங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கின்றோம்.

இலங்கைத் தீவில் அண்மைக் காலமாக நடந்துவரும் நிகழ்வுகளை பொறுத்தவரை, தமிழர் தேசத்தின் இருப்பை இல்லாது அழிக்கும் நோக்கத்துடன், சிறீலங்கா அரசினால் தொடர்ச்சியாக இனஅழிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் தீர்மானத்துடன் நாங்கள் இணங்குகிறோம்.

இலங்கைத் தீவில் மீள்நல்லிணக்கம் என்பது நடைமுறைச் சாத்தியமற்றது. எத்தகைய மீள்நல்லிணக்கமும் தற்போதைய சிறீலங்கா அரச கட்டமைப்புக்குள், எண்ணிக்கையில் குறைந்த சனத்தொகையையுடைய தமிழர்தேசமும், எண்ணிக்கையில் அதிக சனத் தொகையை கொண்ட சிங்களதேசமும் உள்வாங்கப்பட்டதாக இருக்கவேண்டும். சிங்கள தேசத்திற்கு தமிழர் தேசத்துடன் எத்தகைய மீள்நல்லிணக்கத்தையும் மேற்கொள்ளும் நோக்கமேயில்லை என்பதுடன், தமிழர் தேசத்தை சிங்களபௌத்த இலங்கை என்பதற்குள் ஒன்று கலப்பதையே விரும்புகிறது.

உண்மையில் மாற்றுவழி எதுவும் இல்லாததால், தமிழ் மக்களுக்கு தற்போது இருக்கக்கூடிய பரிகாரம் என்பது நாட்டை விட்டு வெளியேறுவது அல்லது சிங்கள தேசத்துக்குள் ஒன்று கலந்து விடுவதாகும்.

பொறுப்பு கூறுவதை பொறுத்தமட்டில், நடைபெற்ற பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் சர்வதேச நம்பத்தகுந்த விசாரணையும், அத்துடன் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கூடானதோ அல்லது தற்காலிக சிறப்பு தீர்ப்பாயத்துக் கூடானதுமான நீதிமுறைச் செயற்பாட்டின் மூலமே பரிகாரம் காணப்படவேண்டும். இதற்கு எந்த விதத்திலும் குறைவான தரத்திலான விசாரணையானது மனிதாபிமான சட்டத்தின் பிரயோகத்தையும், சர்வதேச நீதிக் கோட்பாட்டையும் பலவீனமடையச் செய்யும்.



## ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கமும் தமிழ் மக்களுக்கு நீதியை வழுங்காது - செல்வராசா கஜேந்திரன்

உண்மையை கண்டறிவதற்கும் நீதியை நிலைநாட்டுவதற்குமான சிறீலங்காவின் தேசிய பொறிமுறைகள் அனைத்தும் தொடர்ச்சியாக தோல்வியடைந்ததுள்ளது எனக் குறிப்பிடும் ஐ.நா மனித உரிமை பேரவை ஆணையாளரின் முடிவுரையின் 72 ஆவது பந்தியை நாம் வரவேற்கிறோம். அத்துடன், போதிய கால அவகாசமில்லை என்றோ தொழில்நுட்ப ஆற்றல் இல்லை என்றோ இனியும் காரணம் கூறமுடியாது. ஏனெனில், இது அரசியல் விருப்பு தொடர்பான கேள்வி என்றும் குறிப்பிட்டுள்ள ஐ.நா மனித உரிமை பேரவையின் ஆணையாளிரின் முடிவுரையை நாம் வரவேற்கிறோம்.

அரசியல் விருப்பின்மை என்பது தனித்து இந்த அரசாங்கத்தின் இயல்பு மட்டுமல்ல. மாறாக இது சிறீலங்கா அரசை கட்டமைக்கும் சிங்கள தேசத்தின் பொதுவான குணாம்சம் என்பதை நாம் மீளவலியுறுத்துகிறோம். எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் எந்தக் கட்சியை சார்ந்த அரசாங்கமாவது உள்ளக பொறிமுறைகள் மூலம் தமிழ் மக்களுக்கு நீதியை வழங்கும் என எதிர்பார்ப்பதில் எத்தகைய பயனும் இல்லை என்பதை நாம் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

எது எப்படியிருப்பினும், மீள்நல்லிணக்கத்திற்கான தீர்வாக கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் என குறிப்பிடும் ஐ.நா மனித உரிமை பேரவை ஆணையாளரின் அறிக்கை தொடர்பாக எமது ஏமாற்றத்தை தெரிவிக்கிறோம்.

தமிழ் சிங்கள சமூகங்களுக்கிடையிலான இன்றைய உறவுநிலையானது தமிழ் சமூகத்தின் மீதான சிங்கள சமூகத்தின் மேலாதிக்கமாகவே காணப்படுகின்றது. சிங்கள தேசமானது தமிழ்த் தேசத்தை சிங்கள தேசத்திற்குள் ஒன்றுகலக்கும் தனது கொள்கையை, குறிப்பாக தமிழரின் சுயநிர்ணய உரிமை அரசியலை குற்றவியல் செயற்பாடாக்குவது மற்றும் நிலஅபகரிப்பினூடாக தமிழர் தாயகத்தை சிங்கள மயமாக்குவது போன்ற வடிவங்களில் தொடர்ச்சியாக செய்துவருகின்றது.

இந்த ஒடுக்குமுறையின் பொதுவான சூழல் பாலியல் வன்முறை, பாலியல் பலாத்காரம் மற்றும் சித்திரவதை என்று தொடர்கிறது.

தமிழ் மக்களை பொறுத்தவரை மீள்நல்லிணக்கம் என்பது மேலாதிக்கமாகவே தென்படுகிறது. தங்களின் விவகாரங்களினை தாமே கட்டுப்படுத்தக்கூடிய வகையில் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் ஊடாக சுயாட்சியை வழங்குவதே தமிழ் மக்களின் வாழ்வில் இயல்பு நிலைமை திரும்புவதற்கான ஒரேயொரு வழி முறையாகும்.

ஐ.நா மனித உரிமைப் பேரவையில் தமிழில் உரையாற்றினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## வெவ்வேறான தேசங்களுக்கிடையிலான புதிய ஒரு சமூக - அரசியல் ஒப்பந்தமே நிலையான அரசியல் தீர்வாக அமையும் - விஸ்வலிங்கம் மணிவண்ணன்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருடைய சர்வதேச நம்பத்தகுந்த விசாரணைப் பொறி முறையை உருவாக்கவேண்டும் என்ற பரிந்துரையை வரவேற்கும் அதேவேளை. இவ் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் விவாதிக்கப்படவிருக்கும் தீர்மான வரைபில் சர்வதேச விசாரணை பொறிமுறை பற்றி குறிப்பிடப்படாமையால் நாங்கள் அதிருப்தி அடைகிறோம்.

இத்தீர்மான வரைபில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலவரை பற்றியும், தமிழ் மக்களுக்கு எதிராக நடந்து கொண்டிருக்கும் இனஅழிப்பு தொடர்பாக விசாரிக்க வேண்டும் என்ற ஆணையை ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு வழங்காமை தொடர்பிலும் கவலையடைகிறோம்.

மேலும், நாங்கள் தீர்மானத்தின் செயற்பாட்டு பந்தி 8 ல், சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களை விசாரிப்பது தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படாமை தொடர்பிலும் நாம் ஆதங்கம் அடைகிறோம்.

குறித்த தீர்மானத்தின் செயற்பாட்டு பந்தி 6 இல், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் மாகாணசபைகள் முறை தொடர்பில் குறிப்பிடப்பட்டிருப்பதானது, இலங்கை அரசியலமைப்பின் 13ம் திருத்த சட்டமானது அரசியல் தீர்வுக்கு ஓர் ஆரம்பப் புள்ளியாக அமையும் என்ற மாயையை நிலைபெறச்செய்கிறது.

சுயநிர்ணய உரிமையையும், தமிழர் தேசத்தையும், தமிழர் தாயகத்தையும் அங்கீகரிக்கக் கூடிய, இலங்கையில் இருக்கின்ற வெவ்வேறான தேசங்களுக் கிடையிலான புதிய ஒரு சமூக-அரசியல் ஒப்பந்தமே நிலையான அரசியல் தீர்வாக அமையும் என நாங்கள் வலுவாக நம்புகிறோம்.

மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையோ அல்லது இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் தீர்மானமோ தமிழர் தேசத்துக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இனஅழிப்பை தடுத்து நிறுத்துவது தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படாமையானது எம்மை ஆழமாகக் கவலையடையச் செய்துள்ளது.

தொடரும் இனஅழிப்பை தடுத்துநிறுத்துவதற்கு, ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைஊடாக தமிழர் தாய கத்தில் ஒரு நிலைமாற்று நிர்வாக கட்டமைப்பை ஏற்படுத்துவதே ஒரேயொரு வழியென நம்புகிறோம். இவ் மனித உரிமைகள் பேரவையானது தமிழ்மக்களுக்கு எதிராக நடந்து கொண்டிருக்கும் இனஅழிப்பை தடுத்துநிறுத்துவதற்கு உண்மையிலலேயே அக்கறை கொண்டிருக்குமாயின், இச்சபையானது ஐக்கிய நாடுகள் சபை செயலாளார் நாயகத்திற்கு இத்தகைய நிலைமாற்று நிர்வாக கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பில் பாதுகாப்புச் சபைக்கு பிரேரிக்குமாறு பரிந்துரை செய்ய வேண்டும்.

## மூதூர் கங்குவேலி அகத்தியர் ஸ்தாபன சிவன் ஆலயத்தில் பௌத்தபிக்கு கொள்ளையடிப்பு

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச கங்குவேலி கிராமத்தில் தவமுனி அகத்தியரினால் உருவாக்கப்பட்ட பழம் பெரும் சிவன் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தில் அண்மைக் காலமாக புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந் நிலையில் மார்ச் மாதம் 14ம் திகதி வெள்ளிக்கிழமை பௌத்தபிக்கு தலைமையில் சென்ற சிங்களக் குழுவினர் கோவில் களஞ்சியசாலையை உடைத்து அங்கிருந்து பல பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

புனருத்தாரண பணிகள் கடந்த 12ம் திகதியிலிருந்தே இடம்பெற்று வருகின்றன. மூதூர் பொலீசாரும் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மார்ச் 17ம் திகதி அடிக்கல் நாட்டப்படவிருந்த வேளையிலேயே இக் கொள்ளையடிப்பு இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தில் புனரமைப்பு பணிகளுக்கென வைக்கப்பட்டிருந்த ஆறு பெறுமதியான தூண்களும் பிக்கு தலைமையிலான குழுவினரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

ஏற்கனவே பல மாதங்களுக்கு முன்னர் இந்த ஆலயத்திலிருந்த பெறுமதி வாய்ந்த புராதன சிவலிங்கம் உடைத்து சேதமாக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மூதூர் பொலீசில் முறையிடப்பட்ட போதும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## ஒதியமலை வைரவர் கோயில் வளாகத்திற்குள் மக்கள் செல்லத்தடை



ஒதியமலையில் அமைந்துள்ள வைரவர் கோயில் வளாகத்துக்குள் அப்பகுதி மக்கள் உட்செல்ல இராணுவத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. அண்மையில் இப் பகுதிக்குள் பௌத்த மத தலைவர் ஒருவர் வந்து சென்றதை அடுத்தே இராணுவத்தால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

1983ம் ஆண்டு வரை ஏறத்தாழ 200க்கு மேற்பட்ட குடும்பங்களை தன்னகத்தே கொண்டிருந்த இக் கிராமம் 1984ம் ஆண்டு இடம்பெற்ற ஒதியமலை படுகொலையின் பின் இக்கிராம மக்கள் இடம்பெயர்ந்து 2010க்கு பின்னர் மீள்குடியேறியுள்ளனர். மீள்குடியேறியதை தொடர்ந்து அங்குள்ள மக்கள் அக் கோயிலை வழிபட்டு வந்த நிலையில் திடீரென கோயில் வளவுக்குள் மக்கள் உட்செல்வதை இராணுவம் தடைசெய்துள்ளனர். இதனால் தங்களது பாரம்பரிய ஆலயத்தை வழிபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், பௌத்த விகாரை ஒன்று அமைப்பதற்கு திட்டம் தீட்டப்படுவதாகவும் அக் கிராமத்து மக்கள் கூறுகின்றனர்.

## இலங்கை - யானையை மறைத்தல்

சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர் மணிவண்ணன் கடந்த நான்கு ஆண்டு காலமாக இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையை ஆவணமாகத் திரட்டி சுமார் 1000 பக்கத்தில் ஒரு ஆங்கில நூலை வெளியிட்டுள்ளார். SRILANKA : HIDING THE ELEPHANT (யானையை மறைத்தல்) என்ற பெயரில் இந் நூல் வெளிவந்துள்ளது.

இந் நூல் அறிமுக விழா மார்ச்மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் சென்னை மைலாப்பூர் சாந்தோம் தேவாலயம் அருகில் உள்ள மேய்ப்பு பணி நிலையத்தில் இடம் பெற்றது.

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் நெடுமாறன் அறிமுகவிழாவிற்கு தலைமைதாங்கினார். உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன், ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு,திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் தோழர் விடுதலை இராசேந்திரன், தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் தியாகு, மக்கள் சிவில் உரிமைக் கழகத்தைச் சேர்ந்த தோழர் பாலமுருகன், சேவ்தமிழ் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் செந்தில் ஆகியோர் உரையாற்றினர்.

ஈழத்தில் நடந்தது, நடப்பது இனப்படுகொலை என்பதை நிறுவும் முயற்சிக்கு வரலாற்றில் இந்த நூல் முதன்மைப் பங்காற்றும் என சனல் 4 தொலைக்காட்சியின் இயக்குனர் கெலும் மக்ரே நூலுக்கு எழுதிய அறிமுக உரையில் குறிப்பிட்டுள்ளார்.

### கண்ணீர் அஞ்சலி



அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினர் மத்தியாஸ் சூசைதாஸ் மார்ச் மாதம் 19ம் திகதி காலமானார். இவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் காலத்திலிருந்தே கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வந்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வளர்ச்சிக்கும் ஆதர்வு வழங்கினார்.

அவரது மறைவிற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரசும் அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றது.

## இராணுவத்துடன் இணைந்து மாணவர்களுக்கு செயலமர்வு நடாத்திய வடமாகாண கல்வி அமைச்சர்



வடக்கு மாகாண கல்வி அமைச்சும் இலங்கை இராணுவமும் இணைந்து ஒழுங்கமைத்த தனிநபர் ஆளுமை விருத்தி செயலமர்வு ஒன்று மார்ச் மாதம் 14ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டது. யாழ்ப்பாணம் நகரிலுள்ள சிவில் பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் இச் செயலமர்வு இடம் பெற்றது.

வடமாகாண கல்வி அமைச்சும் இராணுவமும் இணைந்து நடாத்திய செயலமர்வு எனக் கூறப்பட்டாலும் இராணுவத்தினர் மட்டுமே அங்கு கருத்துரைகளை வழங்கினர். இச் செயலமர்வுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் இருந்து இந்த ஆண்டு உயர்தர பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்கள் அழைக்கப்பட்டனர்.

15ம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற செயலமர்வில் மாணவர்கள் இராணுவ பயிற்சி கல்லூரியில் சேருமாறு கேட்கப்பட்டனர். இங்கு படித்து வேறு இடங்களில் வேலை பார்க்கலாம் விரும்பினால் இராணுவத்திலும் தொடர்ந்து இருக்கலாம் எனக் கூறப்பட்டது.

இச் செயலமர்வின் முடிவில் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் இச் சான்றிதழில் கையை முத்திட்டனர்.

## வட மாகாண சபைக்கு ஒரு புதிய தணிக்கை அதிகாரி



வடமாகாண சபையின் புதிய தணிக்கை அதிகாரியாக அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தன்னைத் தானே நியமித்துக் கொண்டுள்ளார். மாகாணசபை உறுப்பினர்கள் கொண்டு வருகின்ற தீர்மானங்களை சபைக்கு வரவிடாமல் தானே நிராகரிக்கின்றார். ஏற்கனவே அனந்தி கொண்டு வந்த தீர்மானத்திற்கு இந்நிலை ஏற்பட்டது. தற்போது ரவிகரன் கொண்டு வந்த தீர்மானத்திற்கும் ஏற்பட்டுள்ளது.

மார்ச் மாத அமர்விற்காக ரவிகரன் சமஸ்டி ஆட்சி அடிப்படையில் அரசியல் தீர்வு சர்வதேச சமூகத்தின் உதவியுடன் உருவாக்கப்படவேண்டும் என பிரேரணையை கொண்டுவந்தார். அதனையே சபை நிகழ்ச்சி நிரலில் சேர்க்காமல் சீ.வீ.கே.சிவஞானம் நிராகரித்துள்ளார்.

ரவிகரன் அந்த பிரேரணையில் "ஒரு நாடு இரு தேசங்கள்" என்ற அடிப்படையில் அரசியல் தீர்வு அமையவேண்டும். அதுவரை இடைக்கால நிர்வாகம் ஒன்று சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையில் உருவாக்கப்படவேண்டும் என குறிப்பிட்டிருந்தார். பிரேரணை தெளிவற்றது என்றும் சர்வதேச சமூகத்திற்கும் வேண்டுகோள் விடுப்பது என்றால் அதன் முகவரி இருக்க வேண்டும் என்றும் கூறி சீ.வீ.கே. சிவஞானம் அதனை நிராகரித்தார்.

தற்போது இன்னோர் செய்தி. பிரேரணை முதலில் மாகாண அமைச்சரவையில் விவாதத்திற்கு எடுத்தபின் சபைக்கு கொண்டு வருவது பற்றி முடிவு எடுப்போம் என முதலமைச்சர் விக்கினேஸ்வரன் வேண்டுகோள் விடுக்க அதனை சீ.வீ.கே.சிவஞானம் நிராகரித்திருக்கிறார். தான் மட்டும் தான் முடிவுகளை எடுக்கவேண்டும் என்பதில் அவர் பிடிவாதமாக நின்றிருக்கிறார்.

வட மாகாண சபை இதுவரை தீர்மானங்களை நிறைவேற்றினார்களே தவிர எந்தவொரு நியதி சட்டங்களையும் ஆக்க வில்லை. அதனை ஆக்குவதற்கு சட்டமா அதிபரின் அனுமதியை ஆளுனர் பெற்றுக்கொடுக்கவேண்டும். ஆளுனரிடம் இதற்கான சட்டமூலங்கள் கொடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் இல்லை. கொடுத்தாலும் அவர் அனுமதியை வாங்கித்தருவார் என கூற முடியாது. ஏற்கனவே கிழக்கு மாகாணசபை சமர்பித்த நியதிச்சட்ட மூலங்கள் ஆளுனர் அலுவலகத்தில் கவனிப்பார் அற்று தேங்கிக் கிடக்கிறது.

மாகாணசபைக்கு சுயாதீனமான சட்டவாக்க அதிகாரம் இல்லை. நிர்வாக அதிகாரம் ஆளுநரிடமே உள்ளது. இந் நிலையில் வடமாகாணசபை என ஒன்று இருக்கின்றது என அடையாளம் காட்டுவது அது நிறைவேற்றும் அரசியல் தீர்மானங்கள் தான். அதற்கும் சிவஞானம் ஆப்பு வைத்துவிட்டார். இனி வடமாகாணசபையினை மக்களும் மறந்து விடுவார்கள்.

## கொக்கிளாயில் சிங்கள மீனவர்களின் அத்துமீறல்

முல்லைத்தீவு மாவட்டம் கொக்கிளாய் பகுதியில் சட்டவிரோதமாக உழவு யந்திரத்தைப் பயன்படுத்தி சிங்கள மீனவர்கள் கரைவலைத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இது கடல்வளத்தை அழிக்கும் ஒரு முயற்சியாகும்.

1983க்கு முன்னர் கொக்கிளாய் பகுதியில் கரைவலை வளைப்பதற்கான அனுமதியை 12 பாடுகளில் 11ல் தமிழர்கள் பெற்று தொழிலைச் செய்தனர். போரின் பின்னர் இப் பாடுகளை தென்னிலங்கை சிங்கள மீனவர்கள் அபகரித்துள்ளனர். சட்டவிரோதமாக உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தியும் தொழிலைச் செய்கின்றனர்.

## ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ...



- முத்தர் அம்மான்

தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளருக்கு அறளை பேந்து போச்சுதோவெண்டு கட்சிக்குள்ள ஒரே குசுகுசுப்பு. தன்னை ஒருத்தரும் மதிக்கிறதில்லையெண்டு மனுசன் வாறபோற இடமெல்லாம் ஒரே புறுபுறுப்பாம். அதிலயும் மாகாணசபைக்காரரை கண்ணிலயும் காட்ட கூடாதெண்டு சீறிச்சினக்கிறதாகக் கேள்வி.

தமிழீழம் கேட்டுப் போராடிய வரலாற்றை இப்போது வடமாகாண சபையின் பிரதம செயலாளர் விஜயலட்சுமிக்கு எதிராக போராடுகிற நிலைமைக்கு கொண்டு வந்து சேர்த்துப் போட்டாங்கள் கூத்தமைப்புக்காரர். ஆளுநரை மாத்தித்தர கேட்டாங்கள். அது நடக்கவில்லையெண்ட உடனே பிரதம செயலாளரை மாத்தித்தர சொல்லி கேட்டாங்கள். இப்ப அதுவும் சரிப்பட்டுவராதெண்டு மஹிந்த சொல்லிப்போட்டார். இனி அதையும் விட்டுட்டு பொத்திக்கொண்டு இருக்கிறதை தவிர வேறை வழியே இல்லை.

வன்னியில மீண்டும் எழும்பிவாறதா அரசாங்கம் நடத்திறது கூத்தெண்டது அம்பலமாயிட்டுது. இப்ப அரசாங்கத்திற்கு தெற்கு தேர்தலில வெல்லவும் புலி தேவையாக இருக்குது. மனித உரிமைகள் பற்றி கதைக்கிறவையின்ர வாய்களை மூடவும், புலி தேவையாகக்கிடக்குது. உந்த கூத்தால கதி கலங்கிப் போயிருக்கிறது குடும்ப வாழ்விற்கு திரும்பியிருக்கின்ற முன்னாள் போராளியள் தான் பாருங்கோ.

வடக்கு முதல்வருக்கெதிராக பிரதம செயலாளர் வழக்குப் போட்ட விசயத்தின்ர பின்னணியினில் மஹிந்த அரசின் கடைக்கண் உத்தரவு இருந்ததாக கேள்வி. அவை தூண்டி விட்டுத்தானாம் கூத்தமைப்புப்கெதிராக அமைச்சர் றிசாத்தின் அலுவலகத்தினில் பத்திரிகையாளர் மாநாடு நடத்தினவையாம். இப்போது வழக்கு விசயத்திலயும் அதே போல தூண்டுதல் தான் காரணமெண்டுது உள்வீடு.

வலி.வடக்கில் மீள்குடியேற காத்திருக்கிற சனத்தின்ர தொகை தொடர்பாக ஆளுக்கொரு புள்ளிவிபரம் சொல்லுகினம். எங்கட யாழ்ப்பாண அரசாங்க அதிபரோ, எண்ணிக்கை முக்கியமில்லை, மீள்குடியமர்வு தான் முக்கியமென்று சொல்லுறார். புதிசா வந்திருக்கிற இராணுவத் தளபதியோ மீள்குடியமர விண்ணப்பித்திருக்கிற ஆக்களின்ர எண்ணிக்கை தான் முக்கியமென்கிறார். நீங்கள் என்ன கணக்கு வழக்கோ பார்த்து தீருங்கோ. முதலில சனத்தை சொந்த இடங்களில குடியமர்த்திப் போட்டு பேசித்தள்ளுங்கோ.

## அமுத வாக்கு



கிழக்கு மாகாண சபையில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவை விலக்கினாலும் எமக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுட னேயே இருக்கின்றனர்.

**பைசர்முஸ்தபா**
**முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சர்**



நாட்டில் முஸ்லீம்களுக்கு எதிராக சில சக்திகளால் முன்னெடுக் கப்பட்ட அராஜகங்களை கட்டுப்படுத்தாமலும், கண்டுகொள்ளாமலும் இருந்தமையினாலேயே தமிழர்கள் போன்று ஐக்கியநாடுகள் சபையில் நாமும் முறையிட்டோம்.

**ஹசன் அலி**
**செயலாளர் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ்**



இலங்கை அரசாங்கத்திடம் இராணுவ பலம் கிடையாது. அது உள்நாட்டில் யுத்தம் ஒன்றினை நடாத்தலாம்.வெளிநாட்டு வல்லரசுகளோடு மோதுவதற்கோ பலப் பரீட்சை காட்டுவதற்கோ இலங்கையிடம் இராணுவப் பலம் இல்லை.இலங்கையிடம் இருக்கக் கூடிய ஒரேயொரு பாதுகாப்புக் கேடயம் இராஜதந்திரம் மட்டுமே.

**தயான் ஜெயதிலக**



அ.தி.மு.க வும், தி.மு.க வும் ராஜீவ் கொலையாளிகள் விடயத்தில் போட்டி அரசியல் நடாத்துகின்றன.

**ஞான தேசிகன்**
**தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்**



பொதுச் சிந்தனையிலிருந்தே ஒரு சமுகத்தின் அரசியல் அதிகாரம் உருவாகிறது. சமூக அமைப்புக்களும் தனிநபர் உறவுகளும் உருவாகின்றன. இன்றைய சூழலில் ஊடகங்கள் வகிக்கும் பங்களிப்பு முதன்மையானது. அதாவது சமூக உருவாக்கத்தை ஊடகங்களே இன்று நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன.

**ஜெயமோகன்**
**எழுத்தாளர்**



நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரின் தலைமை எனக் கூற முடியாது. இப்போதிருப்பது முன்னர் இருந்த கூட்டமைப்பு அல்ல. மக்களின் அவலத்தை பயன்படுத்தி சம்பந்தன் தலைமையினால் கொள்ளையடிக்கப்பட்ட கூட்டமைப்புத்தான் இப்போது உள்ளது. தமிழர் நலனில் அக்கறையுள்ள தேசிய உணர்வாளர்கள் கூட்டமைப்பில் இன்றில்லை.

**கலாநிதி-சிதம்பரநாதன்**
**யாழ் பல்கலைக்கழகம்**



அவருக்கு தமிழராக இருப்பதில் பெருமை இருந்தது.தமிழ் சினிமாவைக் கேலி செய்யாமல் தனது நன்றியறிதலைச் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டார்.நன்கு படித்த ஒரு மனிதன் கிராமத்திற்கு திரும்புவது போல பாலு திரும்பினார்.அவருக்கு எந்த அம்சம் வலுவானது. எது தவறானது. என்பது முழுமையாகத் தெரிந்திருந்தது.

**பாலுமகேந்திரா பற்றி**
**நடிகர் கமல்ஹாசன்**



ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஒடுக்குமுறையானது ஒரு பேரின வாதத்தின் தன்மையை வந்தடைகின்றது. அந்தந்த காலகட் டங்களில் வர்க்கப் போராட்டம் என்பது பல்வேறு வடிவங்களை எடுக்கக் கூடியது. அந்தந்த நாட்டு வரலாற்றுச் சூழ்நிலைக்கொப்ப எடுப்பது முக்கியமாகிறது. இங்கு நடந்தது என்னவென்றால் தேசியம் என்கிற பெயரில் சிங்கள இனவாதத்திற்கு இடமளிக் கப்பட்டது. இந்த இனவாதத்தின் தன்மையை விளங்கிக் கொள்ள நாம் பிந்திவிட்டோம்.

**பேராசிரியர் சிவத்தம்பி**

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அனந்தி தனித்து விடப்படுகின்றாரா?

ஊர்சுற்றி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் தனக்கென தனியான நிகழ்ச்சிநிரல் அமைத்து செயற்படுபவர் அனந்தி - எழிலன் மட்டுமே. ஏனையவர்களுக்கு நிகழ்ச்சி நிரல் என எதுவும் இல்லை. பலர் சம்பந்தன் தலைமையின் நிகழ்ச்சி நிரல் என்னவோ. அதை அப்படியே ஏற்றுக்கொண்டு அதற்கு பின்னால் இழுபட்டுச் செல்கின்றனர். தமது பதவிகளை நீண்ட காலத்திற்கு பாதுகாப்பதற்கும், சிரமங்கள் இல்லாமல் தேர்தல்களில் வேட்பாளர்களாக நிற்பதற்கும், இந்தியாவுடன் முரண்படாத உறவுகளைப் பேணுவதற்கும் அதுவே தகுந்த வழி என அவர்கள் நினைக்கப் பார்க்கின்றனர். சித்தார்த்தன், கஜதீபன், சயந்தன் போன்றோர் இந்த வகையறாக்களைச் சேர்ந்தவர்கள்.

மிகச் சிலர் சிவாஜிலிங்கம், ரவிகரன் போன்றவர்கள் சம்பந்தனின் நிகழ்ச்சி நிரலுக்குள் இருப்பவர்காளகத் தெரியவில்லை. ஆனால் சொந்தமாக எந்த நிகழ்ச்சி நிரலும் இல்லாமல் அந்தந்த நேரம் எவை எவை கைவருகின்றதோ அவற்றினைச் செய்து திருப்திப்படுகின்றனர்.

அனந்திமட்டுமே தனக்கென நிகழ்ச்சிநிரலை வகுத்து அதன் கீழ் செயற்படுகின்றார். அனந்தியின் பின்னணி வேறாக இருப்பதனாலும், காணாமல் போனவர்கள் விடயத்தில் பாதிக்கப்பட்டவராக இருப்பதனாலும் சம்பந்தன் தலைமையின் நிகழ்ச்சி நிரலுக்குள் சிறிதளவு கூட அவரால் நுழைய முடியவில்லை.

புத்திசாலித்தனமாக தனது நிகழ்ச்சி நிரலை அதிகம் பெருப்பிக்காமல் தனக்கு அங்கீகாரத்தை தருகின்ற காணா மல் போனவர் விவகாரம், அவர்களின் குடும்பநலன்கள், குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண்களின் நலன்கள் என்பவற்றில்






அக்கறையைக் குவித்து செயற்படுகின்றார். அவரது நிகழ்ச்சி நிரல் மக்களாலும், சர்வதேச சமூகத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக உள்ளமையினால் சம்பந்தன் தலைமையினாலும் அவரை ஏதும் செய்ய முடியவில்லை.

அரசியல் தீர்மானங்கள் தொடர்பில் செயற்பட்டால் தான் கட்சிக்கட்டுப்பாட்டை மீறுகின்றார் என்ற குற்றச்சாட்டு அவர் மீது விழும். எனினும் போகுமிடங்களில் தன்னுடைய நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்களோடு பத்தோடு பதினொன்றாக தனது அரசியல் நிலைப்பாட்டையும் கூறுவதற்கு அவர் தயங்குவதில்லை.

அனந்தியின் இந்தப்போக்கு சம்பந்தன் தலைமைக்கு தொடர்ச்சியாகவே பெரும் தலையிடியைக் கொடுக்கின்றது. இது ஜெனிவா விவகாரத்திலும் வெளித் தெரிந்தது. ஜெனிவாவிற்கு வடமாகாணசபையின் தீர்மானத்தால் அனந்தியையும் அனுப்பவேண்டிய கட்டாய நிலை சம்பந்தன் தலைமைக்கு ஏற்பட்டது. அனந்தியையும் அழைத்துச் செல்லாவிட்டால் அவர் தனித்துச் செல்வார் என்பது சம்பந்தன் தலைமைக்கு நன்றாகவேதெரியும்.

சம்பந்தன் தலைமையின் ஒரே அச்சம் அனந்தியை நாங்கள் அழைத்துச் செல்லாவிட்டால் தனியே சென்று விடுவார் என்பது தான். இதனால் தான் இந்தத்தடவை சுமந்திரன் தொடர்ந்து சென்றார்.

அங்கு 18 நாடுகளுடனான சந்திப்பில் அனந்தியை வாயே திறக்கவிடவில்லை. புலிப்போராளியின் மனைவி என்பதால் நாடுகளின் பிரதிநிதிகள் தவறாக விளங்கிக்கொள்வர் எதுவும் பேசவேண்டாம் என கட்டளையிட்டதாவும் நாகரீகம் கருதி தான் பேசாமல் இருந்ததாகவும் அனந்தி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். இனி மேல் இவர்களுடன் இணைந்து பயணம் செய்யமாட்டேன் எனவும் கூறியிருக்கின்றார்.

ஜெனிவாவில் நாடுகளின் பிரதிநிதிகளிடம் ஜெனிவா தொடர்பான தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன என்பது பற்றி ஒரு கடிதம் கொடுக்கப்பட்டது. அக்கடிதம் உள்ளடக்கம் பற்றி கூட்டமைப்பிலுள்ள கட்சிகளின் தலைவர்களுடன் எதுவும் பேசப்படவில்லை குறைந்த பட்சம் தமிழரசுக் கட்சியிலுள்ள தலைவர்களுடன் கூட பேசப்படவில்லை. சம்பந்தனும், சுமந்திரனும் மட்டும் பேசி கடிதத்தை தயாரித்துள்ளனர்.

இது பற்றி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் கடிதத்தின் பிரதியைத் தருமாறு கேட்டனர் கொடுக்கவில்லை. குறைந்த பட்சம் உள்ளடக்கத்தினை வாய்மொழி மூலம் கூறுமாறு கேட்கப்பட்டது அதற்கும் பதிலளிக்கப்படவில்லை. கசிந்துவந்துள்ள செய்திகளின்படி கடிதத்தில் சர்வதேச விசாரணை பற்றி எதுவும் கூறப்படவில்லை என்றே தெரிகின்றது.

அனந்தியை பேசவிடாமைக்கு இதுவும் வடமாகாணசபை செயற்பட அழுத்தம் கொடுக்கவேண்டும் என்பதும் சமஸ்டித் தீர்வு பற்றி எதுவுமே இல்லை என்பதும் தான் காரணமாக இருக்கமுடியும். அனந்தி சந்திப்புக்காவது அழைத்துச் செல்லப்பட்டார். சுரேஸ்பிறேமச்சந்திரனுக்கு அதிலும் புறக்கணிப்பு செய்யப்பட்டது. அவர் ஜெனிவாவில் நின்ற போதும் சந்திப்புக்கு அழைத்துச் செல்லப்படவில்லை. சந்திப்புக்குச் சென்ற 05 பேர் கொண்ட குழுவில் சுரேஸ் பிறேமச்சந்திரனுக்கு இடம் கொடுக்கப்படவில்லை. சுமந்திரன், அனந்தி, புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த இருவரும் என நால்வர் சந்திப்பில் கலந்து கொண்டதாகவே தகவல்.

அனந்தி ஜெனிவா செல்வதற்கு விசா இருந்ததினால் மீண்டும் அவர் எவருக்குமே கூறாமல் தனித்து சென்றுள்ளார். அங்கு அவர் இரு தடவைகள் பிரதான கூட்டத்தில் பேசி இருக்கின்றார். 1வது கூட்டத்தில் இலங்கையில் நடைபெறுகின்ற சிறுவர் துஸ்பிரயோகத்தைப் பற்றிக் கூறியிருக்கின்றார். இரண்டாவது தடவை மீண்டும் ஒரு அரசு சார்பற்ற நிறுவனம் சந்தர்ப்பத்தைகொடுத்ததால் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்றும் அதற்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்றும் கூறியிருக்கின்றார்.

இவருடைய இரண்டு உரைகளும் சம்பந்தன் தலைமையின் நிகழ்ச்சிநிரலிற்கு முரணாணவை. இந்தியா பொறுப்புக் கூறல் கடப்பாடு இலங்கைக்கு இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் சர்வதேச விசாரணையையும் விரும்பவில்லை. அது வடமாகாணசபையை செயற்பட அனுமதிக்க வேண்டும் என்பதை மட்டும் ஜெனிவாவில் கோரிக்கையாக வைக்க வேண்டும் என்றே கட்டளையிட்டுள்ளது. அந்தக் கட்டளையைத் தான் கடிதமாக ஜெனிவாவில் சுமந்திரன் சமர்ப்பித்திருக்கின்றார்.

சம்பந்தன் தலைமையின் நிகழ்ச்சி நிரலிற்கு அனந்தி ஆப்பு வைக்கின்றார் என்பது தான் அவர்களுக்கு பலத்த கோபத்தை கிளப்பியுள்ளது. தர்மபுரத்தில் ஜெயக்குமாரி கைது செய்யப்பட்ட விடயத்தில் சம்பந்தன் தலைமை மௌனம் காக்கிறது. அனந்தியை அச்சுறுத்துவதற்காகவே இது மேடையேற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தற்போது காணாமல் போன உறவுகளின் போராட்டத்தில் முன்னிலை வகித்த அருட்தந்தை பிரவீனும், ருக்கி பெர்னாண்டோவும் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தர்மபுரப் பிரச்சினையும் நீட்சியாகவே கருதப்படுகின்றது. சம்பந்தன் தலைமையை மீறி தமிழர் தாயகத்தில் எதுவும் நடக்க கூடாது என்ற முன்னெச்சரிக்கையின் விளைவே இதுவாகும். அருட்தந்தை பிரவீனும் ருக்கி பெர்னாண்டோவும் 21ம் திகதி மன்னாரில் இடம்பெற்ற போராட்டத்தில் முக்கிய பங்கினை வகிக்க இருந்தனர்.

சுமந்திரன் குழு முதலாவது தடவை ஜெனிவா சென்று வந்த பின்னர் அவசர அவசரமாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும், மாகாணசபை உறுப்பினர்களும் அழைக்கப்பட்டு விசேட கூட்டம் ஒன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது. இக் கூட்டத்தில் ஜெனிவா பற்றி எவரும் எதுவும் பேசக் கூடாது என கட்டளையிடப்பட்டது. இதற்கு காரணம் நாங்கள் சமர்ப்பித்த கடிதத்திற்கு மேலதிகமாக கூட்டமைப்பு உறுப்பினர்களிடமிருந்து எதுவும் வரக்கூடாது என்பதே.

இதனால் அமெரிக்காவின் பிரேரணை வந்தவுடன் எகிறிக்குதித்த சுரேஸ்பிறேமச்சந்திரனும் பின்னர் சாந்தமாகி விட்டார். இந்தக் கூட்டத்தில் வைத்துத்தான் அனந்திக்கும் கட்டளையிடப்பட்டது.

இங்கே உள்ள துரதிஸ்டமான விடயம் அனந்திக்காக குரல் கொடுப்பதற்கு கூட்டமைப்பிற்குள் யாரும் இல்லை என்பதே. ஒரு வகையில் கட்சிக்குள் தனித்து விடப்பட்டவராகவே அவர் அங்கு தோற்றமளிக்கின்றார். கட்சிக்கு வெளியே அவருக்கு பெரிய ஆதரவுக் கூட்டம் இருக்கின்றது என்பது மறுப்பதற்கில்லை. காணாமற்போனவர்களின் உறவுகள், பெண்கள், தமிழ்த்தேசிய சக்திகள், புலம்பெயர் உறவுகள் என அவரது ஆதரவுப் பரப்பு மிகவும் விசாலமானது. இந்த ஆதரவுப் பரப்பு தான் வட மாகாண சபைத்தேர்தலில் பிரமிக்கத்தக்க வெற்றியை அவருக்கு பெற்றுக் கொடுத்தது. இதில் தமிழ் ஊடகவியலாளருக்கும் மிகப் பெரிய பங்கு இருந்தது.

ஆனால் அவர் தன்னை பாதுகாத்துக் கொண்டு முன்னேறிச் செல்வதற்கு இந்த ஆதரவுப்பரப்பு மட்டும் போதுமானதல்ல. வினைத்திறன் மிக்க செயற்பாட்டுப்பரப்புத் தேவை. அதை எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றி அனந்தி தீவிரமாக யோசிப்பது நல்லது. நிச்சயமாக கூட்டமைப்பிற்குள் அவருக்கு யாரும் கிடைக்கப் போவதில்லை. அதற்கு வெளியே தான் இந்தச் செயற்பாட்டுக்குப் பரப்பைத் தேட வேண்டும். எல்லாவற்றிற்கும் முதலில் தனக்கு தகுந்த ஆலோசனைகளை உடனுக்குடன் வழங்குவதற்கு ஒரு புலமையாளர் குழுவை அவர் உருவாக்குவது நல்லது. சம்பந்தன் தலைமை தொடர்ச்சியாக அனந்தியின் நிகழ்ச்சி நிரலுக்கு கட்டுப்பாடுகள் விதிப்பின் அதிரடித் தீர்மானங்கள் எடுப்பதற்கும் அவர் தயங்கக்கூடாது.

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி : இல.43, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே இல : 021 222 3739 மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com

## தமிழர் அரசியல் என்பது ஜெனிவாவைத் தாண்டியதே

ஜெனிவாவில் மூன்றாவது தடவையும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். பொறுப்புக் கூறலை பொறுத்தவரையில் சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பில் மீண்டும் இலங்கை அரசாங்கத்தை விசாரணை செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. அத்துடன் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை 2002 – 2009 மே வரையான காலப்பகுதியில் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட "மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் அது தொடர்பான குற்றங்களை" விசாரித்து அறிக்கையிடுமாறும் கோரப்பட்டுள்ளது, அதேவேளை நல்லிணக்கத்திற்கு 13வது திருத்தத்தை அமுல்படுத்துமாறும் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானம் கோரியுள்ளது.

குற்றங்கள் புரிந்தவனிடமே நீதி வழங்கும் பொறுப்பையும் ஒப்படைக்கும் போது அந் நீதி எவ்வாறு இருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. சுயாதீனமான உள்ளக விசாரணை ஒன்றினை இலங்கை விரும்பவில்லை என்பதற்கப்பால் அண்மைக்காலமாக அதற்கான தகுதியும் தனக்கில்லை என்பதை இலங்கை நீதித்துறை வெளிக்காட்டியுள்ளது என சனல்-4 தொலைக்காட்சியின் இயக்குனர் ஹெலும் மக்ரே குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்கம் பற்றிய விடயத்தில் 13 வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் வடமாகாண சபை உட்பட்ட மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை வழங்கவேண்டும் என்றே கூறப்பட்டுள்ளது. 13வது திருத்தப்படி மாகாணசபைகளுக்கு எந்தவித சுயாதீனமும் கிடையாது. ஒற்றையாட்சிக் கட்டமைப்பிற்குள் இருக்கும் இந்த முறைமை எந்த வகையிலும் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கப்போவதில்லை.

மாகாண சபைத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டு அதற்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தினை வழங்கியதுடன் வடமாகாண சபைக்கு மக்கள் அளித்த வாக்குகள் 13ம் திருத்தச் சட்டத்திற்கான மகத்தான மக்களாணை என்று திரிபுபடுத்தி சர்வதேச மட்டத்தில் சித்தரித்துமுள்ளது. அதன் விளைவே தமிழ் மக்களின் அரசியல் தீர்வை சர்வதேசம் 13ம் திருத்தச் சட்டத்திற்குள் முடக்குவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

மாகாண சபையை தீர்வாக ஏற்றுக்கொண்டதாக கூட்டமைப்பு காட்டிக் கொண்டதன் விளைவாக தற்போது இலங்கையில் இனப்பிரச்சினை என்பது முடிவுக்கு வந்துவிட்டதாக கருதிய சர்வதேச சமூகம் தற்போது இலங்கையில் நடைபெறுவது சிறுபான்மை மதங்களுக்கு எதிரான வன்முறைகள் மட்டுமென தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான வரலாற்றுப் பழியினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

தீர்மானத்தில் கிழக்கு மாகாணம் பற்றி எதுவும் பேசப்படவில்லை. தமிழ் மக்களின் கூட்டிருப்பை பேணுவதற்கும் கூட்டுரிமையை பெற்றுக் கொள்வதற்கும் வட-கிழக்கு இணைந்த தாயகம் அவசியம்.

துரதிஸ்ட வசமாக மக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபை பற்றி மட்டுமே குறிப்பிட்டுள்ளதாகவும், கிழக்கு மாகாணம் பற்றியோ, சர்வதேச விசாரணை பற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை என்றும் செய்திகள் வருகின்றன.

ஜெனீவா தீர்மானத்தினத்தை கவனமாக உற்றுநோக்கின் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகிற்கும், இந்தியாவிற்கும் சீனாவின் ஆதிக்க வட்டத்திற்குள் சென்றுகொண்டிருக்கும் இலங்கைத்தீவின் ஆட்சியாளர்களை தமது ஆதிக்க வட்டத்திற்குள் கொண்டுவரச் செய்வதற்கான அழுத்தக்கருவியாக மட்டுமே ஜெனீவா களத்தினை பயன்படுத்துவதாக உணரமுடிகின்றது. இத்தீர்மானத்தின் உள்ளடக்கமானது அதனைத் தாண்டி தமிழ் மக்களுக்கு எத்தகைய அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பதோ, தமிழ் மக்கள் எதிர்கொண்ட அநீதிகளுக்கு நீதி பெற்றுக் கொடுப்பதாகவோ தென்படவில்லை. அத்துடன் குறைந்தபட்சம் தற்போதும் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அநீதிகளை தடுத்து நிறுத்துவதற்கோ, இனிமேலும் அநீதிகள் இழைக்கப்படாமல் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கோ இத்தீர்மானம் எந்த ஏற்பாட்டையும் கொண்டிருக்கவில்லை என்றே நம்தேசம் கருதுகின்றது.

அவ்வாறு இருந்திருந்தால் ஜெனீவா கூட்டத்தொடரில் இத் தீர்மானம் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த காலப்பகுதியில் தமிழர் தாயகப் பகுதியில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழான அரசியல் கைதுகளோ, சட்டவிரோத இராணுவ சுற்றிவளைப்புக்களோ இடம்பெற்றிருக்க மாட்டாது.

சீனாவின் பிடியிலிருந்து சிறீலங்காவின் ஆட்சியாளர்களை தமது செல்வாக்கு வட்டத்திற்குள் கொண்டுவருவதற்கு மேற்குலகும் இந்தியாவும் செய்யும் முயற்சிகளுக்கு தமிழ் மக்கள் ஒருபோதும் எதிரானவர்கள் அல்ல. ஆனால் தம்மை பயன்படுத்தி அந்த முயற்சியை மேற்கொள்ளும் போது தமக்கும் நன்மை ஏற்படவேண்டும் என்பதுமட்டுமே தமிழ் மக்களின் வேணவாவாகும்.

தமிழ் மக்களை கறிவேப்பிலை போன்று பயன்படுத்தும் எத்தகைய முயற்சிக்கும் தமிழ்த்தலைமை துணை போகக்கூடாது என்பதே நம்தேசத்தின் நிலைப்பாடாகும். இதனை புரிந்து கொண்டு தாயகம், தமிழகம், புலம்பெயர்தேசம் எங்கும் வாழும் தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டு செயற்படவேண்டும்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை என்பது தமிழ் மக்களின் உரிமைகளை வெல்வதற்கான எமது பாதையில் ஓர் படி மாத்திரமேயாகும். உண்மையில் அது மட்டுமே எமது உரிமையை அடைய பொருத்தமானதும் போதுமானதுமான களமல்ல. ஆனால் தற்போது தமிழ் தரப்புகளின் அரசியலானது ஜெனீவாவை மட்டுமே மையப்படுத்தியதாகக் காணப்படுவது ஆரோக்கியமானதல்ல. அந்த குறுகிய வட்டத்தை தாண்டி நாம் எமது அரசியல் இலக்கை நோக்கி பரந்த அளவில் செயற்பட தயாராகவேண்டும்.

## ஜெனிவா தீர்மானத்தை இந்திய அரசு நீர்த்துப் போகச் செய்கின்றது

### தோழர் - செந்தில்

இலங்கையில் இடம்பெற்ற இனப்படு கொலைகளுக்கு சுயாதீன சர்வதேச விசாரணை நடாத்த வேண்டும் எனக் கோரியும், இதற்கான தீர்மானத்தை இந்திய அரசு ஐ.நா.மனித உரிமை கவுன்சிலில் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தியும் சேவ் தமிழ் இயக் கத்தின் ஏற்பாட்டில் தமிழக குடிமைச் சமூகத்தினர் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடாத்தினர்.



மார்ச் மாதம் 16ம் திகதி சென்னை வள்ளுவர் கோட்டம் முன்பு இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த சமூகச் செயற்பாட்டாளர்கள் இப் போராட்டத்தில் பங்கு கொண்டனர். இனப்படுகொலைக ளுக்கு சர்வதேச விசாரணை வேண்டும். 13வது திருத்தத்தை திணிப்பதை நிறுத்து போன்ற கோஷங்கள் ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப்பட்டன.

சேவ் தமிழ் இயக்கத்தின் ஒருங்கி ணைப்பாளர் தோழர் செந்தில் பேராசி ரியர் சரஸ்வதி,தோழர் தியாகு தமிழ்நாடு மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த இளை யராஜா, தொழிலாளர் சீரமைப்பு இயக் கத்தைச் சேர்ந்த தோழர் சேகர், திராவிடர் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த சட்டத் தரணி அருண், கடலோர மக்கள் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த தோழர் ஜெயக்குமார், எழுத்தாளர் சந்திரா, பேராசிரியர் குழந்தை உட்பட பலர் இப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

சேவ் தமிழ் இயக்கத்தின் ஒருங்கி ணைப்பாளர் தோழர் செந்தில் உரை யாற்றும் போது அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தில் சர்வதேச விசாரணை என்கின்ற விடயத்தைச் சேர்த்து அதனை வலுப்படுத்தாமல் இந்திய அரசு அதனை நீர்த்துப் போகச் செய்வதிலேயே வேகம் காட்டிவருகின்றது. தமிழகத்தில் தேர்தல் கட்சிகள் ஜெனிவா பற்றி கள்ளத்தனமாக மௌனம் காத்து வருகின்றனர். அமெரிக் கத் தீர்மானத்தின் இரண்டாவது வரை வில் மாற்றப்பட்டுள்ள இலங்கை அரசை கலந்தாலோசித்த பின்னரே முடிவுகள் எடுக்கப்படவேண்டும் என்ற வரி இந்திய அரசின் தலையீட்டை அம்பலப்படுத்துகின்றது. இந்தியா அமெ ரிக்கத் தீர்மானத்தில் சர்வதேச விசா ரணை தேவை என்பதை கொண்டு வர வேண்டும் எனக் கோரி நாம் போராட்டங்களை நடாத்த வேண்டும் என்றார்.

அவர் மேலும் கூறுகையில் 2009ம் ஆண்டு மே 19ம் திகதி போர் முடிந்த நாளிலிருந்து இன்று வரை 1500க்கும் மேற்பட்ட நாட்கள் கடந்துவிட்டன. இந் நாட்களிலும் அதற்கு முன்னதாகவும் இலங்கையில் நடந்து கொண்டிருப்பது இனப்படுகொலை என்பதை தமிழ் நாட்டில் எவரும் மறுக்கவில்லை. ஆனால் இந்த ஐந்து ஆண்டிலே இந்திய நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அதனை பன்னாட்டு அளவில் எடுத்துச் செல்லக் கூடிய வலிமை பெற்றிருக்கவில்லை. ஈழச் சிக்கலை முன்னிட்டு தமிழ் நாட்டில் போராட்டம் கொழுந்து விட்டெரிந்தால் இந்திய அமைச்சரவை கூடி தீர்மானத்தை கொண்டு வர முயற்சிக்கலாம்.

தமிழ்நாடு சக்திகளும், புலம் பெயர் சக்திகளும் ஐ.நா அவைக்குள்ளேயே தமிழ் மக்களின் விடுதலையைப் பெற்று விட முடியும் என நினைக்கின்றனர். தமிழ் மக்களின் விடுதலை என்பது ஈழத்தில் தான் இருக்கின்றது. தாயகத் திலிருந்து போராடுவதன் மூலமே சிங்கள பேரினவாத அரசை முறியடிக்க முடியும். தமிழ் நாட்டில் இருப்பவர்களோ விடுதலை வாங்கி தங்கத் தாம்பாளத்தில் வைத்து தமிழ் மக்களுக்கு கொடுக்க முடியாது. தமிழ்நாட்டு மக்களுடைய போராட்டங்கள் எல்லாம் ஈழத் தமிழர் போராடுவதற்கான அரசியல் வெற்றி யினை உருவாக்கிக் கொடுப்பதாகவே இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் தைச் சேர்ந்த தோழர் தியாகு உரை யாற்றுகையில் "போர்க்குற்றமல்ல. இனப்படுகொலை என்பது தான் சரி என்ற வாதம் தவறானது. இடம்பெற்றது போர்க்குற்றங்கள் மட்டுமல்ல தமிழர்கள் படுகொலைக்கும் உள்ளானார்கள் என நாம் கூறவேண்டும். தமிழர்கள் மீதான இனப்படுகொலை என்பது இலங்கை அரசு தொடர்ச்சியாக தமிழர்கள் மீது மேற்கொண்டு வரும் இனவழிப்பு, போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் என்பவற்றின் கூட்டேயாகும். முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட ஒரு இலட்சத்திற்கும் மேலான தமிழ் மக்களுக்கான நீதியை நாம் கோரவேண்டும்.

எனவே இலங்கை அரசு தமிழர்கள் மீது நடாத்தியுள்ள இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மனித குலத்திற்கெதி ரான குற்றங்கள் பற்றி சர்வதேச விசா ரணை வேண்டும் என்பதே நமது கோரிக்கையாக இருக்கவேண்டும். நாம் இந்திய ஒன்றியத்தில் உள்ள தமிழ் நாட்டில் இருப்பதால் நமது போராட் டத்தை இந்திய அரசிற்கு எதிராக ஒருங்கிணைத்து நடாத்தவேண்டும் என்றார்.

பேராசிரியர் சரஸ்வதி பேசும் போது இலங்கை அரசு தமிழர்களை இனப் படுகொலை செய்வதற்கு முன்பும், பின்பும் இந்திய அரசு அதனை ஆத ரித்து வருகின்றது. ஆனாலும் சர்வ தேச விசாரணைப் பிரேரணையை ஜெனீவாவில் இந்தியா கொண்டுவர நாம் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றார்.



# பரிணாம வளர்ச்சி பெற்றுவரும் தமிழகப் போராட்டங்கள்

**சூரியவேந்தன்**

ஈழத் தமிழர்கள் தொடர்பான தமிழக மாணவர்களின் போராட்டங்கள் பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது. தேர்தல் பரப்புரைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காலப்பகுதியில் பரிணாம வளர்ச்சி பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

இது விடயத்தில் தமிழக மாணவர் அமைப்புக்களும், இளைஞர் அமைப்புக் களும் பல்வேறு பரிசோதனை முயற்சிகளை செய்வது இங்கு முக்கியமானது. அரசியற் கட்சிகள் தேர்தல் பரப்புரைகளில் குதித்துள்ளதால் தற்போதைய போராட்டங்கள் முழுக்க முழுக்க சிவில் சமூகப் போராட்டங்களாகவே உள்ளன, தேர்தல் காலம் என்றபடியால் படையினரின் கெடுபிடிகள் சற்றுக் குறைவாக உள்ளது. ஒரு வகையில் போராட்டங்கள் ஜெயலலிதாவின் வாக்கு வங்கியினை அதிகரிக்கச் செய்யக் கூடியது என்பதால் அவரும் மாணவர் போராட்டங்களை வரவேற்கலாம்.

மாணவர்கள் போராட்டங்கள் பல வகைப்பட்டதாக உள்ளது. ஒரு பக்கத்தில் மரபு ரீதியான ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள் என்பவற்றை மேற்கொள்கின்ற அதேவேளை மறுபக்கத்தில் பொருளாதாரப் பகிஸ்கரிப்பு என்ற வகையிலும் அது பரிணாமம் அடைந்திருக்கின்றது. இந்தத் தடவை அவர்கள் ஐ.நாவினையும், அமெரிக்காவினையுமே அதிகம் இலக்கு வைத்திருக்கின்றனர். இந்த இலக்கு சரியானதா? என்பதில் மாறுபட்ட கருத்துக்களும் உள்ளன. ஐக்கியநாடுகள் சபை அலுவலகத்திற்கு முன்னால் நடாத்திய போராட்டங்களும் சற்று வித்தியாசமானவை. ஐ.நா அலுவலகத்திற்கு முன்னாலான போராட்டங்களை முன்னர் அதிகளவில் புலம் பெயர் தமிழர்களே நடாத்தியிருந்தனர்.

ஆனால் இங்கு குறிப்பிடத்தக்க பரிணாம வளர்ச்சியாக இருப்பது அமெரிக்க பொருட்களை பகிஸ்கரிக்கும் போராட்டம் தான். கே.எவ்.சி (KFC) என அழைக்கப்படும் அமெரிக்க உணவு நிலையங்களிலும் அமெரிக்க விற்பனை நிலையங்களிலும் இப் போராட்டங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இவை நிச்சயம் ஒரு வலுவான செய்தியைச் சொல்லும். தேசிய இனப் பிரச்சினையின் கனதியை துலாம்பரமாக வெளியில் காட்டும்.

வல்லரசுகள் தங்கள் நலன்களுக்கு நிர்ப்பந்தங்கள் வரும் வரை கொள்கை மாற்றங்களை பெரியளவிற்கு செய்வதில்லை. அந்த நிர்ப்பந்தங்கள் அதிகளவில் பாதுகாப்பையும், பொருளாதாரத்தையுமே மையப்படுத்தி உள்ளன. நாடுகளுக்கிடையிலான உறவுகளையும் இவ் இரண்டுமே அதிகளவில் தீர்மானிக்கின்றன.

அமெரிக்க தலைமையிலான மேற்குலக - இந்தியக் கூட்டு இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்ய முற்படுவதற்கு காரணம் இலங்கைத்தீவின் மீதான சீனாவின் ஆதிக்கமே. புவிசார் அரசியல் ஆய்வாளர்கள் அனைவரும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஜெனி வாக்களம் கூட அதற்காக உருவாக்கப்பட்டதே! நண்பர் நிலாந்தன் அழகாக ஜெனி வாக்களத்தினை அமெரிக்க இந்தியக் கூட்டிற்கும் சீனாவிற்கும் இடையிலான கயிறிழுத்தல் போட்டி என வர்ணித்தார்.

இந்த வல்லரசுகள் இரண்டுமே இலங்கைத்தீவின் கேந்திர அமைவிடத்தை மையமாக வைத்து இக் கயிறிழுத்தல் போட்டியில் ஈடுபட்டாலும் அங்கு பாதுகாப்பும் பொருளாதாரமும் மையமாக உள்ளன. சீனாவிற்கு தனக்கான மூலப்பொருட்களை கொண்டுவருவதற்கும் முடிவுப்பொருட்களை கொண்டு செல்வதற்கும் பாதுகாப்பான போக்குவரத்துப் பாதை தேவையாக உள்ளது. இந்தியாவிற்கு போக்குவரத்துப்பாதையுடன் தனது தெற்கு வாசலை பாதுகாப்பு நெருக்கடியில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய தேவையும் இருக்கிறது. இலங்கைத்தீவின் மீதான சீனாவின் ஆதிக்கம் இந்தியாவிற்கு பாதுகாப்பு, பொருளாதாரம் என இரட்டை நெருக்கடிகளை கொடுக்கக் கூடியது.

பிரித்தானியர் இலங்கை,இந்தியா என்கின்ற இரு நாடுகளையும் ஆட்சி செய்த காலத்தில் பிரித்தானியா இந்தியாவின் பாதுகாப்புக் கொள்கை இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக்குள் தான் இலங்கை இருக்கின்றது என்பதாகும். இலங்கையை பிரித்தானியர் கைப்பற்றியதன் நோக்கமே இந்தியாவை பாதுகாப்பதற்கு தான் என்ற கருத்தும் பரவலாக அப்போதிருந்தது.

பிரித்தானியர் காலத்தில் அதன் பொருள்சார் நலன்கள் இந்தியாவை மையப்படுத்தி இருந்தனவே தவிர இலங்கையை மையப் படுத்தி இருக்கவில்லை. இலங்கையை பிரித்தானியர் கைப்பற்றி நீண்டகாலத்தின் பின்னர் தான் பெருந்தோட்டத் துறையை ஒரு வலுவான பொருள்சார் வளமாக கட்டியெழுப்பினர்.

எனவே இலங்கையைக் கைப்பற்றிய போது அதன் இலக்காக இருந்தது பாதுகாப்பு அம்சமே. தற்போதும் இலங்கை தொடர்பில் இந்திய கொள்கை வகுப்பாளர்களிடையே முன்னிலை வகிப்பது பாதுகாப்பு அம்சமே.

இதற்காக பொருள்சார் நலன்கள் இல்லை என்று கூற முடியாது. இலங்கையில் இந்தியாவின் முதலீடுகள் அதிகம் உள்ளன. சீனாவைப் போல தூர கிழக்கிற்கான போக்குவரத்துப் பாதை இந்தியாவிற்கும் தேவையாக உள்ளது. சேது கால்வாய்த்திட்டம் உருவானால் கூட பெரிய கப்பல்கள் செல்வதற்கான போக்குவரத்துப் பாதையாக அது இருக்கும் எனக் கூற முடியாது. அவ்வாறாக இருந்தால் கூட இலங்கையின் வடபகுதியில் இந்தியாவின் ஆதிக்கம் இருக்கும் போதே இப் பாதையையும் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்.

எனவே அதிகம் துருத்திக் கொண்டிருக்கும் இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களை பொறுத்த வரை இலங்கைத்தீவு மட்டும் கேந்திர இடமல்ல. தமிழ்நாடும் ஒரு வலுவான கேந்திர இடம் தான். தமிழ்நாட்டை அமைதியாக வைத்திருப்பதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்பு பொருளாதார நலன்களை மட்டுமல்ல. அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்தின் கேந்திர பொருளாதார நலன்களும் பாதுகாக்க முடியும்.

பாதுகாப்பினைப் பொறுத்த வரை இந்தியாவிற்கு தமிழ்நாடு வேறு ஒரு வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தியாவின் வடக்கு,மேற்கு,வடகிழக்கு பகுதிகளில் ஒரு வில் போல பாதுகாப்பு பிரச்சனை உள்ளது. இதனால் இந்திய அரசு தனது பாதுகாப்பு மையங்களை தெற்கிலேயே நிறுவியிருக்கின்றது. அது தமிழ் நாட்டில் அதிகளவில் இல்லாவிட்டாலும் தெற்கு மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகம், கேரளம் என்பவற்றில் உள்ளன. அவற்றை பாதுகாப்பதற்கும் தமிழ்நாடு முக்கியம்.

மத்திய அரசின் பன்மைத்தன்மை. அதாவது ஒரு கட்சி மட்டும் தனித்து அரசாங்கத்தை அமைக்க முடியாது என்ற நிலை. தமிழ் நாட்டை அரசியல் நிலையில் முக்கியத்துவப் படுத்தினாலும் புவிசார் அரசியல் என்ற வகையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமும் தமிழ்நாட்டிற்கு உண்டு. தமிழ் நாட்டின் இக் கேந்திர முக்கியத்துவம் பற்றி அரசியலாளர்கள் பெரியளவில் பேசாததினால் இது வரை வெளியில் வரவில்லை.

மாணவர்களின் போராட்டம் இந்த வகையில் முக்கியத்துவம் பெறுவதையும் நாம் கவனிக்க வேண்டும். அமெரிக்க பொருட்களைபகிஸ்கரித்தல் மூலம் உலகத் தமிழ் மக்கள் அமெரிக்காவிடமிருந்து அந்நியப்படுகின்றனர் என்ற செய்தி அழுத்தமாக கூறப்பட்டுள்ளது. இதுவும் தமிழ் நாட்டின் புவிசார் அரசியலுடன் இணையும் போது அதன் அழுத்தம் இரண்டு மடங்காவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. தமிழ் நாட்டை இழப்பதற்கு இந்தியாவோ அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமோ ஒரு போதும் விரும்பப்போவதில்லை.

மாணவர்களின் பிரதான இலக்கு அமெரிக்காவாகவோ, ஐ.நாவாகவோ இருக்கக்கூடாது. புதுடில்லியாக இருக்க வேண்டும் என்ற வாதமும் முன்வைக்கப்படுகின்றது. இந்த வாதம் புறக்கணிக்கத்தக்கதல்ல. மாணவர்கள் புதுடில்லிக் கூடாக அமெரிக்காவிற்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப் படுகின்றது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை புதுடில்லி அசைந்தால் தான் உலகம் அசையும் என இவர்கள் வாதிடுகின்றனர். இன்று சர்வதேச ரீதியாக மகிந்தர் அரசினைக் காப்பாற்றுவது புதுடில்லி தான். இது அனைவருக்கும் வெளிப்படையாகத் தெரிந்த ஒன்று.

தமிழக அரசியல் சக்திகளின் இலங்கை அரசிற்கு சார்பான தற்போதய கடமை புதுடில்லியை முதலில் நடுநிலைக்கு கொண்டு வருவது தான். பின்னர் தமிழ்த் தரப்பிற்கு ஆதரவாகக் கொண்டு வருவது பற்றி யோசிக்கலாம்.





புதுடில்லியை அசைக்கக் கூடிய சக்தி தமிழகத்திற்கே உண்டு. தமிழக மாணவர்கள் இந்த விடயத்தை கட்டாயம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

புதுடில்லி தமிழ்நாட்டின் எழுச்சியை எப்படியாவது தடுக்க முனைகின்றது. அது தமிழகத்தின் இந்தப் பரிணாம வளர்ச்சியைத் சிதைப்பதற்கு புதுடில்லி சம்பந்தன்தலைமையை பயன்படுத்த முனைகின்றது. ஆனாலும் தமிழ்நாடு அதையும் தாண்டிய நிலையில் இருப்பதனால் இந்த முயற்சிகள் எதுவும் பெரிய வெற்றியைத் தரவில்லை. கூட்டமைப்பிற்குள் புறுபுறுத்துக் கொண்டிருக்கும் மாவை, ஸ்ரீதரன், சுரேஸ் போன்றவர்களுக்குத் தான் அது பலத்த சங்கடங்களை கொடுக்கின்றது.

சம்பந்தன் தலைமைக்கு தமிழ்நாடு டயல் போறாவிற்கு அப்பால் புதிய தலையிடியாக உள்மட்டத்தில் அனந்தியும் எழுச்சியடைகின்றார். கட்சிக்கு வெளியே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பெரியசவால். இந்த நாற்பெரும் சவால்களுக்கு முகம் கொடுப்பது சம்பந்தன் தலைமைக்கு எதிர்காலத்தில் இலகுவாக இருக்கப்போவதில்லை.

வணக்கம் வணக்கம் நான் கல்வயல் கனக சிங்கம். இந்த முறையும் ஜெனீவாவில எங்கட சனத்துக்காக முன்னணிகாரர் உறுதியா குரல் எழுப்பி இருக்கினம். ஆனாலும் அரசுக்கு பாடம் புகட்டப் போறம் எண்டு சொல்லிக்கொண்டு ஜெனீவா போன தேசிய பட்டியலும் கிளி ராசாவும் அங்க உள்ள சிறிலங்க தூதரகத்தில உறவு கொண்டாடின கதை அம்பலமாகி சனம் கொதிச்சுக்கொணடு இருக்குது. ஜெனிவாவில பேச வடமாகாண சபை ஏகமனதாக தெரிவு செய்து அனுப்பின அனந்தி சசிதரனை வாயையே திறக்க கூடாதெண்டு சுமந்திரன் மிரட்டினதை அந்தப்பிள்ளை போட்டுடைச்சுப்போட்டுது. கூத்தமைப்பின்ர மற்ற எம்பிமாரைப் போல இரு எண்டால்இருக்கிறதுக்கும்நில்எண்டால்எழும்பி நிக்கிறதுக்கும் ரோசம், மான மொண்டுமில்லாத இனமே. அந்த பிள்ளை வாழ்ந்து வந்த இடம் அப்படி. எவனுக்கும் அடி பணியாத, நிமிர்ந்து நின்ற வீரம் விளைஞ்ச மண்ணில இருந்தெல்லோ வந்த பிள்ளையவள்.




# கனவுகள் மெய்ப்பட வேணும் பாருங்கோ

அவள் பிள்ளை தெளிவாக நிக்கிறாள். அண்ணை நாங்கள் எவ்வளவினை கண்டு வந்தனாங்கள். உவங்கள் நினைக்கிறாங்கள் நிலையில்லாத உந்த கதிரைகளை கட்டிப்பிடிச்சுக் கொண்டு தூங்கி வழிவமெண்டு. கைவிட்டுப் போகக் கூடாதெண்டு நினைச்சுக் கொண்டிருந்ததுகளே இல்லையெண்டு ஆனாப்பிறகு, இதுவெல்லாம் தூசுக்கு சமம் எண்டு அந்தப்பிள்ளை கிழிச்சுப் போட்டுப் போகுது பாருங்கோ. அது தான் ரோசம் மானத்தின்ர வெளிப்பாடு.

இஞ்சால ஒரு பக்கத்தை விருப்பமில்லாட்டிப் போங்கோ, போங்கோவெண்டு சம்பந்தமானவர் திட்டி தீர்க்கிறாராம். உவங்களிற்கு ரோசம், மானமெல்லாம் இல்லையோவெண்டு சிங்கக் கொடி காத்த வீரன் கேள்வி கூட நாக்கைப் புடுங்கிற மாதிரி கேட்டவராம். ஆனால் நாங்கள் வெளியில போகமாட்டமெண்டு காலைப்பிடிச்சு கெஞ்சிக் கொண்டிருக்கிறதா கேள்வி. ஒட்டும் வேண்டாம், உறவும் வேண்டாமெண்டு சொல்லிப் போட்டுப் போக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்காரர் போல மற்றவங்களிற்கும் சொரணை இருந்தால் ஏன் இந்த நாய் பிழைப்பு பாருங்கோ.

ஜெனீவாவில தேசியப்பட்டியல்காரர் செய்த லீலைகள் கொஞ்ச நஞ்சமில்லை பாருங்கோ. இலங்கையை காப்பாத்த ஆள் தலையால நடந்திருக்குது. ஆனால் இஞ்சை கொஞ்சப் பேர் வக்காளத்து வாங்கி அவரை காப்பாற்ற படாதபாடு படுகினம். என்ன எல்லாம் மும்மூர்த் தியளின்ர கடைக்கண் பார்வைபட்டால் எலும் புத்துண்டேனும் கிடைக்குமெண்ட நப்பாசை தான். அதுக்காகத்தான் எப்போது பார்த்தாலும் ஒரே குரைப்புச் சத்தம்.

ஆனாலும் வெளியில உங்கட பருப்பு அவி யாதெண்டது இந்த முறை தெளிவாகிப் போட்டுது. ஒரு பக்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன் னணிக்காரர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தலைமையிலும், சிவில் சமூக அமைப் புக்கள், புலம் பெயர் அமைப்புக்கள், தன்னார்வ அமைப்புக்களெண்டு பலமாக ஒருங்கிணைஞ்சு குரல் கொடுத்திருக்குதுகள். கட்சியும் கத்தரிக் காயுமெண்டு தூக்கி வீசிப்போட்டு தனி ஆளாக அனந்தி மட்டும் நாலு தடவை கூட்டத்தொடரில பேசியிருக்கிறார். இன அழிப்பு என்றதை எல் லோரும் உறைக்க சொல்லியிருக்கினம். அதிலும் தனித் தமிழில பேசி சாதனையும் படைச் சிருக்கிறார்.

அது ஒரு புறமிருக்க ஜெனீவா கூட்டத்தொடரை முன்னிட்டு மக்கள் போராட்டங்களிற்கு விடுமுறை விட்டிருந்த கூட்டமைப்புக்காரர் இனி நாங்கள் பழையபடி போராடப்போறமெண்டு அறிவிச்சிருக்கினம். பேப்பரில போட்டோ வந்தால் போதும். அவைக்கு வெற்றி, போராட் டம் வென்றதோ, தோற்றதோவெண்டு அவைக்கு அக்கறையில்லை பாருங்கோ.

கிளிநொச்சியில நடந்த கைதுகளிற்கு எதிராக வடமாகாணசபையின் கூத்தமைப்புக்காரர் ஆர்ப் பாட்டமொன்று நடத்தினவை. மத்தியான சாப் பாட்டு நேரத்தில ஏதோ கொஞ்சத்தை ஒதுக்கி, ஒரு வழியாக போராட்டங்களில் எட்டிக்கூடப் பார்த்திராத மும்மூர்த்திகளில ஒருத்தரான முதல மைச்சர் சீ.வி.விக்கினேஸ்வரனை இழுத்து வந்து நடத்தின ஆர்ப்பாட்டம் இது பாருங்கோ. ஆர்ப்பாட்டம் தொடங்கி ஐந்து நிமிடம் கூட ஆகவில்லை. பேப்பர்காரர் பாய்ஞ்சுபாய்ஞ்சு போட்டோ பிடிச்சவை. சரி நான் போட்டு வாறனென்று சொல்லிப் போட்டு அந்த ஆள் வெளிக்கிட்டுப் போட்டுது. பிறகு நின்ற குஞ்சு குருமென்கள் கத்தித் தீர்த்தது தான் மிச்சம்.

எது எப்படி இருந்தாலும் ஜெனீவாவில எங்களிற்கு நல்லது கிட்டுதோ, இல் லையோ கூத்தமைப்புகாரரின்ர போக் கிரித்தன அரசியல் இனி எடுபடாதெண்டது தெளிவாகியிடுத்து. சமூக வலைத்தளங்கள் எல்லாத்திலயும் போட்டு தாளிச்சுக் கொண்டி ருக்கிறாங்கள். 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் 36 மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்கள் இது அதுவெண்டு பெரிய கும்பலை வைச்சுக் கொண்டு மத்தியான சாப்பாட்டு வேளை வரை உண்ணாவிரதம் நடத்திற கூத்தெல்லாம் இனி சரிவரமாட்டுது பாருங்கோ.

மக்களை அணி திரட்டி போராட்டங்களை முன்னெடுக்கின்ற தலைமைகள் தான் இப் போதைய காலத்தின் தேவை. அதுக்கு இப்ப இருக்கிற தலைமைகள் ஒத்துவராவிட்டால் தூ க்கிறதை தவிர வேறை வழியில்லை பாருங்கோ. மக்க ளிற்கு முன்னின்று வழிநடத்துகின்ற தலைமைதான் காலத்தின் தேவை. இந்த அரசாங்கம் தமிழ் சனத்துக்கு ஒரு துரும்பையும் தரமாட்டுதென்றது அப்பட்டமாக தெரிஞ் சிடுத்து. இனி கெஞ்சி கேட்டுக் கொண்டி ருக்கவுமேலாது பாருங்கோ.

மக்கள் துணிஞ்சு வீதிக்கு இறங்கி உரிமையை கேட்கிற சூழல் கனிஞ்சு வருகுது. அதுக்கு மக்களிற்கு நம்பிக்கையூட்டி முன்னிற்க வேண்டியது தலைமைத்துவ பண்பு. அதனால் தான் அந்தப்பக்குவம் கூத்தமைப்பின்ர தற்போதய தலைமையிட்ட இல்லைப் பாருங்கோ.

இணக்க அரசியல் பேசிக்கொண்டிருந்தவைகூட இனி நாக்கு வழிகின்றதுக்கு துண்டு ஈர்க்கும் கிடைக்காதென்ற நிலைக்கு வந்திட்டினம். மஹிந்த அரசாங்கத்திற்கு அரசியல் செய்ய பழையபடி தமிழரின்ர போராட்டம் தேவை யாகக் கிடக்குது. அதுக்காகத்தான் பழையபடி வன்னியில பூச்சாண்டி காட்ட தொடங்கியி ருக்கிறதா கேள்வி.

காணாமல் போனோருக்காக குரல் கொடுத் தவையினையும் கைது செய்யினம். அது பற்றி கேட்டறிய வந்தவையினையும் பிடிக்கினம். வெள்ளைவான், இனம் தெரியாத சடலம் அது, இதுவெண்டு பழையபடி அரசாங்கம் சொல் லிதிரிஞ்ச வடக்கின் வசந்தம் வந்திட்டுது பாருங்கோ.

# நையாண்டியார் பதில்கள்

**சாவகச்சேரி**

**கேள்வி – இந்திய பாராளுமன்ற தேர்தல் என்ன சொல்லப் போகின்றது?**

**பதில்** – முள்ளிவாய்க்காலில் காவு கொண்ட உறவுகளிற்கு இம்முறை பதில் கிடைக்கலா மென்றே தெரிகின்றது. காங்கிரஸ் கட்சியினில் மூத்த தலைவர்கள் தோல்விப் பயத்தினில் தேர்தலே வேண்டாமென ஓடுவதாக கேள்வி. தமிழகத்தில் அனைவரும் கைவிட்ட நிலை யினில் காங்கிரஸ் கட்டுப்பணத்தையாவது தக்க வைக்குமா என்பதே மிகப் பெரிய கேள்வி.

**ப.புதியவன், விடத்தல் தீவு,மன்னார்**

**கேள்வி– ஜெனீவா தமிழர்களை கைவிட்டுவிட் டதா?**

**பதில்–** வீதி விளக்கு எரியாவிட்டாலும்,குழாயில் தண்ணீர் வராவிட்டாலும் ஜெனீவாவில் முறையிடப் போவதாகச் சொன்ன கூட்டமைப்புக் காரரே இதற்கு பதிலளிக்க வேண்டும். அதிலும் ஜெனீவாவில் தங்கியிருந்தும், உலகமெங்கும் ஓடித்திரிந்தும் பாடுபட்ட சுமந்திரனிற்கே எல்லா மும் தெரியும்.

**க.நியூமன், நாவாந்துறை, யாழ்ப்பாணம்**

**கேள்வி– வடக்கில் தொடரும் கைதுகள், கடத் தல்கள், தேடுதல் வேட்டைகள் எதை வெளிக் ககாட்டுகின்றது?**

**பதில்–** தமிழர் தாயகத்தில் அமைதியான சூழல் ஏற்பட தெற்கு ஆட்சியாளர்கள் என்றுமே விரும்பப் போவதில்லையென்பது உறுதியாகியி ருக்கின்றது. அவர்களது தேர்தலுக்கான அரசி யலிற்கு இத்தகைய நாடகங்கள் அரங்கேற்றப்பட வேண்டியது காலத்தின் தேவையாக அவர்க ளிற்கு இருக்கின்றது.

**ப.சைந்தவி, மல்லாவி, வன்னி**

**கேள்வி– தொடரும் மனித நேய செயற்பாட் டாளர்களது கைதுகள் எதனை வெளிப்படுத்தி நிற்கின்றது,**

**பதில்–** இலங்கை அரசிற்கு இருந்து வந்த ஜெனீவா கொஞ்ச நஞ்ச பயமும் இனி இல்லை யென்றாகிவிட்டது. அந்த வகையினில் இலங்கை அரசிற்கு தலையிடி தருபவர்களாக இருந்த வர்கள் மனித உரிமை செயற்பாட்டாளர் களே. அவர்களையும் முடக்கிவிட்டால் கூட்ட மைப்பினரின் வீரவேசப் பேச்சுக்களை பத்தி ரிகைகளில் பார்த்துக் கொண்டால் சரி.

**சதிகாந், குப்பிழான்**

**கேள்வி – ஜெனிவாவில் அமெரிக்கத் தீர்மானம் தொடர்ந்தும் திருத்தம் செய்யப்படுகின்றதே?**

**பதில்** – கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைதான் போர்க்குற்றம் மனித உரிமை விவகா ரமாக சுருங்கியிருக்கின்றது.

# தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து கிழக்கு மாகாணம் விலக்கப்படுகின்றதா?

– முத்துக்குமார்

தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து கிழக்கு மாகாணம் மெல்ல, மெல்ல விலகிச் செல்கின்றதா? என்ற சந்தேகம் தமிழ்த் தேசிய ஆர்வலர்களிடையே இன்று எழுந்துள்ளது. வட - கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை என கிழக்கு முன்னேறிய பிரிவினர் சிலர் நினைப்பதும், உடனடிப்பிரச்சனையாக முஸ்லிம்களுடனான முரண்பாடு இருப்பதால் அரசாங்கத்தின் ஆதரவுடனேயே அதற்கு



முகம் கொடுக்க முடியும் எனக் கருத முற்படுவதும் இச் சந்தேகத்தை கிழப்பியுள்ளது.

இந்தப் போக்கு ஆரம்பத்தில் கல்முனையில் தோன்றி இன்று மட்டக்களப்பு, திருகோணமலை என கிழக்கு மாகாணம் முழுவதும் பரவுகின்றது. கல்முனையில் தமிழ் பிரதேச செயலாளர் பிரிவினை மூடப் போகின்றனர் என்ற செய்தி வந்ததும் கல்முனை தமிழ்ப் பிரதிநிதிகள் கொழும்பு சென்று பொதுபலசேனாவை

**அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு நண்பர்" தங்கள் பிரதேசத்தில் விகாரை கட்டுவதா?, பள்ளிவாசல் கட்டுவதா? ஏன்ற பிரச்சினை வந்தால் நாம் விகாரையை கட்டுங்கள் எனக் கூறுவோம்." எனத் தெரிவித்தமை முரண்பாட்டின் உச்சத்தை காட்டுகின்றது.**

அழைத்து வந்தனர். இன்று தமிழ் பிரதேச செயலாளர் பிரிவினை தரம் உயர்த்தும் போராட்டங்களையும் நடவடிக்கைகளையும் பொதுபலசேனா தலைமையிலேயும், கல்முனை பௌத்த விகாரபதி தலைமையிலேயுமே கல்முனை தமிழர்கள் முன்னெடுக்கின்றனர். அம்பாறை மாவட்ட சிங்கள அரசியல் தலைவர்களும் இதற்கு ஒத்துழைக்கின்றனர்.

அமைச்சர்களுடனான சந்திப்பு, கல்முனை தரவைப்பிள்ளையார்கோவில் வீதி பெயர் மாற்றம் செய்வதற்கு எதிர்ப்புப் போராட்டம் எல்லாம் இவர்கள் தலைமையிலேயே இடம்பெற்றன. தங்களது செயற்பாடுகளை குழப்பிவிடும் என்பதற்காக கூட்டமைப்பினர் இவற்றில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்ற அருண்தம்பி முத்து, தங்கேஸ்வரி ஆகியோருக்கு மட்டுமே வழுங்கப்பட்டது.

இது விடயத்தில் அம்பாறை மாவட்ட தமிழர்கள் முஸ்லிம் சூத்திரத்தையே பின்பற்ற முனைகின்றனர். இலங்கை மட்டத்தில் முதல் இரு சமூகங்களாக தமிழர்களும், சிங்களவர்களும், இருக்கின்ற நிலையில், சிங்கள சமூகத்துடன் இணைந்திருப்பதே தங்களுக்கு பாதுகாப்பானது என முஸ்லிம்கள் கருதினர். இதனை முஸ்லிம் ஆய்வாளர் ஒருவர் "தமிழரும் சிங்களவரும் முரண்பட்டால் நாங்கள் நீந்துவோம் அவர்கள் ஒன்றுபட்டால் நாங்கள் மூழ்குவோம்" என வர்ணித்தார்.

இதே சூத்திரத்தையே தமிழர்கள் அம்பாறை மாவட்டத்தில் பிரயோகிக்க விரும்புகின்றனர். அங்கு பிரதான முரண்பாடாக சிங்கள - முஸ்லிம் முரண்பாடு இருப்பதனால் சிங்கள சமூகத்துடன் இணைந்து செயற்படுவதே தங்களுக்கு பாதுகாப்பானது என கருத முற்படுகின்றனர்.

பொதுபலசேனாவையும், அம்பாறை மாவட்ட சிங்கள அரசியல் சக்திகளையும் பொறுத்தவரை தமிழ் மக்களுடன் இணைந்து செயற்படுவது தொடர்பாக இரண்டு இலக்குகள் உள்ளன. அதில் முதலாவதும் பிரதானதுமான இலக்கு தமிழ்த் தேசியத்தை சிதைப்பது. இரண்டாவது அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம் ஆதிக்கத்தை இல்லாமல் செய்வது.

முதலாவது இலக்கை பொறுத்தவரை தமிழ்த்தேசியத்துடனான தமது பற்றுறுதியை கிழக்குத் தமிழர்கள் போர் முடிவடைந்த பின்னரும் வெளிக்காட்ட தவறவில்லை. பாராளுமன்ற தேர்தல், உள்ளூராட்சி சபைத்தேர்தல், கிழக்கு மாகாணசபைத்தேர்தல் என்பவற்றில் கருணா பிள்ளையான் போன்றோரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தெளிவாக வெளிக்காட்டியிருந்தனர். இது சிங்கள சமூகத்தின் மத்தியில் ஒரு வித அச்சத்தை கொடுத்தது. எப்படியாவது இந்தப் போக்கை மாற்ற வேண்டும் என நினைத்தது. கிழக்கு தமிழர்கள் முஸ்லீம் ஆதிக்கம் தொடர்பாக அதிர்ப்தியுற்றிருப்




பதால் அதனை பயன்படுத்த முற்படுகின்றது.

இரண்டாவது இலக்கான அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம் ஆதிக்கத்தை இல்லாதொழித்தல் விடயத்தில் தமிழர்களுடன் இணைந்து செயற்பட்டால் தான் அதனைச் சாத்தியமாக்க முடியும் எனச் சிங்கள சமூகம் கருதுகின்றது. அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்கள் முதல் நிலையிலும் சிங்களவர்கள் இரண்டாவது நிலையிலும், தமிழர்கள் மூன்றாவது நிலையிலும் எண்ணிக்கை அடிப்படையில் உள்ளனர். எனினும் முஸ்லீம்களுக்கும், சிங்களவர்களுக்குமிடையிலான எண்ணிக்கை வேறுபாடு மிகவும் குறைவானதாகும். தமிழர்கள் 20 வீதத்திற்கு குறைவாகவே உள்ளனர்.

அம்பாறை மாவட்டம் மட்டுமல்ல கிழக்கு மாகாணம் முழுவதும் தமிழ் - முஸ்லீம் முரண்பாடு உள்ளது. அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் வாழ்வதால் அங்கு அதிகமாக உள்ளது. கல்முனைப்பகுதியிலேயே இம் முரண்பாடு மிகவும் அதிகம்.கல்முனை நகரத்தின் பெரும் பகுதி தமிழ்ப் பிரதேசமாக இருப்பதால் முஸ்லீம்தரப்பு அதனை எப்படியும் அபகரிக்க முயல்கின்றது. அதனால் தான் தமிழ் பிரதேச செயலாளர் பிரிவு தரமுயர்த்தப்படுவதை அது அனுமதிக்க பின்னிற்கின்றது. அஸ்ரப் காலத்திலிருந்தே இந் நிலை நீடிக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல் குடாத் தொகுதியிலும்,மட்டக்களப்பு தொகுதியின் காத்தான் குள - ஆரையம்பதி எல்லைப் பிரதேசத்திலும் இம் முரண்பாடு அதிகமாக உள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் சிங்கள ஆதிக்கத்திற்கு முகங்




கொடுப்பதால் இம் முரண்பாடு சற்று குறைவு எனலாம்.

மூன்று மாவட்டத்திலும் முஸ்லீம்களுடன் முரண்பாடு உள்ளதால் சிங்கள தேசத்துடனான முரண்பாட்டை விட முஸ்லீம்களுடனான முரண்பாட்டையே தமிழர்கள் பெரிதாகப் பார்க்கின்றனர். அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு நண்பர்" தங்கள் பிரதேசத்தில் விகாரை கட்டுவதா?, பள்ளிவாசல் கட்டுவதா? ஏன்ற பிரச்சினை வந்தால் நாம் விகாரையை கட்டுங்கள் எனக் கூறுவோம்." எனத் தெரிவித்தமை முரண்பாட்டின் உச்சத்தை காட்டுகின்றது.

"சிங்கள அரசியலைச் சார்ந்து இயங்குதல்" என்ற இந்தப் போக்கின் உச்ச நிலையை மார்ச் 9ம் திகதி கல்முனையில் ஜனாதிபதிக்கு ஆதரவாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் காட்டியது. ஆரம்பத்தில் ஜெனிவாவில் அமெரிக்கத் தீர்மானத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டமாகவே பௌத்த பிக்கு இதனை ஒழுங்கு செய்திருந்தார். பலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் பின்னர் ஜனாதிபதிக்கு ஆதரவான ஆர்ப்பாட்டமாக மாற்றப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள்

**கல்முனையில் தமிழ் பிரதேச செயலாளர் பிரிவினை மூடப் போகின்றனர் என்ற செய்தி வந்ததும் கல்முனை தமிழ்ப் பிரதிநிதிகள் கொழும்பு சென்று பொதுபலசேனாவை அழைத்து வந்தனர். இன்று தமிழ் பிரதேச செயலாளர் பிரிவினை தரம் உயர்த்தும் போராட்டங்களையும் நடவடிக்கைகளையும் பொதுப் பலசேனா தலைமையிலேயும், கல்முனை பௌத்த விகாரபதி தலைமையிலேயுமே கல்முனை தமிழர்கள் முன்னெடுக்கின்றனர். அம்பாறை மாவட்ட சிங்கள அரசியல் தலைவர்களும் இதற்கு ஒத்துழைக்கின்றனர்**




ஸ்ரீலங்காவின் தேசியக் கொடிகளை கைகளில் ஏந்திய படி சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துடன் பொதுபலசேனா தமிழ்த் தேசியத்தை கிழக்கில் சிதைத்தல் என்ற வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்குள் நுழைந்து விட்டது என்றே கூற வேண்டும். 1ம் கட்டத்தில் தமிழ் - முஸ்லீம் முரண்பாட்டினைப் பயன்படுத்தி அது தமிழ் மக்களுக்குள் நுழைந்தது. இரண்டாம் கட்டத்தில் பேரினவாத அரசியலுக்கு ஆதரவாக கிழக்குத் தமிழர்களை இறக்கும் முயற்சியில் இறங்குகின்றது. எதிர்காலத்தில் வடக்கிற்கு எதிராக கிழக்கு மக்களை இறக்கும் முயற்சியில் அது இறங்கும்.

இத்தனைக்கும் அது வாக்குறுதி அளித்த மாதிரி தமிழ்ப்பிரதேச செயலாளர் பிரிவை தரமுயர்த்தும் செயற்பாட்டை செய்து முடிக்கவில்லை. ஆரம்பத்தில் எல்லாம் முடிந்தது போன்று இருந்தது. ஆனால் தொடர்ந்து காலம் இழுத்தடிக்கப்படுகின்றது. இப் பிரச்சனை இருக்கும் வரை தான் கல்முனை தமிழ் மக்கள் தம்முடன் நிற்பர் என்பதால் பிரச்சினையை தொடர்ந்து தக்க வைக்க அது விரும்பக் கூடும். இது வெற்றியடைந்தால் கிழக்குமாகாணம் முழுவதும் தமிழர்கள் மத்தியில் இந்த வெற்றி அலை பாயலாம். அதன் பின்னர் கிழக்கு தமிழ்மக்கள் அனைவரும் பொதுபலசேனாவிற்கு பின்னால் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

ஆனால் இனப்பிரச்சினை தீர்விற்கு வரும் வரை முஸ்லீம்கள் அரசாங்கம் கைவிடும் எனக் கூறுவது மிகவும் கடினம். கிழக்கு சிங்கள தலைமைகளின் விருப்பம் வேறாக இருந்தாலும் சிங்களத் தேசியத் தலைமை முஸ்லீம்கள் இலகுவில் கைவிடாது. இதற்காக கிழக்கில் சுயாதீனமான முஸ்லீம் அதிகாரம் ஒன்று எழுச்சியடைவதையும் அது அனுமதிக்கப் போவதில்லை.

# அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்கள்





மார்ச் மாதம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரண்டு போராட்டங்களை நடாத்தியிருந்தது. ஒன்று சிறையில் மரணமான கோபிதாஸிற்காக நடாத்திய போராட்டம். இரண்டாவது தர்மபுரத்தில் வைத்து கைது செய்யப்பட்ட ஜெயக்குமாரியை விடுதலை செய்யக் கோரி நடாத்தப்பட்ட போராட்டம்.

விஸ்வலிங்கம் கோபிதாஸ் யாழ்ப்பாணம், வடமராட்சியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்டவர். பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற இவர் 2007ம் ஆண்டு இலங்கை வந்த போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். தொடர்ந்து ஆறு வருடங்களுக்கு மேலாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். சிறையில் அவர் பல்வேறு சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தார். பெப்ரவரி 24ம் திகதி அவர் மர்மமான முறையில் இறந்துள்ளார்.

அண்மைக்காலமாக பல சிறை மரணங்கள் இடம்பெற்றுள்ளன. எனவே இந்த சிறை மரணத்திலும் பல்வேறு சந்தேகங்கள் தமிழ் மக்களுக்கு இருந்தன. இவர் பிரித்தானிய பிரஜையாக இருந்த போதும் பிரித்தானிய அரசாங்கம் இவர் விடயத்தில் போதிய அக்கறையினைக் காட்டவில்லை.

இவரது மர்ம மரணத்திற்கு நீதியான சர்வதேச விசாரணை கோரியும், அரசியல் கைதிகள் மீதான சித்திரவதைகள், துன்புறுத்தல்களை தடுத்து நிறுத்தக் கோரியும், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்கவேண்டும் என வலியுறுத்தியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மார்ச் 2ம் திகதி வடமராட்சியில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடாத்தியது.

புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை அருகே காலை 9 மணிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

கோபிதாஸின் மரணத்திற்கு சர்வதேச விசாரணை வேண்டும், அரசியல் கைதிகள் மீதான சித்திரவதைகளை நிறுத்து, அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய் போன்ற கோஷங்கள் ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப்பட்டன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த சரவணபவன், வடமாகாணசபையைச் சார்ந்த ஐங்கரநேசன், அனந்தி எழிலன் ஆகியோரும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இரண்டாவது போராட்டம் வவுனியா பஸ் நிலையத்தின் முன்பாக மார்ச் மாதம் 15ம் திகதி இடம்பெற்றது. தர்மபுரம் முசிலம்பிட்டி வீட்டுத்திட்டத்தில் வசித்த பாலேந்திரன் ஜெயக்குமாரி, அவரது 13 வயது மகள் விபூசிகா ஆகியோர் மார்ச் மாதம் 13ம் திகதி பயங்கரவாத புலனாய்வுப்பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இக் கைதுகளை கண்டித்தும் அவர்களின் விடுதலைக்கு சர்வதேச சமூகம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கோரியும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் அதன் வவுனியா மாவட்ட கிளையின் செயலாளர் கோபாலகிருஸ்ணன் தலைமையில் இப் போராட்டம் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வ ராஜா கஜேந்திரன் தேசிய அமைப்பாளர் சட்டத் தரணி மணிவண்ணன், அகில இலங் கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆனந்தராஜா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோதராகலிங்கம், வட மாகாண சபை உறுப்பினர்கள், அருட்தந்தை செபமாலை உள்ளிட்ட மனித உரிமை ஆர்வலர்கள் உட்பட பலர் இப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். ஜெயக்குமாரியை விடுதலை செய், சட்டவிரோதக் கைதுகளை நிறுத்து, பழிவாங்கலை நிறுத்து, காணாமல் போனோருக்கு பதில் கூறு, எங்கள் பிள்ளைகள் எங்கே போன்ற கோஷங்கள் ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப்பட்டன.

# ஆசிரியர் கார்த்திகேசு நிருபனின் கொலைக்கு த.தே.ம.முன்னணி கடும் கண்டனம்

வவுனியா நேரியகுளம் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றும் கார்த்திகேசு - நிரூபன் கடந்த வருடம் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக தேர்தலுக்கு முதல் நாள் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற போது காணாமல் போயிருந்தார்.

மார்ச் 12ம் திகதி ஏ-9 பிரதான வீதியில் 225வது மைல்கல்லுக்கும் 226 வது மைல்கல்லும் இடைப்பட்ட காட்டுப்பகுதியில் அவரது எலும்புக் கூடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர் கொலை செய்யப்பட்டு வீசப்பட்டுள்ளார் என்றே தடயப் பொருட்கள் தெரிவிக்கின்றன. வடக்கில் ஐந்து பொது மக்களுக்கு ஒரு இராணுவம் என்ற கணக்கில் இராணுவம் நிலை கொண்டுள்ளதுடன், அதற்கு மேலதிகமாக புலனாய்வுப் பிரிவினரும் மூலை முடுக்கெங்கும் குவிந்துள்ள நிலையில் நடைபெற்றுள்ளதென்றால், அரசுக்கு தெரியாத வகையில் இக் கொலை ஒருபோதும் இடம் பெற்றிருக்க முடியாது. எனவே அதற்கான பொறுப்பை அரசே ஏற்கவேண்டும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் இப்படுகொலையினை வன்மையாகக் கண்டிக்கிறோம்.


இக்கொலை தொடர்பில் ஸ்ரீலங்கா அரசு நேர்மையான விசாரணைகளை இன்றுவரை மேற்கொள்ளவில்லை. எனவே இக்கொலை தொடர்பில் சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றினை மேற்கொள்ள அனைத்துலக சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.




இக் கொலையைக் கண்டித்து இலங்கை ஆசிரியர் சங்கம் நடாத்தும் போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முழுமையான ஆதரவு தெரிவிக்கின்றது. இப் போராட்டத்தில் அனைத்து மக்களையும் பொது அமைப்புக்களையும் கலந்து கொண்டு படுகொலைக்கு நீதி கோருமாறு கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் ஆசிரியர் நிரூபனின் இழப்பால் தவித்து நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கின்றோம்.

# தமிழக மக்களின் அழுத்தம் தான் இந்திய

## - தோழர் தியாகு



தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் தியாகுவை அவரது சென்னை அலுவலகத்தில் சந்தித்தார். சுயாதீன ஊடகவியலாளர் செல்வநாயகம் – கிரிசாந்த் அவருடனான நேர்காணல் இங்கே தரப்படுகின்றது.

**ஈழத் தமிழ் மக்களின் இன்றைய அரசியல் நிலை குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

தமிழ் மக்கள் என்ன அடையப் போகிறார்கள் என்ன அடைந்தால் அவர்களுக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்கும். அப்படி என்கிற ஒரு நீண்டகாலக் கண்ணோட்டம். அந்த அடிப்படையில் சுயநிர்ணயம் தான் ஒரு தீர்வு என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. அந்த நெடுங்கால கண்ணோட்டத்தில் அதன் வளர்ச்சியில் நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றோம். மீண்டும் ஒரு ஈழப்போர் வெடிக்கும் அதனை தலைவர் வந்து நடாத்துவார் என்பதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. தலைவர் சொன்னதைப் போல் எங்கள் இலட்சியம் மாறவில்லையே தவிர போராட்ட வடிவங்கள் கட்டாயம் மாறிவிட்டன. மாறித்தான் ஆக வேண்டும். இப்போது மக்களுக்கு இருக்கின்ற மனநிலைக்கும் அவர்களின் அகநிலை ஆற்றல்களுக்கும் சர்வதேச புறச் சூழல்கள் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தோம் என்றால் மெல்ல மெல்லத் தான் அந்த இறுதி இலக்கை நோக்கிய போராட்டம் உருவாகும். அதில் எனக்கொரு பார்வை, நாங்கள் எப்படி எதிர்பார்க்கிறோம் என்றால், பாலஸ்தீன மக்கள் ஜோர்டான் மேற்கு கரையில் காஸா முனையில் மேற்கொண்டது போல் ஒரு இண்டிபாட்டா போன்ற கிளர்ச்சிகள் அங்கே வருங்காலத்தில் அதிகரிக்கும் என்பது எனது எதிர்பார்ப்பு. ஒரு போர்க்குணம் வாய்ந்த வெகு மக்கள் போராட்டங்கள். அது முழுக்க முழுக்க சாத்வீகமான போராட்டங்களும் அல்ல. அல்லது நாங்கள் இதற்கு முதல் புரிந்து கொண்ட அர்த்தத்திலான ஆயுத முனைப் போராட்டங்களும் அல்ல. அப்படிப் பட்ட போராட்டங்கள் வெடிக்கும். அது சர்வதேச நெருக்குதல்களினால் அதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். இந்தப் போராட்டங்கள் அவற்றின் பங்குக்கு மீண்டும் ஒரு சர்வதேச நெருக்குதல்களை அதிகப்படுத்தும்.

> இஸ்ரேலியக் குடியேற்றங்களையோ, இஸ்ரேலிய டாங்கிகள் பாலஸ்தீன மண்ணில் அணி வகுப்பதையோ, சாதாரண பாலஸ்தீன இளைஞர் கள் மாணவர்கள் சிறுவர்கள் அவர்களுக்கு எதிராக தெருவில் வந்து போராடுவதையோ உலகின் பார்வையில் இருந்து மறைக்க முடியவில்லை

இஸ்ரேலுக்கான உலக நெருக்குதல் என்பது இன்டிபாட்டாவில் இருந்து தான் வந்தது. இண்டிபாத்டா செய்திகளை உலகின் பார்வையில் இருந்து யாராலும் மறைக்க முடியவில்லை. அமெரிக்கா உட்பட எல்லா நாடுகளுக்குமே அன்று ஒரு நெருக்கடி வந்து விட்டது.

இஸ்ரேலியக் குடியேற்றங்களையோ, இஸ்ரேலிய டாங்கிகள் பாலஸ்தீன மண்ணில் அணி வகுப்பதையோ, சாதாரண பாலஸ்தீன இளைஞர்கள் மாணவர்கள் சிறுவர்கள் அவர்களுக்கு எதிராக தெருவில் வந்து போராடுவதையோ உலகின் பார்வையில் இருந்து மறைக்க முடியவில்லை. அதில் இருந்து தான் அவர்கள் ஒஸ்லோ உடன் பாட்டுக்கு எல்லாம் போக வேண்டிய கட்டாயம் வந்தது. இங்கே உடன்பாட்டுக்கு வருவார்கள், வரவில்லை என்பது இருக்கட்டும். ஈழத்தில் எதிர்கால போராட்ட வடிவம் என்பது பொதுவாக இப்படி இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

பலநாடுகளிலும் இது தான் நிலைமை. குறிப்பாக அரபு வசந்தத்தை பார்த்ததில் இருந்து நாங்களும் அந்த மாதிரி ஒரு போக்கைத் தான் எதிர்பார்க்கின்றோம். ஆனால், ஈழத்தைப் பொறுத்தவரைக்கும் அடுத்த கட்டம் இது தான். இந்தக் கட்டத்துக்கு தான் அவர்கள் போகப் போகின்றார்கள். அதற்கும் பிறகும் எப்படி வளரும் என்பதை நாம் இப்போது சொல்ல முடியாது. மக்களோட போராட்டப் பாதையில் எல்லா வடிவங்களும் புனிதமானவை. எல்லாமே புனிதமான வடிவங்கள் தான். இதற்கு அந்த மக்கள் தயாராகும் போதே, அணியமாகும்போதே இவைசாத்தியமாகும்.

இந்தப் புரிதலோடு அவர்கள் வளர்ந்து செல்லும் போது உடனடித் தேவை ஒன்று இருக்கு. அவர்கள் உடனடியாக மூச்சு விடும் அவகாசம் வேண்டும். காலம் பூராகவும் அவர்கள் அடக்கு முறையின் கீழ் இருந்து துன்பப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். இயற்கையான, இயல்பான வாழ்க்கைக்கு உரிய தேவைகள் எதுவும் அவர்களுக்கு நிறைவு செய்யப்படவில்லை.

அவர்களின் அன்றாட வாழ்க்கை என்பது இன்றைக்கும் கேள்விக் குறியாகத் தான் இருக்கின்றது. அந்த நிலை மாறவேண்டுமாக இருந்தால் அதற்கு உள்ளூர் அளவில் நடக்கக்கூடிய சின்னச் சின்ன முயற்சிகள் கூட முக்கியத்துவம் பெறுகின்றது. விடுதலை ஒன்றே எங்கள் ஒற்றை இலட்சியம். அதற்கு குறைய நாங்கள் எதையும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். என்று ஒதுங்கி இருந்து விட முடியாது.

அப்படித்தான், ஈழத்தில் அண்மையில் நடந்த வடமாகாணசபைத் தேர்தல் முடிவுகளை எல்லாம் நாங்கள் பார்க்கின்றோம். உங்களுக்கு நாங்கள் வீடு கட்டிக் கொடுக்கிறோம், ரோடு போட்டுக் கொடுக்கின்றோம் என்று சொல்லக் கூடிய அந்த வளர்ச்சிப் பாதையை முன்வைக்கின்ற ஒரு கட்சிக்கும், இல்லை எங்களுக்கு அதிகாரம் வேண்டும், உரிமை வேண்டும் என்று அழுத்தமாக முன்வைக்கும் இன்னொரு கட்சிக்கும் நடந்த போராட்டத்தில் அவங்க அதிகாரம், உரிமை வேண்டும் என்பதை தேர்ந்தெடுத்து இருக்கின்றார்கள். அதன் பிரதிநிதிகளாகத் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வந்திருக்கின்றார்கள். இது வந்து கூட்டமைப்பின் சந்தர்ப்ப வாதத்தையோ, அதன் தடு மாற்றத்தையோ, கூட்டமைப்பு எதற்காக தொடங்கப்பட்டதோ, அதன் குறிக்கோளை கைவிட்டு செயற்படுவதையோ நியாயப்படுத்துவது அல்ல.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம், கூட்டமைப்பின் அரசியல் என்பது, ஏற்கனவே இருந்த அரசியலைக் கீழிறக்கி இருக்குது. வடகிழக்கு பிரிப்புக்கு ஒரு அரசியல் ரீதியான அந்தஸ்தைக் கொடுத்திருக்கிறது. என்ற விமர்சனங்கள் வைக்கப்படுகின்றது. அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதற்காக தொடங்கப்பட்டதோ, அந்தக் குறிக்கோளைக் கைவிட்டு விட்டுத் தான் அவர்கள் அந்தத் தேர்தலில் போட்டியிட்டு இருக்கின்றார்கள். அப்படிப் பார்க்கின்ற போது அது தமிழ் மக்களின் இலட்சியத்துக்கான துரோகம் அது. அதற்குப் பிறகான அவர்களின் செயற்பாடுகளிலும் உலகத் தமிழர்கள் முன்னிறுத்துகின்ற அந்தக் கோரிக்கைகள் பாருங்க, ஒரு தற்சார்புள்ள பன்னாட்டுப் புலனாய்வு வேண்டும் என்கிற கோரிக்கை. இன்றைக்கு அந்த மக்களைப் பாதுகாப்பதற்கு ஒரு பன்னாட்டுப் பொறி அமைவு ஏற்படுத்தப்பட வேண்டும் என்கிற கோரிக்கை. இனக்கொலைக்கு நீதி வேண்டும் என்கிற கோரிக்கை இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்து வந்ததாக நாங்கள் பார்க்கவில்லை. குறைந்தது ஐநா அறிக்கை சொல்கின்ற போர்க்குற்றங்கள் அது தொடர்பில் ஒரு விசாரணை வேண்டும். மானிட விரோதக் குற்றங்கள் தொடர்பிலாவது விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை கூட வரவில்லை. சர்வதேசங்களில் புதுசு புதுசாக வெளிவந்து கொண்டிருக்கும் ஆதாரங்களின் அடிப்படையில். அந்த அரசுமீது குற்றம் சாட்டுகின்ற ஒரு முயற்சி கூட இல்லை. ஏனெனில், இது எல்லாமே சிங்கள அரசுக்கு ஆத்திரம் ஊட்டக் கூடியது. என்ற கோணத்தில் அவர்கள் பார்க்கிறார்கள். அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. இதில் யாருக்கும் எவ்வித சந்தேகமும் இல்லை.

> ஒரு விவாதம் வந்திருந்தது. வடக்கு மாகாணசபை தேர்தல் என்பதும், வடக்கு மாகாண சபை என்பதும், தமிழ் மக்களுக்கு தடைக்கல்லா? அல்லது நெம்பு கோலா? நான் தடைக்கல் என்று விவாதித்தேன். அது நெம்புகோலா இருந்தா நல்லது என்றும் ஒரு விவாதம் முன்வைக்கப்பட்டது. நெம்புகோலா இருந்தா நல்லது என்று சொல்வதற்குப் பதில் நெம்புகோல் குறைஞ்சது இரும்பாலான நெம்பு கோலாகவும் இருக்க வேண்டும். ஒரு ஈர்க்கு குச்சியை வைத்துக் கொண்டு இதுதான் நெம்புகோல் என்று சொன்னால், ஈர்க்கு குச்சி நெம்புகோலா பயன்பட்டா நல்லாயிருக்கும் என்று சொல்வது எவ்வளவு அபத்தம். (சிரிக்கிறார்...)

இன்னும் சொல்லப் போனால் கூட்டமைப்பு உண்மையிலேயே தன்னுடைய இலட்சியத்துக்கு இது பயன்படப் போவதில்லை என கருதி இந்த தேர்தலைப் புறக்கணித்து இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். இதெல்லாம் நடந்து இருந்தால் நன்றாக

# தியாவை ஈழத்தமிழ் மக்கள் மீது திருப்பும்

இருந்திருக்கும் என்று சொல்வது ஒரு பார்வை. நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ ஒன்று நடந்ததற்குப் பிறகு, அதை எப்படி நாம் எடுத்துக் கொள்வது, அதை எப்படி எங்களது போராட்டத்துக்கு துணையாக பயன்படுத்திக் கொள்வது என்று பார்ப்பது இன்னொரு பார்வை.

ஒரு விவாதம் வந்திருந்தது. வடக்கு மாகாணசபை தேர்தல் என்பதும், வடக்கு மாகாண சபை என்பதும், தமிழ் மக்களுக்கு தடைக்கல்லா? அல்லது நெம்பு கோலா? நான் தடைக்கல் என்று விவாதித்தேன். அது நெம்புகோலா இருந்தா நல்லது என்றும் ஒரு விவாதம் முன்வைக்கப்பட்டது. நெம்புகோலா இருந்தா நல்லது என்று சொல்வதற்குப் பதில் நெம்புகோல் குறைஞ்சது இரும்பாலான நெம்பு கோலாகவும் இருக்க வேண்டும். ஒரு ஈர்க்கு குச்சியை வைத்துக் கொண்டு இதுதான் நெம்புகோல் என்று சொன்னால், ஈர்க்கு குச்சி நெம்புகோலா பயன்பட்டா நல்லாயிருக்கும் என்று சொல்வது எவ்வளவு அபத்தம். (சிரிக்கிறார்...) அதனால் அதற்கான வாய்ப்பே இல்லை.

ஒற்றையாட்சி அமைப்பு என்பது யாருக்கு தெரியவில்லை என்றாலும் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியாகவிருந்த விக்கினேஸ்வரனுக்காவது தெரிந்திருக்க வேண்டும். நன்றாக தெரிஞ்சிருந்தும் அதில் போய் இறங்குகிறார்கள் என்று சொன்னால், ஒன்று அந்த இலட்சியத்தை கைவிட்டு விட்டார்கள். இனிமேல் அந்த இலட்சியம் சாத்தியம் இல்லை. இப்ப ஏதாவது இந்த மக்களுக்கு செய்வோம் என்கிற நல்ல நோக்கத்தோடு இருக்கணும். அல்லது, ஏதாவது நடந்திட்டுப் போகட்டும், நம்ம பதவிக்கு இருந்திட்டுப் போறோம். என்பதான இரு நோக்கங்கள் இருக்கலாம். ஆனால், இந்த நோக்கங்கள் அல்ல இங்கே பிரச்சினை. அதனுடைய புறவிளைவுகளைப் பற்றித் தான் நாம் பேசுகின்றோம்.

அந்தப் புற விளைவுகளில் பாதகமான விளைவு என்பது. இவங்க இன்று பேசுவது பூராகவும் வடக்கு மாகாணத்தைப் பற்றி மட்டும் தான் பேசுகின்றார்கள். மன்மோகன் சிங்கை வரச் சொல்லிக் கூப்பிடும் போது கூட தமிழர் தாயகத்துக்கு வாங்க.. வடக்கைப் பாருங்க, கிழக்கைப் பாருங்க என்று கூப்பிடவில்லை. வடக்குக்கு வாங்க என்று தான் கூப்பிடுகின்றார்கள். இராணுவத்தை வெளியேறுவதைப் பற்றிப் பேசும் போது கூட வடக்கைப் பற்றி மட்டுமே பேசுகின்றார்கள். வடக்கு கிழக்கு சேர்ந்த தமிழர் தாயகம் என்கிற கருத்தை உடைப்பதில் மறைமுகமாக சிங்கள அரசுக்கு துணை செய்கின்றார்கள். அதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. கிழக்கை அடியோடு கைகழுவி விடுவது என்கிற முடிவுக்கு போய் விட்டார்கள்.

அதற்கு ஏற்ற மாதிரி இங்கே ஒரு பிரச்சாரம் நடக்கிறது. ... சுமந்திரன் போன்றவர்கள் இங்க கிழக்கெல்லாம் பற்றிப் பேசாதீங்க... கிழக்கில தமிழர்கள் எல்லாம் சிறுபான்மை ஆகிவிட்டார்கள். சிறுபான்மை ஆக்கப்பட்டு இருக்கின்றார்கள் என்று சொல்வதற்குப் பதிலாக அவர்கள் ஏற்கனவே சிறுபான்மை ஆகிவிட்டார்கள். அங்கே சிங்களவர்கள், முஸ்லிம்கள் இருக்கிறார்கள். எனவே நீங்கள் வடக்கைப் பற்றி மட்டும் தான் பேச வேண்டும். இனி வடக்கையும் அந்த நிலைக்கு கொண்டு வரப் பார்க்கிறார்கள். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட ஒரே குரலில் பேசும் ஒற்றை அமைப்பாக இல்லை. காமன்வெல்த் பிரச்சினையில் கூட விக்கினேஸ்வரன் உடைய குரல் வேறுமாதிரி இருந்தது. சுரேஸ் பிரேமச்சந்திரன் வேறு மாதிரி பேசினார். இந்த வேறுபாடுகள் அவர்களுக்குள் ளேயே இருக்கின்றது. வருங்காலப் போராட்டங்களுக்கு இந்த வேறுபாடுகளும் முக்கியமானவை.

ஆக, நம்மைப்பொறுத்தவரைக்கும் நோக்கம் என்னவென்று பார்த்தால் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் ஒரு வடக்குமாகாண சபையை உருவாக்குவது... அவர்கள் பொறுக்கி எடுத்த ஒருவரை அதற்கு முதல்வராக்குவது. அந்த மாகாண சபையைக் காட்டி இந்தச் சிக்கல் முடிந்து விட்டது. என்று காட்டுவதுமான ஒரு உள்நோக்கம் இருக்கின்றது. ஆனால், நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் என்கிற மாதிரி நினைப்பதெல்லாம் நடந்து விடுவதில்லை. ஏனென்றால் இன்னொரு பக்கம் சர்வதேச அளவிலும் தமிழகத்திலும் போராட்டங்கள் நடக்கின்றது. கிடைக்கின்ற அந்த சின்ன வெளியில் கூட உள்நாட்டில் நடக்கின்ற அந்தப் போராட்டங்கள். மூலமாக மக்கள் அதிருப்தியை வெளிப்படுத்துகின்றனர்.

பிரிட்டிஷ் பிரதமர் மாநாட்டுக்கே போகாமல் இருந்திருந்தா நல்லா இருந்திருக்கும். ஆனால், நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ மாநாட்டுக்கு போய் விட்டார். போனதுக்கு பிறகு நமக்கு அதனால என்ன கிடைக்குது என்று பார்க்கின்றோம். பின்னர் அவராகவே யாழ்ப்பாணத்துக்கு சென்ற போது தன்னெழுச்சியாக எழுந்த மக்கள் போராட்டங்கள், அதனை ஊடகங்கள் வெளிக்காட்டிய விதம், மக்களுக்கு ஆறுதல் சொன்ன கமரூன், பிரிட்டனுக்கு திரும்பியதும் தமிழ்மக்களுக்கு ஆதரவாக தனது கடுமையான வாதங்களை முன்வைத்தார். அதற்கான கட்டாயமும் அவருக்கு ஏற்பட்டு விட்டது. கமரூன் விரும்புகிறாரோ இல்லையோ அது அவரை மக்கள் கிட்ட ஹீரோ ஆக்கி விட்டது. சர்வதேச விசாரணை வேண்டும் என்கிறார். இவை எல்லாம் ஒரு புற விளைவுகள். நாங்க இதனை இரண்டு விதமாகவும் பார்க்க வேண்டும். நோக்கம் ஒன்றை மட்டுமே வைத்து அளவீடு செய்து ஒன்றைப் புறம் தள்ளி விடவும் முடியாது. இவர்கள் எல்லாம் அரசியல் ஆற்றல்கள். அவர்களுக்குப் பின்னாலும் ஒரு கருத்து இருக்கின்றது.

ஒரு நெடுங்காலக் கண்ணோட்டத்தில சுயநிர்ணயம் தான் தீர்வு. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தான் நாங்கள் எதிர்பார்ப்பது. அது தமிழீழ மண்ணில் தான் நடந்து முடிய வேண்டும். இதில வந்து எனக்கு எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. ஐ.நா வாங்கிக் கொடுக்கும் என்றோ, அல்லது கொமன் வெல்த் வாங்கிக் கொடுக்கும் என்றோ, அல்லது இந்தியா வாங்கிக் கொடுக்கும் என்றோ, தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் வாங்கிக் கொடுப்பாங்க என்றோ எதிர்பார்ப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை. ஈழ மக்கள் போராடுவார்கள். அதன் மேல் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கின்றது. ஆனால், அப்படி ஒரு வரலாற்றுத் தேவை அங்கு இருக்கின்றது. அதற்கான தேவையை முள்ளிவாய்க்காலும் ஒழித்து விடவில்லை. எதுவும் ஒழித்து விடவில்லை. மீண்டும் மீண்டும் அது தலை தூக்கிக் கொண்டே இருக்கும்.

கோத்தபாய ராஜபக்ஸ கூட ஒரு பேட்டியில் சொல்லுறாரு, புலிகளை அழித்ததற்குப் பிறகு

அந்தப் புற விளைவுகளில் பாதகமான விளைவு என்பது. இவங்க இன்று பேசுவது பூராகவும் வடக்கு மாகாணத்தைப் பற்றி மட்டும் தான் பேசுகின்றார்கள். மன்மோகன் சிங்கை வரச் சொல்லிக் கூப்பிடும் போது கூட தமிழர் தாயகத்துக்கு வாங்க.. வடக்கைப் பாருங்க, கிழக்கைப் பாருங்க என்று கூப்பிடவில்லை. வடக்குக்கு வாங்க என்று தான் கூப்பிடுகின்றார்கள். இராணுவத்தை வெளியேறுவதைப் பற்றிப் பேசும் போது கூட வடக்கைப் பற்றி மட்டுமே பேசுகின்றார்கள். வடக்கு கிழக்கு சேர்ந்த தமிழர் தாயகம் என்கிற கருத்தை உடைப்பதில் மறைமுகமாக சிங்கள அரசுக்கு துணை செய்கின்றார்கள்

அதிகாரப் பகிர்வு எல்லாம் தேவையில்லையே என்கிறார். அது என்ன அர்த்தம். அவர் தலைகீழா பிரச்சினையை பார்க்கிறார். அதிகாரம் இல்லாததனால் புலிகள் வளர்ந்தார்கள். அதனால் போர் நடந்தது என்று பார்ப்பதற்குப் பதிலாக புலிகளை தனிமைப் படுத்த தான் அதிகாரப்பகிர்வு பற்றிப் பேசினோம். அது தான் அவர்களை ஒழித்தாச்சே.. புலிகள் இல்லையென்றால் அதிகாரப் பகிர்வு இல்லை. முடிந்து போச்சு உங்களுக்கு.. அப்படி தெளிவான கோணத்தில் இருப்பதால் இங்கு அரைகுறைத் தீர்வுகளுக்கு இடமில்லை. இது விடுதலைக்கான போராட்டம். அதேநேரத்தில் மக்கள் விடுதலை என்கிற ஐடியோலயிசத்தை மட்டுமே சாப்பிட்டு வாழ முடியாது. அவர்களின் அன்றாட வாழ்க்கையில் துயரங்களைச் சந்திக்கிறார்கள். அதிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகள் என்ன? அதற்கு என்ன என்ன இடைவெளிகள் வாய்ப்புக்கள் கிடைத்தாலும் பயன்படுத்திக் கொள்ளத் தான் செய்வார்கள். அந்த உரிமையை நாங்கள் அங்கீகரிக்க வேண்டும். அதற்குள்ளே இருக்கிற அரசியலை நாம வெளிப்படுத்தலாம். விக்கினேஸ்வரனுக்கு விழுந்த வாக்குகள் என்பது அவர் எடுத்திருக்கின்ற சந்தர்ப்பவாத, சமரசவாத நிலைப்பாடுகளுக்கு எடுத்திருக்கின்ற வாக்குகள் அல்ல. ராஜபக்ஸ கும்பலுக்கு எதிரான தமிழ் மக்களின் அதிருப்தியை வெளிப்படுத்துகின்ற வாக்குககள். வளர்ச்சியா? அதிகாரமா? என்று கேட்டால் வளர்ச்சிக்கு எதிராக அதிகாரத்துக்கு ஆதரவாக விழுந்த வாக்குகள். அப்படி நாம் புரிந்து கொண்டால் போதுமானது. நாளைக்கு இவர்கள் எல்லாம் காணாமல் போய் விடுவார்கள். அப்போது சம்பந்தனோ, விக்கினேஸ்வரனோ நிலைக்கப் போவதில்லை. விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக யார் கடைசிவரை இருக்கிறார்களோ அவர்களே இறுதிவரை நிலைப்பார்கள். நாடாளுமன்றத்தில் போய் நல்ல ஆங்கிலத்தில் பேசுவதால் மட்டும் அதனைக் கேட்கக் கூடிய நிலையில் மக்கள் இல்லை.

**அரசாங்கத்துக்கு என்று தனி நிகழ்ச்சி நிரல் இருக்கின்றது. அவர்கள் இனி ஒரு போராட்டமோ, எழுச்சியோ வரக்கூடாது என்ற அடிப்படையில், ஒரு வகையான கட்டமைப்பு சார் இன அழிப்பைச் செய்து கொண்டு வருகின்றார்கள். அது, மன்னராட்சிக் காலத்தில் வெற்றியடைந்த அரசு தோல்வியடைந்த அரசினை எப்படி பச்சையாக சூறையாடுமோ அப்படியான சூறையாடல் அங்கு நடக்கின்றது. இப்படியான ஆக்கிரமிப்புக்களைத் தடுப்பதற்கு நாங்கள் என்ன செய்யலாம். ?**

இதனை நாங்கள் இரண்டு விதமாகப் பார்க்கலாம். அரசு ஒரு திட்டம் போட்டு செய்கின்றது. இதனை நாங்கள் இங்கே மட்டும் பார்க்கவில்ல்லை. இஸ்ரேல் இதனைத் தான் பாலஸ்தீனத்தில் அமுல் படுத்தியது. 2 ஆம் உலகப் போரில் மாபெரும் இனக்கொலையை சந்தித்த மக்கள் என்பதனால், ஐநாவே பாலஸ்தீனத்தில் பாதியைப் பிரித்து அவர்கள் கையில் ஒப்படைத்தது. அது அநியாயமான தீர்வு என்பது வேறு செய்தி.

ஆனால், பாலஸ்தீன மக்கள் யாரையும் அவர்கள் இனக்கொலை செய்யவில்லை. ஜெர்மனியை, போலந்தை, செர்பியாவை பிரித்துக் கொடுத்திருக்கலாம். ஆனால், பைபிளில் இருக்கிற சத்தியத்துக்கான நிலம் தான் வேண்டும் என்றார்கள். அவர்கள் கிராமங்களைப் பிடிக்கிறார்கள். வங்கிகளை உருவாக்குகிறார்கள். பாலஸ்தீனத்தில் போய் பயங்கரவாத தாக்குதல்களை நடாத்துகின்றார்கள். பிரிட்டிஷ் ஆதிக்க பகுதி அது. 1948 இல் பாதியை பிரித்துக் கொடுக்கின்றார்கள். மிச்சம் பாதியை என்ன பண்ணுகின்றார்கள் என்றால் இவர்கள் படையெடுக்கும் போது விரட்டி அனுப்பி விட்டார்கள். மிச்சம் இருந்தது ஜோர்டான் எஞ்சிய முனையும், காஸா மேற்குக் கரையும் தான்.

நிலத்தொடர்ச்சியே இல்லாமல் பண்ணி விட்டார்கள். இப்போ அந்தப் பகுதியையும் முழுதாக பிடிப்பதற்கு தான் திட்டம் போடுகின்றார்கள். முந்திய காலங்களில் தாயகத்தை விட்டு மக்கள் வெளியேறிய மாதிரி, இப்போ அப்பகுதிகளை விட்டு வெளியேற மக்கள் மறுத்து விட்டார்கள். உள்ளே நின்று கடுமையாகப் போராடுகின்றார்கள். அந்தப் போராட்டத்துக்கு அவர்கள் உறுதிப்பாடா இருக்கிறது மட்டும் காரணமாக இருக்கிறது மட்டுமல்ல. பாலஸ்தீன விடுதலை இயக்கங்கள் நடாத்தியுள்ள பரப்புரை. அவர்களின் ஆயுதப் போராட்டங்கள் உள்ளிட்ட போராட்டங்கள். அதில் சில பயங்கரவாதக் கூறுகள் இருந்தாலும் கூட, அது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் சர்வதேச அளவில் அமெரிக்கா, ஐநா மற்றைய நாடுகள் நெருக்குதல்களைத் தோற்று விப்பதன் மூலமாக அரபு நாடுகளின் மக்கள் கொடுக்கக் கூடிய ஆதரவு, போன்ற பல்வேறு காரணங்களை வைத்து தான், ஒரு அயல்நாட்டுத் தொடர்புடன் கூடிய சர்வதேச அங்கீகாரங்கள் கிடைத்திருக்கிறது. இன்னும் முன்னேறிப் போகணும் அது வேறு செய்தி. அவர்களுக்கு அயல் நாட்டுத் தொடர்புகள் இருக்கின்றது. இப்போ அமெரிக்க, ஐரோப்பிய அரசுத்துறை செயலாளர் போனால் இஸ்ரேல் அதிபரையும் சந்திக்கிறார். அதேவேளை பாலஸ்தீன அதிபரையும் சந்தித்துப் பேச வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகின்றார்கள். இந்த மாதிரியான நீண்ட போராட்டம் தான் தேவை, இது குறுகிய காலத்தில் முடிவடைவது இல்லை.

# பொதுவாக்கெடுப்பு - ஓர் உலகறியதி

வழக்கறிஞர் ப.அமர்நாத்

பொதுவாக்கெடுப்பு என்பது ஜனநாயக அமைப்பின் ஓர் உச்சகட்ட ஜனநாயக வழிமுறையாகும். ஒரு பிரச்சனையை அடிதடி மற்றும் ஆயுதப் பிரயோகமின்றி தீர்த்துக்கொள்வதற்கு நாகரீக சமூகம் கண்டுகொண்ட ஒரு வழிமுறையே பொதுவாக்கெடுப்பாகும். குறிப்பாக ஒரு தேசிய இனம் தனக்கு என்னவேண்டும் என்பதை தாம் சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட அரசுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு வழிமுறையே பொதுவாக்கெடுப்பாகும்.

பண்டைய கிரேக்கத்தில் நேரடி ஜனநாயகம் இருந்த போதிலும் நவீன யுகத்தில் அது புதிய பரிமாணத்துடன் பிரஞ்சு புரட்சியிலிருந்து வடிவம் பெறலாயிற்று. அதாவது பிரஞ்சு புரட்சியின் போது (1789) பிரபுக்கள் கைது செய்யப்பட்டு மக்கள் முன்னிலையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மக்கள் அளிக்கும் நேரடி வாக்கின் மூலமாக தண்டனை வழங்கப்பட்டது. இதுவே பிரான்சில் Plebiscite என்று அழைக்கப்படலாயிற்று. அதாவது குறித்த பிரபுவினுடைய ஆளுகைக்கு உட்பட்ட மக்கள் அனைவரும் இணைந்து வாக்களிப்பின் மூலம் அவருக்கான தண்டனையை நிர்ணயிப்பதன் வாயிலாக இம்முறைமை ஆரம்பமானது.

இதன்பின் வரலாற்று ஏணிப்படியில் பொதுவாக்கெடுப்பு எனும் அரசியல் முறைமை தொடர்ந்து அடியெடுத்து வைக்கலாயிற்று. 1846ம் ஆண்டு லைபீரியன் விடுதலைக்கான பொதுவாக்கெடுப்பு, 1853ம் ஆண்டு மேரிலாண்டு விடுதலைக்கான பொதுவாக்கெடுப்பு என அரையும் குறையுமாக பொதுவாக்கெடுப்பு கலாச்சாரம் உருத்திரளத் தொடங்கியது.

குறித்த பகுதியில் வாழும் குறித்த மக்கள் ஒரு குறித்த பிரச்சினை தொடர்பாக எடுக்கும் ஒரு பொதுவாக்கெடுப்பாக Plebiscite அமைந்தது. இதனடிப்படையில் இத்தாலிய வட்டகையில் பல்வேறு இராஜ்யங்கள் இருந்தன. இந்த இராஜ்யங்கள் எவை எவற்றுடன் சேர்வது என்ற பிரச்சனை



1860களில் எழுந்தது. அப்போது Savoy, Tuscany, Modena, Pama போன்றவற்றில் 1860ம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட ஒப்பம்கோரல் (Plebiscite) என்ற பொது வாக்கெடுப்பின் மூலம் Savoy பிரான்சுடன் இணைக்கப்பட்டது. ஏனையவை Sardinia இராஜ்யத்துடன்



இணைக்கப்பட்டு ஐக்கிய இத்தாலி உதயமாக அடிகோலின.

இதுவே அடுத்தகட்டவளர்ச்சிப்போக்காய் மக்கள் பிரிவு அல்லது இனப்பிரிவுகள் சுயமாக இருப்பதா அல்லது பிரிந்து செல்வதா அல்லது பிரிந்து மற்றொன்றுடன் இணைவதா என்பதற்கான மேலும் ஒரு பரிமாணப் புள்ளியாய் அமைந்தது. இந்த வகையில் 1905ம் ஆண்டு சுவீடனில் இருந்து நோர்வே பிரிந்து செல்வதற்கான பொதுவாக்கெடுப்பு Plebiscite என்ற பதத்தின் அடிப்படையில் நிகழ்த்தப்பட்டு நோர்வே பிரிந்து சென்றது. இங்கு இந்த ஜனநாயக உரிமை வெளியரசுகளின் தலையீடு இன்றி அமைதியான முறையில் நிகழ்ந்தது.

இனங்களுக்கிடையே பிரச்சனை ஏற்படும்போது ஆதிக்கத்துக்கு உள்ளாக்கப்படும் அல்லது பாதிக்கப்படும் இனம் தமது விருப்பப்படி பிரிந்து தனியரசாக அமைவதா இல்லையா என்பதற்காகவோ அல்லது மற்றொரு அரசுடன் சேர்வதா இல்லையா என்பதற்காகவோ அந்த குறித்த மக்கள் மத்தியில் எடுக்கப்படும் வாக்கெடுப்பே Plebiscite என்பதாகும். ஆனால் பிற்காலத்தில் ஒரு பரந்த தேசம் தழுவிய ஒரு பொதுப்பிரச்சனைக்கான சட்ட உருவாக்கத்தின் பொருட்டு எடுக்கப்படும் வாக்கெடுப்பையும், பல்லின அரசில் இருந்து ஓரினம் பிரிந்து செல்வதற்காக அவ்வினத்தின் மத்தியில் மட்டும் எடுக்கப்படும் இருவகைப்பட்ட வாக்கெடுப்பையும் Referendum என்ற ஒரே பதத்தால் அழைக்கும் நிலை உருவாகியுள்ளது.

ஆங்கிலத்தில் உள்ள Referendum என்பது பொதுப்படையான பொருளைக் கொண்டுள்ளது. ஆனால் பிரஞ்சு மொழியிலுள்ள Plebiscite என்பது குறிப்பான ஆழமான பொருளைக் கொண்டுள்ளது. தற்போது Plebiscite என்ற பிரயோகம் கைவிடப்பட்டு Referendum என்ற சொல்லின் அடிப்படையிற்தான் பொதுவாக்கெடுப்பு என்ற பதம் பிரயோகிக்கப்படுகிறது. இத்தகைய பொருள் வேறுபாட்டை உணர்ந்து Referendum என்பதில் உள்ள இரண்டாவது அர்த்தத்தை குறித்த இனத்திற்கான பொதுவாக்கெடுப்பாக பிரயோகிக்க வேண்டும்.

உலகில் தோன்றிய முக்கிய பிரச்சினையாக காஷ்மீர் பிரச்சினை காணப்பட்டது. காஷ்மீரிய பிரச்சினையை தீர்ப்பதற்கு அங்கு Plebiscite என்ற பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென ஐ.நா.வின் பாதுகாப்புச்சபை 1948ம் ஆண்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியது. இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்த காஷ்மீரில் நிலை கொண்டுள்ள தனது இராணுவத்தை பாகிஸ்தான் விலக்கிக் கொள்ள வேண்டும் என்று அத்தீர்மானம் கோரியது. மேலும் சட்ட ஒழுங்கை பேணி பொதுவாக்கெடுப்பை நடத்துவதற்கு குறைந்தளவு இந்தியப் படை இருப்பதையும் இத்தீர்மானம் ஏற்றுக்கொண்டிருந்தது. ஆனால் இறுதியில் பாகிஸ்தான் தனது படையை விலக்கிக்கொள்ள மறுத்ததோடு இந்தியாவும் இதை ஒப்புக்கொள்ள மறுத்த நிலையில் இந்த ஐ.நா.பாதுகாப்புச் சபை தீர்மானம் செயலற்றுப்போனது.

அடுத்து பாகிஸ்தானில் இருந்து கிழக்குப் பாகிஸ்தானான பங்களாதேஷ் பிரிந்து செல்வதற்கான நிலை ஜனநாயக ரீதியிலான வாக்களிப்பின் மூலமே ஏற்புடையதாக காட்சியளித்தது. அதாவது 1970ஆண்டு நிகழ்ந்த பொதுத் தேர்தலில் முஜிப்பூர் ரஹ்மான் தலைமையிலான அவாமிலீக் கட்சி பெருவெற்றியீட்டியிருந்தது. அந்த வெற்றியின் அடிப்படையில் அது பங்களாதேஷை சுதந்திர அரசாக பிரகடனப்படுத்தும் நிலை தோன்றியது. அதனை ஏற்றுக்கொள்ளாது விட்டதுடன் அம்மக்களின் மீது பாகிஸ்தானிய அரசு மிகப்பெரிய இராணுவ ரீதியிலான இனப்படுகொலையை மேற்கொண்டது. இந்நிலையில் தேர்தல் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்ட அவர்களின் உரிமையின் அடிப்படையில் இனப்படுகொலையை தடுக்க வேண்டிய பெரும் பொறுப்பின் பொருட்டும் அண்மை நாடான இந்திய




அரசு பாகிஸ்தானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையின் மூலம் இனப்படுகொலையை தடுத்து நிறுத்தி பங்களாதேஷ் விடுதலைக்கு உதவியது.

பனிப்போரின் முடிவையடுத்து உலகின் பல பகுதிகளிலும் பல தேசிய இனங்கள் பிரிந்து சென்று விடுதலையடைந்தன. 1991ம் ஆண்டு எரித்திரீய மக்கள் விடுதலை முன்னணி எதியோப்பிய இராணுவத்தை தனது மண்ணில் பெரும் தோல்விக்கு உள்ளாக்கியது. இதை அடுத்து எதியோப்பிய அரசை மேற்படி விடுதலை அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் இணக்கப்பாட்டிற்கு வருமாறு அமெரிக்கா வற்புறுத்தியது. இதன்வாயிலாக எதியோப்பிய அரசு மேற்படி விடுதலை அமைப்புடன் நடத்திய பேச்சுவார்த்தையின் மூலம் ஐ.நா. மேற்பார்வையின் கீழான பொது வாக்கெடுப்புக்கு இருதரப்பும் சம்மதித்தன. அதன் அடிப்படையில் 1993ம் ஆண்டு ஏப்ரல் 23 முதல் 25வரை மூன்று நாட்களாக ஐ.நா. அமைப்பின் கீழ் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் 99.83

### 1990 ம் ஆண்டிலிருந்து பொது வாக்கெடுப்பு மூலம் விடுதலை அடைந்த தேசிய இனங்கள்

| ஆண்டு | தேசிய இனங்கள் |
|---|---|
| 1990 | 1. சுலோவேனியா |
| 1991 | 1. ஆர்மீனியா |
| | 2. அசர்பைசான் |
| | 3. குரோசியா |
| | 4. எஸ்டோனியா |
| | 5. ஜார்ஜியா |
| | 6. லைத்வீனியா |
| | 7. லித்துவேனியா |
| | 8. மெஸிடோனியா |
| 1993 | 1. நகோர்னா - கரபாக் |
| | 2. உக்ரைன் |
| | 3. டிரான்நிஸ்டிரியா |
| | 4. துர்க்மெனிஸ்தான் |
| | 5. உக்பெக்ஸ்தான் |
| 1992 | 1.போஸ்னியா - ஹெர்ஸகோவினா |
| | 2. தேற்கு ஒசேஸியா |
| 1993 | ஏரித்தியா |
| 1994 | மோல்ட்டோவா |
| 1999 | கிழக்குத்தீமோர் |
| 2006 | மாண்டிநீக்ரோ |

விழுக்காடு வாக்குகள் பிரிந்து செல்வதற்கு ஆதரவாக அளிக்கப்பட்டன. இதன் மூலம் இறையாண்மை கொண்ட சுதந்திர எரித்திரிய அரசு உதயமானது.

சோவியத் ஒன்றியம் உதிர்ந்து 14 புதிய சுதந்திர அரசுகள் உதயமாகின. பனிப்போர் முடிந்ததும் சோவியத் ஒன்றியத்தில் இருந்து 14 புதிய அரசுகள் தனித்தனியே பிரிந்து சென்றன. 1991ம் ஆண்டு மார்ச் 31ம் தேதி ஜோர்ஜியா குடியரசானது. தனது குடியரசு மட்டத்தில் பொதுவாக்கெடுப்பு நடத்தியது. அதில் 99.6 விழுக்காடு பிரிந்து செல்வதற்கான வாக்குகள் அளிக்கப்பட்டன. இதன் மூலம் ஜோர்ஜியா பிரிந்து சென்றது. இவ்வாறே உக்ரேன் குடியரசானது தனது குடியரசு நாடாளுமன்றத்தின் மூலம் விடுதலைக்கான பொதுவாக்கெடுப்பை முன்வைத்தது. அதில் 92.3 விழுக்காடு வாக்கின் மூலம் பிரிந்து செல்லல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த வகையில் ஏனைய 12 குடியரசுகளும் பிரிந்து சென்றன.

சூடானில் இருந்து தென்சூடான் பொது வாக்கெடுப்பின் மூலம் பிரிந்து சென்றது.

(23ஆம் பக்கம் பார்க்க)

மனநல ஆலோசகர்
- அஸ்ஹர் அன்ஸார்

# நிறைவேற்ற முடியாத வாக்குறுதி வேண்டாம்



நம்பிக்கையாக இருத்தல் என்பது நேர்மையாக இருத்தலாகும். ஒவ்வொரு குழந்தையும் தம் பெற்றோர்கள் அவர்களுடன் நம்பிக்கையும் நேர்மையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றே விரும்புகின்றனர். நம்பிக்கையான வார்த்தைகள் நம்பிக்கையான செயற்பாடுகள் மூலமே பெற்றோர் குழந்தை உறவு மலர ஆரம்பிக்கிறது. பெற்றோரும் குழந்தைகளும் உடலாலும் உணர்வாலும் நெருக்கமானவர்கள். பிரிக்க முடியாத ஒரு இரத்த பந்தம் பெற்றோர் குழந்தை உறவை வலுப்படுத்துகிறது. உண்மையான உறவு உருவாக நம்பிக்கை வேண்டும். குழந்தைகளை பெற்றோரும் பெற்றோர்களை குழந்தைகளும் முழுமையாக நம்புகிற பொழுது பிரிக்க முடியாத குடும்ப உறவும் மனித உறவும் இந்த பூமியில் மலரவும் மணம் கமலவும் காரணமாகிறது.

வலது கைக்கு இடது கை நம்பிக்கையுடையதாக இருக்க வேண்டும். மற்றவரை நம்புவதும் நம்பிக்கையோடு நடந்து கொள்வதும் ஆன்மீகத்தின் அடித்தளமாக கருதப்படுகிறது. ஆனால் துரதிஸ்ட வசமாக இன்று நம்மில் பலர் மற்றவர்களை நம்புவதில் அவநம்பிக்கையுடையவர்களாகவே இருக்கின்றனர்.

முன்பு போலல்ல - இன்று யாரையுமே நம்ப இயலாமல் இருக்கிறது, நம்பினால் துரோகம் செய்து விடுகிறார்கள் என்று பலர் பல சந்தர்ப்பங்களில் சொல்வதை பார்த்திருக்கிறோம். போலியான வாக்குறுதிகள், பயன்தராத உடன்படிக்கைகள், வஞ்சகமான வார்த்தைகள் என்பன நம்பிக்கையும் நாணயமற்ற மனிதர்களாக எங்களை ஆக்கிவிடுகின்றன.

சிறு வயதிலிருந்தே நம்பகமானதும் நிறைவு செய்யக் கூடியதுமான வாக்குறுதிகள் மூலம் மனிதனின் மறைந்து போகும் இந்த உயர்தரமான மானிடப் பண்பை வளர்க்க பெற்றோர்கள் வழிகாட்டியாக இருக்க வேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளுக்கு வாக்குறுதிகளை கொடுக்கும்போது அதில் நம்பகத்தன்மை இருக்கிறதா? அதை நிறைவேற்ற முடியுமா? என்பதை தீர்மானித்த பிறகு தான் வாக்குறுதிகளை கொடுக்கவேண்டும்.

ஏனென்றால் பெற்றோர் கொடுக்கும் வாக்குறு திகளையும், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் முறைகளையும் கண்டுதான் குழந்தைகள் நம்பிக்கை என்ற அற்புதமான கனத்தை வளர்த்துக் கொள்கின்றனர்.

பெற்றோர் கொடுத்த வாக்குறுதிகள் சரியான நேரத்தில் சரியான முறையில் நிறைவேற்றப்படுவதை காணும் போது குழந்தைகள் மனமகிழ்ச்சி அடைவது போன்று நம்பிக்கையுடையவர்களாக வளர்வதற்கான அழகான பாதையும் வெட்டிக் கொடுக்கப்படுகிறது. கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத போது ஏமாற்றம், கவலை, கோபம் போன்ற பாதகமான உணர்வுகள் ஏற்பட்டு நம்பத் தகுதி அற்றவர்கள் என்ற குறியீட்டை எங்கள் பிள்ளைகள் எங்கள் பெயரில் செதுக்கி விடுவதற்கு நாமே காரணமாவோம்.

குழந்தைகள் யானைகளை போன்றவர்கள் அவர்கள் ஒருபோதும் மறந்து விடுவதில்லை. அவர்களுக்கு ஏதாவது வாக்குறுதியளித்தால் அதை அவர்கள் மறக்காமல் மனத்திற்குள்ளே வைத்துக் கொள்வார்கள். அதை வார்த்தைகளால் வெளிப்படுத்தாவிட்டாலும் அது நிறைவேற்றப்படும் வரை மனதில் எண்ணிக் கொண்டும் எதிர்பார்த்துக் கொண்டும் இருப்பார்கள்.

எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாதபோது ஏற்படும் கசப்பான மனப்பாதிப்புக்களை பற்றி நாம் அனுபவத்தில் உணர்ந்திருப்போம். ஆனால் நாமே பிள்ளைகளுக்கு வாக்குறுதிகள் மூலம் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திவிட்டு அவற்றை நிறைவேற்றத்

> **“சிறு வயதில் தூரப்பிரயாணம் செல்வதற்கு எனக்கு ரொம்பவே பிடிக்கும். தூரத்தில் இருக்கும் சொந்தக்காரர் வீட்டுக்கு என்னை அழைத்துச் செல்வதாக தந்தை கூறினார். அது என்னை மிகவும் சந்தோசமடையச் செய்தது. அது பற்றி நண்பிகளிடம் சொல்லி மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால், அவர் சொன்ன திகதியில் கூட்டிச் செல்லவில்லை. அதனால் நான் அதிக மனமுடைந்து போனேன் அதிலிருந்து நான் எதையும் அதிகமாக கற்பனை பண்ணுவது கிடையாது”**

தவறினால் அவர்களின் மனம் எவ்வளவு பாதிப்படையும் என்பதை இலகுவாக விபரிக்க முடியாது. நாம் பிள்ளைகளுக்கு பல்வேறு விதமான வாக்குறுதிகளை அளிக்கிறோம். சில சமயம் நிறைவேற்றுகிறோம். சிலசமயம் நிறைவேற்றாமல் இருக்கிறோம். இன்னும் சில சமயம் நிறைவேற்றாமல் அப்படியே மறந்து விடுகிறோம்.

பரீட்சையில் சித்தியடைந்தால் உனக்கு ஒரு பைசிக்கிள் வாங்கித் தருவேன். இம்முறை வகுப்பில் முதலாம் பிள்ளையாய் வந்தால் ட்றிப் ஒன்று கூட்டிட்டுபோவேன். கணக்கு பாடத்தில் எல்லாம் சரி எடுத்தால் புதிய புத்தகப்பை வாங்கித்தருவேன், இப்படி ஒரு விடயத்தை சாதித்துக்கொள்ள வாக்குறுதிகளைக் கொடுக்கும் பல பெற் றோர் இருக்கின்றனர். கொடுத்த வாக் குறுதியை நிறைவேற்றவேண்டிய சந்தர்ப் பம் வரும் போது அதை நிறைவேற்ற முடியாமல் போனால் அதற்கு பல கார ணங்கள் சொல்லி தப்பித்துக் கொள்ள முற்படுகிறவர்களும் நிறையவே உள்ள னர்.

இப்ப அப்பாவிடம் காசு இல்லை, பிறகு வாங்கித் தருவார், உனக்கு சைக்கிள் வாங்கித்தந்தால் நீ விழுந்து காயம் தேடிக் கொள்வாய், கொஞ்சக் காலம் போன பிறகு வாங்கித் தாறோம். உங்கட புத்தகப்பை இன்னும் பழசாகவில்லை, பழசானதும் வாங்கித்தருவேன். இப்படி பல காரணங்களைச் சொல்லி, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத பெற்றோர்களும் நம்மில் இல்லாமல் இல்லை.

தாமதமாகும் வாக்குறுதிகள் நிறைவேறாமல் போகும் சந்தர்ப்பங்கள் தான் அதிகம். சிலசமயம் பிள்ளைகளுக்கு வாங்கித் தருவதாக சொன்னதை வாங்கித்தருமாறு அவர்கள் அடம்பிடிக்கும் போது கோபப்பட்டு அவர்களை அடித்து, ஏசி அடக்குகின்ற பெற்றோர்களும் இருக்கின்றனர். பிள்ளைகள் கேட்காமலேயே அவர்களுக்கு தருவதாக சொல்லி எதிர்பார்ப்பை மனதில் விதைத்து விட்டு, பின்னர் வெறும் ஏமாற்றத்தை மட்டும் கொடுத்து அதனால் மனப்பாதிப்பை குழந்தைகள் அனுபவிப்பதை இந்தப் பெற்றோர்கள் உணர்ந்து கொள்வதில்லை. இவ்வாறான ஏமா ற்றமும் அதனால் ஏற்பட்ட மனநோவும் நீண்ட காலத் துக்கு, சில சமயம் பிள்ளை வாலிபத்தை அடைந்த பின்பும் தாக்கம் செலுத்தலாம்.

எனது தந்தை என்னை ரயிலில் கூட்டிக் கொண்டு போவதாக சொல்லி இதுவரையில் கூட்டிப்போகவில்லை. அதனால் நான் இந்த நாள் வரையில் ரெயினில் போவதற்கு ஏங்கிக் கொண்டிருக்கிறேன் என்று 22 வயதுடைய ஒரு யுவதி கூறினாள். இப்படி வாக்களித்து நிறைவேற்றாத பல விடயங்கள் மனதில் பலமான தாக்கங்களையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்துகின்றன.

சிறு வயதில் தூரப்பிரயாணம் செல்வதற்கு எனக்கு ரொம்பவே பிடிக்கும். தூரத்தில் இருக்கும் சொந்தக்காரர் வீட்டுக்கு என்னை அழைத்துச் செல்வதாக தந்தை கூறினார். அது என்னை மிகவும் சந்தோசமடையச் செய்தது. அது பற்றி நண்பிகளிடம் சொல்லி மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால், அவர் சொன்ன திகதியில் கூட்டிச் செல்லவில்லை. அதனால் நான் அதிக மனமுடைந்து போனேன் அதிலிருந்து நான் எதையும் அதிகமாக கற்பனை பண்ணுவது கிடையாது. இப்படி அதே வயதுடைய இன்னொரு யுவதி தனது உணர்வுகளை எம்மோடு பகிர்ந்து கொண்டாள்.

நான் சிறுவயதாக இருக்கும் போது எனது அப்பாவை சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நேரத்தில் அவரை பார்க்க என்னையும் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதாக வீட்டார் சொல்லி கடைசி வரைக்கும் என்னை அழைத்துச் செல்லவில்லை. அப்பாவை பார்ப்பதற்கு நான் மிகவும் ஆவலாக இருந்தேன். ஆனால், கடைசியாக அவரின் மரணத்தை மட்டுமே எனக்கு பார்க்க நேர்ந்தது. அன்றிலிருந்து இன்றுவரை அதிகம் கவலைப்படுகிறேன், அதிகம் அழுகிறேன். நான் 20 வயதை தாண்டியும் அதன் தாக்கம் என்னை இன்னும் அவதிப்படுத்துகிறது.

நாம் பிள்ளைகளுக்கு வாக்குறுதி அளித்தால் அவை மீது அவர்கள் ஆசையும், ஆர்வமும் கொண்டு நிறைவேறும் வரை காத்துக்கொண்டிருப்பார்கள். அவற்றை நிறைவு செய்ய வேண்டிய தேவைகளாகவே அவர்கள் கருதிக் கொள்வார்கள். அவை நிறைவேற்றப்படாவிட்டால் நிறைவு செய்யப்படாத தேவைகளைக் கொண்டவர்கள் என தம்மை எண்ணிக் கொள்வார்கள்.

சில பெற்றோர் பிள்ளைகளுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நேரத்திற்கு முறையாக நிறைவேற்றியதை உணர்ந்த பிள்ளைகள் அது பற்றி தம் நண்பர்களோடு உரையாடி மகிழ்வார்கள். பெற்றோர்களைப் பற்றி பெருமையாக பேசுவார்கள். ஆனால் வாக்குறுதியளித்து அதை நிறைவேற்றாத பெற்றோர்களின் பிள்ளைகள் இதைக் கேட்டதும் மனதால் கவலைப்பட்டுக் கொள்வார்கள். எனது தந்தை அல்லது தாய் சொன்னது போன்று எனக்கு வாங்கித்தரவில்லை. அல்லது என்னை கூட்டிக்கொண்டு போகவில்லை. என்று கவலையோடு எண்ணுவதையும் ஏமாற்றத்தை அனுபவிப்பதையும் மற்றவர்களால் இலகுவாகப் புரிய முடியாது.

பிள்ளைகளுக்கு கொடுக்கும் ஒருசில வாக்குறுதிகள் தவறிப்போகலாம். ஆனால், தொடர்ந்து வாக்குறுதிகள் மீறப்படுமானால் எங்கள் பெற்றோர்கள் பொய் சொல்கிறார்கள், எங்களை ஏமாற்றுகிறார்கள். அவர்கள் வாக்குறுதிகளை நம்ப முடியாது என்று எண்ணி பெற்றோர்கள் மீது அவநம்பிக்கையுடையவர்களாகவும் அவர்களை மதிக்காதவர்களாகவும் பிள்ளைகள் ஆகிவிடுகின்றனர்.

பெற்றோர்கள் தமது உன்னதமான நிலையை வேண்டுமென்றே அழித்துக் கொள்ளக்கூடிய நிலைக்கு தம்மை உட்படுத்தி கொள்கின்றனர். இச் சந்தர்பத்தின் போது உண்மையாகவே நிறைவேற்றக் கூடிய ஒரு வாக்குறுதியை பிள்ளைகளுக்கு கொடுத்த போதிலும் அதைப் பெற்றோர் நிறைவேற்ற மாட்டார்கள் என்றே நினைப்பார்கள். வாக்குறுதிகளை மீறுவதால் பெற்றோரின் கட்டுப்பாட்டில் பிள்ளைகளை வளர்க்கவும் பராமரிக்கவும் முடியாமல் போகும். அத்தோடு, சிறுபராயத்திலிருந்தே பெற்றோர்.பிள்ளை உறவில் விரிசல் விழ ஆரம்பிக்கும்.

பெற்றோர்கள் அளித்த வாக்குறுதிகள் மீறப்படுவதை பிஞ்சு உள்ளங்களால் தாங்கிக் கொள்ள முடியாது.

# தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய உண்மைகளும் பொய்மைகளும்

● மாவலியான்

இல - 04

1. தோட்டத் தொழிலாளருக்கு கிடைக்கும் வருமானம் போதும் அவர்கள் சாராயத்திலும், ஏனைய ஊதாரித்தனத்திலும் அதிகம் செலவழிக்காமல் சிக்கனமாக வாழ்ந்தால் அவர்களால் சேமிக்கவும் இயலும் என பழியை அவர்கள் மீதே பல அரசியல்வாதிகள் போடுகின்றனர். அமைச்சர் தொண்டமான் கூட 70ரூபா அலவன்ஸ்



கிடைக்காத பாரபட்சத்தினால் மனம் குமுறிக்கொண்டிருந்த தோட்டத் தொழிலாளரிடம் செல்லுமிடமெல்லாம் இதேகூற்றைக் கூறி பிரச்சினையிலிருந்து தப்பி ஓடிக்கொண்டிருந்தார். ஒரு நாள் 1982ல் தலவாக்கலை இ.தொ.கா. அரசியல் சங்க காரியாலயத்தில் வைத்து அவர் ஒரு தொழிலாளியிடம் வகையாக மாட்டிக்கொண்ட சம்பவம் தோட்டத் தொழிலாளரின் நிலையை மேலும் உணர்த்துகிறது.

தொண்டமான் எதற்கு இப்போ அலவன்ஸ், குடிக்கிற சாராயத்திற்கு கொடுக்கும் காசை சேமித்தாலே போதுமே என்று கூற சிங்கராயர் என்ற தொழிலாளி இடைமறித்து சார் எங்கள் குடும்பத்தில் 5பேர் உழைக்கிறோம் ஒரு தம்பி மாத்திரம் படிக்கிறான் வயதுபோன அப்பா எங்கள் குடும்பத்திற்குச் சொந்தமான ஒரு மாடு வளர்க்கிறார். நாம் ஐந்து பேர் உழைத்தும் கடந்த மாதம் தோட்டத்தில் கடன் வாங்கி உள்ளோம். மண்ணெண்ணெய் மேலதிக அரிசி, மா ஆகியவற்றிற்கு நாம் வெளியில் வேறு கடன்பட்டிருக்கிறோம். எங்களுக்கு ஒரு பால் மாடு இருக்கிறது. எங்கள் குடும்பத்தில் யாரும் தண்ணி போடுவதில்லை, வீண்செலவு எதுவுமே கிடையாது. இருந்தும் கடன்தான் மீதி என்று கூற அது எப்படி இருக்கமுடியும் வரவு செலவு கணக்கு விபரத்தைச் சொல்லு என அமைச்சர் வினாவ தொழிலாளி தங்குதடையின்றி உள்ள கணக்கு உள்ளபடி அப்படியே சமர்ப்பித்தார். அடிக்கடி தொண்டமான் குறுக்குக் கேள்விகள் எழுப்பியும் பயனில்லை, தொழிலாளி தனது கூற்றை நிரூபித்தார். தொண்டமான் வாயடைத்துப்போனார். இது தான் மலையகத் தொழிலாளரின் இன்றைய உண்மையான நிலை.

இறுதியாக கிராமப்புற வறிய விவசாயிகளைவிட மலையக தமிழ் தொழிலாளர் வசதியுடன் வாழ்கின்றனரா? என்ற வினாவுக்கு விடை காண்போம். எனது விடை இதுதான், இவ்விரு சாராரும் பொருளாதார ரீதியில் இப்போது எவ்வகையிலும் ஒருவரைவிட ஒருவர் சிறந்த நிலையில் இல்லை. இவ்விருசாராருமே இன்றைய இலங்கையில் அடிமட்டத்தில் உழல்கின்றனர். மலையகத் தொழிலாளருக்குப் பெருந் தோட்டத்துறையில் ஒழுங்கமைத்த ஒரு வாழ்க்கைமுறை இருக்கிறது.

செத்தும் சாகாமல் வாழ்வதற்கான நிச்சயமான தொழிலை அது உத்தரவாதப்படுத்துகிறது. இது ஒன்றுதான் அவர்களை பெருந்தோட்டத் துறையில் பிணைத்து வைத்திருக்கிறது. மறுபுறத்தில் இந்த தொழில் உத்தரவாதமே அவர்களை மூர்க்கமான சுரண்டலுக்குள்ளாக்குகிறது. இதைத் தவிர வேறேதும் அவர்களுக்கு கிடையாது.

கிராமப்புற வறிய விவசாயிகளுக்கு இத்தகைய ஒழுங்கமைந்த நிச்சயமான தொழில்கிடையாது. ஆனால் உணவுமுத்திரை, வேலையற்றோருக்கான சகாயப்படி, வயோதிபர், அங்கவீனர், விதவைகளுக்கான தர்மப்படி போன்ற அரசாங்க சகாய நிதிகளும், வங்கியில் கடன் பெறுவது மாதிரிக் கிராமங்கள், நிலப்பங்கீடு போன்ற நடவடிக்கை ஆகியவற்றின் சலுகைகளும் ஓரளவு கிடைக்கின்றன.

மறுபுறத்தில் கிராமிய வாழ்க்கையில் கிடைக்கும் பலா, பாக்கு, தேங்காய், நெல் போன்ற பொருட்கள் சிறிதளவாவது தேவைகளை ஈடுசெய்கின்றன. மலையகத் தொழிலாளருக்கு இந்தச் சலுகைகளும், வாய்ப்புக்களும் கிடையாது அவர்கள் விறகைத் தவிர அனைத்தும் பணம் கொடுத்தே வாங்கவேண்டும்.

இதைத் தவிர மலையக தமிழ்த் தொழிலாளர் பிரத்தியேகமாக தேசிய இனஒடுக்கு முறைக்கு முகம் கொடுக்கின்றனர். எல்லாத்துறைகளிலும்



சுரண்டலுடன் இவ்வடக்கு முறை சிங்கள மக்களுக்கு இல்லாத ஒன்று. எனவேதான் மலையக தொழிலாளர் ஏனைய மக்களைவிட மிக மோசமான நிலையில் துயரங்களை அனுபவிக்கின்றனர். ஏனெனில் அவர்கள் காலனியல் முறையின் கீழ் மிக மோசமாகச் சுரண்டப்படும் ஒரு தொழிலாள வர்க்கமாக மாத்திரமன்றி இந்நாட்டில் மிக மோசமாக அடக்கி ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனமாகவும் உள்ளனர்.

**சிறுவர் முதல் பெரியோர்வரை அனைவரும் உழைத்து கைநிறைய காசு சம்பாதிக்கின்றனரா தோட்டத் தொழிலாளர்?**

சில இனவாத அரசியல்வாதிகள் பாருங்கள் தோட்டத் தொழிலாளர் சிறுவர்கள் கூட சம்பாதிக்கிறார்கள்.

> மலையகத் தொழிலாளருக்குப் பெருந்தோட்டத்துறையில் ஒழுங்கமைத்த ஒரு வாழ்க்கை முறை இருக்கிறது. செத்தும் சாகாமல் வாழ்வதற்கான நிச்சயமான தொழிலை அது உத்தரவாதப்படுத்துகிறது. இது ஒன்றுதான் அவர்களை பெருந் தோட்டத் துறையில் பிணைத்து வைத்திருக்கிறது.

எமது சிங்கள மக்கள் தாம் வேலையின்றித் திண்டாடுகிறார்கள் என்று கூறுகிறார்கள். அரசாங்க புள்ளி விபரத் திணைக்களம் கூட இதே விதமான விபரங்களை திட்டமிட்டு வெளியிடுகின்றது. உதாரணத்திற்கு 1981/82 உழைப்போர் பற்றிய சமூக பொருளாதார ஆய்வு என்ற வெளியீட்டைப் புரட்டினால் கல்வி, மரணவிகிதம் போன்ற வேறெந்தத்

> வசதி படைத்தோரின் பிள்ளைகள் படித்துக்கொண்டும் ஓய்வு நேரத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டும் மகிழ்ச்சியாக இருக்கும்போது அந்நிய செலாவணியை சம்பாதித்துக் கொடுப்போரின் பிள்ளைகளோ! சுரண்டி பிடித்து புல் செதுக்கிக் கொண்டோ அல்லது மலைக்காட்டில் வேலை செய்யும் தமது பெற்றோருக்கு உறுதுணையாக தமது தம்பி, தங்கைகளை பராமரித்துக் கொண்டோ கல்வி அறிவற்ற மற்றொரு தலை முறையை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

தொகுதியிலும் தோட்டப்புறத்தை தனியாக எடுத்தோ இனரீதியாகவோ ஆராயவில்லை. ஆனால் 24ம் பக்கத்தில் வேலையற்றோர் என்ற தலைப்பில் மாத்திரம் இனரீதியாக வகுத்து வேலையற்றோரில் 83.5 என்ற வீதம் சிங்களவராவர். இலங்கைத் தமிழரில் இது 9.2 வீதம் இலங்கை முஸ்லீம்களில் 6.2 வீதம், இந்தியத் தமிழர்களில் 1.5வீதம் என்று கூறுகிறது.

இதன் உண்மையான காரணத்தை கல்வி என்ற உபதலைப்பில் மேலும் விளக்குவோம். தற்போதைக்கு சில விபரங்களை மாத்திரம் ஆராய்வோம். இன்றும் தோட்டத் துறையில்தான் சிறுவர் உழைப்பு அதிகமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. சிறுவர்களை வேலைக்கமர்த்துவதை தடைசெய்யும் சர்வதேச சட்டங்கள் இருந்தும், 14 வயது வரை கல்வி புகட்டுவது கட்டாயம் என சட்டம் இருந்தும் கூட மலையகத் தமிழரின் பிள்ளைகள் பெருந்தோட்டத்துறை தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இன்று 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட உழைக்கும் பெண்களில் 62 வீதத்தினர் தோட்டத்துறை பெண்கள் என்று அரசாங்க புள்ளி விபரம் ஒன்று கூறுகிறது.

இந்நிலைமை மலையகத் தொழிலாளரின் வளமான நிலையைக் காட்டுகிறதா? இல்லவேயில்லை மாறாக அவர்களது வறிய நிலமையைத்தான் காட்டுகிறது. மேலே நாம் பார்த்தது போல தமது உழைப்பால் தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ள முடியாமல் திண்டாடும் மலையகத் தொழிலாளரால் தமது பிள்ளைகளைப் படிக்கவைக்க முடியாத வறிய நிலைமையும் கல்வித் துறையில் அவர்களுக்குக் காட்டப்படும் பாரபட்சமுமே இந்நிலைக்குக் காரணம்.

இதனால் வசதி படைத்தோரின் பிள்ளைகள் படித்துக்கொண்டும் ஓய்வு நேரத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டும் மகிழ்ச்சியாக இருக்கும்போது அந்நிய செலாவணியை சம்பாதித்துக் கொடுப்போரின் பிள்ளைகளோ! சுரண்டி பிடித்து புல் செதுக்கிக் கொண்டோ அல்லது மலைக்காட்டில் வேலை செய்யும் தமது பெற்றோருக்கு உறுதுணையாக தமது தம்பி, தங்கைகளை பராமரித்துக் கொண்டோ கல்வி அறிவற்ற மற்றொரு தலைமுறையை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய சமூக அநீதியைத்தான் இனவாதிகள் இவ்வாறு சித்திரம் போட்டுக் காட்டுகின்றனர்.

**மலையகத் தமிழ் தொழிலாளர் காதிலும், கழுத்திலும் நிறைய நகை போட்டிருக்கின்றனர். எனவே அவர்கள் வறியவர்கள் அல்ல, என்ற பிரசித்திபெற்ற கூற்றை இனி ஆராய்வோம்**

உண்மைதான் மலையகத் தமிழருக்கு தங்க ஆபரணங்கள் மீது அலாதிப்பிரியம் இருப்பதை மறுக்க முடியாதுதான். ஆனால் கேள்வி இதுதான் அது அவர்களது செல்வாதாரத்தை மதிப்பிடும் அளவுகோலா?

இதற்கான விடையை ஒரு நூற்றாண்டுக்கு முன்னமே கார்ள்மாக்ஸ் தனது இந்தியாவில் பிரித்தானியர் ஆட்சி என்ற கட்டுரையில் தந்துள்ளார்.

(தொடரும்)

# இலங்கையின்

## இனப்பிரச்சினையும், அரசியல்யாப்புகளும் - இல 06

சி.அ.யோதிலிங்கம்

அதேவேளை தேர்தல்கள் மூலம் மாவட்டங்கள் பலப்படுத்தும் முயற்சியும் முடுக்கிவிடப்பட்டது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைகளில் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கும் மாவட்டங்கள் தேர்தல் அலகுகளாகக் கொள்ளப்பட்டன. இதனால்தான் மாவட்டமட்டத்தில் அரசியல் பலப்படுத்தல் முக்கியத்துவம் பெற்றது. குடியேற்ற முயற்சிகளுக்கு அப்பால் மாவட்ட

> **நீதித்துறையைப் பொறுத்தவரை இன விவகாரத்தில் என்றுமே இலங்கை நீதிமன்றங்கள் தமிழ் மக்களுக்குச் சார்பாக தீர்ப்புகளை வழங்கியதில்லை. வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் படுபவர்கள் கூட வருடக்கணக்குகளில் சிறைகளில் அடைபட்டு இருப்பது தமிழர்களின் விதியாகவுள்ளது.**


சனச்செறிவை செயற்கையாக மாற்றும் வகையில் சிங்கள மாவட்டங்கள் தமிழ் மாவட்டங்களுடன் இணைக்கப்பட்டன. மொனரா கலை மாவட்டத்துடன் இணைந்திருந்த 'பதியத்தலாவை", 'மகாஓயா" பிரதேச செயலாளர் பிரிவுகள் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன. இதே போன்று நிர்வாகச் செயற்பாடுகளுக்காக அநுராதபுர மாவட்டத்துடன் இணைந்திருந்த 'பதவியா" பிரதேச செயலாளர் பிரிவு திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. மலையகத்தில் கண்டி நிர்வாக மாவட்டத்துடன் இணைந்திருந்த 'ஹிங்குரான்கொத்த" தேர்தல் தொகுதி நுவரெலியா மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. திருக்கோணமலையிலும், நுவரெலியாவிலும் தேர்தல் தேவைகளிற்கு மட்டுமே இவை தமிழ் மாவட்டங்களுடன் இணைந்திருந்தன. நிர்வாகத் தேவைகளிற்குச் சிங்கள மாவட்டங்களுடனேயே இணைந்திருந்தன.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையில் அதிக சிங்கள ஆசனங்களைப் பெறுவதற்காகவும் தமிழ் மாவட்டங்களில் சிங்கள ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகவே மாவட்ட சனச் செறிவு இவ்வாறு செயற்கையாக மாற்றப்பட்டது.

நீதித்துறையைப் பொறுத்தவரை இன விவகாரத்தில் என்றுமே இலங்கை நீதிமன்றங்கள் தமிழ் மக்களுக்குச் சார்பாக தீர்ப்புகளை வழங்கியதில்லை. வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்கள் கூட வருடக் கணக்குகளில் சிறைகளில் அடைபட்டு இருப்பது தமிழர்களின் விதியாகவுள்ளது. தமிழ் நீதிபதிகள் இதுவிடயத்தில் தமிழ் மக்களுக்குச் சார்பாக நடந்து கொண்டாலும், சிங்கள நீதிபதிகள் அவ்வாறு நடப்பதில்லை.

சந்தேகக் கைதுகளுக்கு அப்பால் தமிழ் மக்களின் அரசியல் விடயங்களிலும் நடுநிலைமையாகத் தீர்ப்புக்கள் வழங்கப்படுவதில்லை சிங்கள சமூகத்திற்குச் சார்பாகவே தீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. சோல்பரி காலத்திலிருந்து இதுவே தொடர்கதையாக உள்ளது. பிரஜாவுரிமைச் சட்டம் பற்றிய வழக்கிலும், தனிச் சிங்களச் சட்டம் போன்ற வழக்கிலும் சோல்பரி கால நீதிமன்றங்கள் இவ்வாறே நடந்துகொண்டன. தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பாக எழுதப்பட்ட யாப்பு ஏற்பாடுகளும், சாதாரணச் சட்டங்களும், தெளிவற்றனவாக இருப்பதைப் பயன்படுத்தி பொருள்கோடல் வழங்குகின்ற அதிகாரங்கள் மூலமாகவே இவ்வாறான தீர்ப்புக்களை வழங்குகின்றன.

1978ம் ஆண்டு யாப்புக் காலத்தில் சுனாமி பொதுக் கட்டமைப்பு ஏற்பாடுகளை இடை நிறுத்தியமை, வடக்கு - கிழக்கு பிரிப்பு, சம்பூரில் பலவந்தமாக இடம் பெயரப்பட்ட மக்கள் சம்பந்தமான வழக்கு என்பவற்றில் நீதிமன்றம் இவ்வாறே நடந்து கொண்டது. சம்பூர் வழக்கில் மக்களின் வாழ்வுரிமையையே நீதிமன்றம் கவனிக்கத் தவறியிருந்தது. வழக்குத் தொடுத்தவருக்கே இதுபோன்ற வழக்குகளைக் கொண்டுவரவேண்டாம் என எச்சரிக்கையைக் கூட விடுத்திருந்தது. வட - கிழக்கு பிரிப்பு வழக்கில் சிங்கள



மரபுரிமையின் படிதான் நடந்து கொண்டதாகப் பிரதம நீதியரசர் ஒப்புதல் வாக்கு மூலமே அளித்திருக்கின்றார்.

அதேவேளை தமிழர்கள் கூட்டாகக் கொலை செய்யப்பட்டபோதும், தமிழர் தலைவர்கள், தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டபோதும் நீதி விசாரணைகள் பெரியளவிற்கு நடத்தப்படாமல் அவை கிடப்பில் போடப்பட்டன. மூதூர் கொலை, மன்னார் கொலை, பத்திரிகையாளர் சிவராம் கொலை, பாராளுமன்ற உறுப்பினர் ஜோசேப் பரராஜசிங்கம் கொலை போன்றவை இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

ஏனைய அரச நிறுவனங்களைப் போல நீதித்துறையும் பேரினவாத மயப்படுத்தப்பட்டிருப்பதையே இப்போக்குகள் காட்டிநின்றன. தமிழ் மக்களுக்கு இவ் நீதிமன்றங்கள் மீது கொஞ்சம் கூட நம்பிக்கை இல்லாமல் போனது.

போர்க்காலத்தில் வட - கிழக்கில் செயற்பட்ட படையினருடன் சம்பந்தப்பட்ட விடயங்களைப் பொறுத்தவரை அங்குள்ள நீதிமன்றங்கள் கண்டும், காணாதவைகள் போலவே நடந்து கொண்டன. தமிழ் நீதிபதிகள் சற்று நேர்மையாக நடக்க முற்பட்ட போதும், அவர்களின் கைகள் கட்டப்பட்டிருந்தன.

### முடிவுரை

இலங்கையில் நவீன அரசியல் அமைப்பாக அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புரூக் அரசியல் சீர்திருத்த (1833) காலம் தொடக்கம் அரசியல் யாப்புச் செயற்பாடுகள் தமிழ் மக்களை ஆட்சி அதிகாரக் கட்டமைப்பிலிருந்து ஒதுக்கி வைத்தது என்பதும், கூட்டு அபிலாஷைகளுக்கான தளங்களை நுணுக்கமான செயற்பாடுகள் மூலம் சிதைத்தது என்பதும் இன்று துலாம்பரமாகத் தெரியத் தொடங்கியுள்ளது.

அரசியல் யாப்பினை உருவாக்கியவர்களது மையச்சிந்தனை இலங்கைத் தீவினை சிங்கள மக்களுக்கு மட்டும் உரிய நாடாக மாற்றுவதுதான். இதனால்தான் நிர்ப்பந்தங்கள் காரணமாக தமிழ் மக்களின் நலன்களை அரசியல் யாப்பில் சேர்க்கவேண்டிய நெருக்கடி வந்த போதெல்லாம், அவை நடைமுறையில் செயற்படாத வகையில் பல பொறிமுறைகளையும் தங்களுக்குள் வைத்திருந்தனர். இப்பொறிமுறை ஒரு போதும் ஒற்றைத்தன்மை வாய்ந்ததாக இருந்ததில்லை. 'ஒரு கண்டத்தில் தப்பினால் மறு கண்டத்தில் உயிரிழப்பர்' என்ற வகையில் படிமுறை வரிசையில் அந்தப் பொறிமுறைகள் அமைக்கப்பட்டிருந்தன.

தமிழ் மக்களின் நலன்களை அரசியல் யாப்பில் தெளிவாக எழுதுவதில்லை. எழுதியவற்றையும் நடைமுறைப்படுத்துவதில்லை. நடைமுறைப்படுத்தும் நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டால், எழுதியவற்றையும் பாராளுமன்றத்தினூடாகவோ, நீதிமன்றத்தினூடாகவோ நீக்கி விடுதல் போன்றன இப்பொறிமுறைகளில் சிலவாக இருந்தன.

டொனமூர் யாப்பில் தேசாதிபதிக்கு வழங்கப்பட்ட ஒதுக்கு அதிகாரங்கள் தொடக்கம் சோல்பரியின் 29வது பிரிவின் ஊடாக தமிழ் மொழி அரசகரும மொழிச் சட்டம், வடக்குக்கிழக்கு பிரிப்பு மற்றும் மாகாண சபைகள் வரை இதுபற்றித் தமிழ் மக்களுக்கு நிறையவே அனுபவங்கள் உண்டு.

அண்மைக்காலம் வரை சர்வதேச சமூகமும் தமிழ் மக்களும் திருப்திப்படக் கூடிய ஒரு அரசியல் தீர்வினை முன்வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை ஆட்சியாளர்களுக்கு இருந்தது. புலிகளின் இராணுவ வலிமையும், சர்வதேச சமூகத்தின் நிர்ப்பந்தங்களும் இதற்கு காரணங்களாக இருந்தன. தற்பொழுது புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டுள்ளதால் சர்வதேசத் தரப்பு நிர்ப்பந்தம் மட்டுமே எஞ்சியுள்ளது. இந்தியத் தலையீடு காரணமாக அந்த ஒரு தரப்பின் குரலும் மிகவும் பலவீனமான நிலையிலேயே உள்ளது.

மறுபக்கத்தில் போர் அழிவுகளினாலும், அகதி வாழ்க்கையினாலும் புலிகளின் இராணுவத் தோல்வியினாலும் தமிழ் மக்கள் மிகவும் நொந்த நிலையில் உள்ளனர். இதனால் இம்மக்கள் மீது எதனையும் திணித்து விடலாம் அல்லது எதனையும் கொடுக்காது இழுத்தடிக்கலாம் என்ற நிலையிலேயே அரசு உள்ளது.

சர்வதேச நிர்ப்பந்தம் காரணமாக எதையாவது முன்வைக்க வேண்டிய நிலை ஏற்படின் தமிழ் மக்களினால் நிராகரிக்கப்பட்ட 13வது திருத்தத்தைத் தவிர எதனையும் முன்வைக்கப்போவதில்லை. இந்தியாவும் 13வது திருத்தத்தினை மட்டும் வழங்கினால் போதும் என்ற நிலையிலேயே உள்ளது. 13வது திருத்தத்தில் உள்ள பல அதிகாரங்கள் ஏற்கெனவே மீளப் பெறப்பட்டு விட்டன. காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் ஆளும் கட்சிக்குள்ளேயே பலத்த எதிர்ப்புக்கள் உள்ளன. இராணுவமும் இதனை விரும்பப்போவதில்லை. இராணுவம் இன்று ஓர் அரசியல் சக்தியாகவும் எழுச்சி பெற்றுள்ளதனால் அதனை மீறிச் செயற்படும் நிலையிலும் அரசு இல்லை.

இந்நிலையில் தீர்வுகள் ஏதாவது வழங்குவதாக இருந்தால் கூட காணி, பொலிஸ் அதிகாரங்கள் இல்லாத, பறிக்கப்பட்ட அதிகாரங்கள் மீள அளிக்கப்படாத 13வது திருத்தமே கிடைக்கும் நிலையில் உள்ளது. இத்தனைக்கும் 13வது திருத்தம் என்பது ஏற்கெனவே அரசியல் யாப்பில் உள்ள விடயம். அதனை நடைமுறைப்படுத்துவதற்குக் கூட அர

> **தமிழ் மக்களின் நலன்களை அரசியல் யாப்பில் தெளிவாக எழுதுவதில்லை. எழுதியவற்றையும் நடைமுறைப்படுத்துவதில்லை. நடைமுறைப்படுத்தும் நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டால், எழுதியவற்றையும் பாராளுமன்றத்தி னூடாகவோ, நீதிமன்றத்தினூடாகவோ நீக்கிவிடுதல் போன்றன இப்பொறிமுறைகளில் சிலவாக இருந்தன.**

சிற்குத் துணிவுகிடையாது. இந்த 13வது திருத்தம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை சிறிய அளவில் கூட ஒரு போதும் தீர்க்கப் போவதில்லை. இதன் பலவீனங்கள் பற்றி இந்நூலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# மோதலும் மோதல் தீர்வும்

க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான அரசியல் விஞ்ஞானம்

கே.எஸ்.இளங்கோ
B.A.PGDE(MERIT), DIP.IN.POLITICAL

மோதல் தீர்வு தொடர்பாக கருத்து தெரிவிக்கும் மற்று மொரு பிரிவினர் மேலே விபரிக்கப்பட்ட சகல எண்ணக் கருக்களுடன் மேலும் சில அம்சங்களும் அடங்கியுள்ளன எனக் கூறுகின்றனர். அக்கருத்தின்படி மோதல் தீர்வு என்பது மோதல் தவிர்த்தல் மோதல் இணக்கப்படுதல், மோதல்தீர்த்தல், மோதல் நிலைமாற்றல் ஆகிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய பரந்ததோர் செயன்முறை ஒன்றாகும்.

ஆக்கபூர்வமாகவும் அகிம்சை முறையிலும் பிரச்சினைகளை தீர்த்து மோதல்களுடன் தொடர்புடைய சகல தரப்பினரதும் தனித்துவம் தொடர்பான பெறுமானங்களை இனம் கண்டு அவர்களது மானிடத்தேவைகளையும் ஆசைகளையும் இனம் கண்டு தேவையான வழிவகைகளை மேற்கொள்ளல் மோதல் தீர்வில் அடங்கியுள்ளது என்பது அவர்களது அபிப்பிராயமாகும். மோதல் இணக்கப்படுதல்,அல்லது மோதல் முகாமை என்பவற்றில் இருந்து வேறுபட்ட செயல்களும் மோதல் தீர்வில் அடங்கியுள்ளது என்பது இக் கருத்தின் மூலம் தெளிவாகின்றது. மோதல் தீர்வு என்பது பல முக்கியமான இயல்புகளை உள்ளடக்கியுள்ளது என்பது மேற்படி கருத்துக்களை ஒட்டுமொத்தமாக நோக்கும் போது தெளிவாகின்றது.

அவையாவன

01. மோதலுடன் தொடர்புடைய மற்றும் அதற்கு அடிப்படையாக அமைந்துள்ள காரணிகளை வேரோடு களையச்செயற்படுதல்.

02. மோதல் தரப்பினரிடையே புதிய தொடர்புகளை உருவாக்குவதற்காகச் செயற்படுதல்

03. உடன்பாடான(POSITIVE)மனப்பாங்குகளைப் பிறப்பித்தல்.

04. வன்முறை மீண்டும் தலைதூக்குவதற்கான சாத்தியங்களை நீக்குதல்

மோதல் தீர்வின் போது கவனம் செலுத்தப்படும் முக்கியமான ஓர் அம்சம், மோதலுக்கு ஏதுவாகிய காரணிகளை ஆழமாகஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்காக செயற்படுதலாகும். அதற்கமைய மோதல் தரப்பினருக்கிடையே துண்டிக்கப்பட்ட தொடர்புகளை மீள நிறுவுவதற்கும் மீண்டும் மோதல் உருவாகுவதற்கான சாத்தியப்பாட்டை தவிர்ப்பதற்கும் செயற்படுதல் வேண்டும். எனவே மோதல் தீர்வு சிக்கலான நீண்டகால செயல்முறையாகும் என கருதலாம்.

### மோதல் நிலைமாற்றம்

சில பகுப்பாய்வாளர்கள் இதனை மோதல் தீர்வுக்கு அப்பால் சென்ற தெளிவான ஒரு படிமுறையாகக் குறிப்பிடுகின்றனர்.மற்றும் சிலர் மோதல் தீர்வினது ஒரு விருத்தி நிலை என இதனை விபரித்துள்ளனர். மோதல் தீர்விலும் பார்க்க விரிவான கட்டமைப்பு சார்ந்த அம்சங்களின்பால் அதிக கவனம் செலுத்தும் சந்தர்ப்பம் மோதல் நிலைமாற்றம் எனக்கூறுகின்றனர்.

மோதல் தீர்வு மூலம் மோதலுடன் தொடர்புடைய தரப்பினருக்கிடையே காணப்படும் எதிர்ப்புத் தன்மைகளைத் தனித்து சகல தரப்பினரும் திருப்தியடையக் கூடியவாறான ஒரு நிலைமையை ஏற்படுத்துவதற்காக செயற்படுவதாகும். அதன் மூலம் மோதலுடன் தொடர்புடைய தரப்பினரின் மனப்பாங்குகள், நடத்தைகள் போன்ற அம்சங்கள் மாற்றத்துக்கு உள்ளாகுவதில் குறைந்த அளவு கவனமே செலுத்தப்படும். மோதல் நிலைமாற்றத்தினூடாகவே இக்குறைபாட்டிற்கு பரிகாரம் காணப்படும்.

மோதல் நிலை மாற்றத்தை மூன்றுவிதமாக வரைவிலக்கணப்படுத்தலாம்

01 ஒட்டுமொத்தமோதல் சூழமைவை (CONTExT) மாற்றியமைத்தல்

02 மோதல் தரப்பினரின் தொடர்புகளை மாற்றியமைத்தல்.

03 வலுவூட்டலுக்கூடாக (EMPOWERMENT) மோதலுடன் தொடர்புடைய ஆட்களின் மட்டங்களை மாற்றியமைத்தல்.

இதற்கமைய மோதல் நிலைமாற்றத்தின்போது மோதலுடன் தொடர்புடைய சமூக, அரசியல் மூலங்களின்பால் விரிவாக கவனஞ்செலுத்தவேண்டி ஏற்படும் அதன் மூலம் மோதல் தொடர்பான உடன்பாடற்ற (-) வேறுபாடுகள் உடன்பாடான (+) வேறுபாடுகளாக மாற்றியமைக்கப்படல்

**முற்றும்**

# பங்களாதேஷின் சிற்பி முஜீபூர் ரகுமான் 94வது பிறந்ததினம்



வங்கம் தந்த சிங்கம் முஜீபூர் ரகுமானின் பிறந்ததினம் மார்ச் மாதம் 17ம் திகதியாகும். தற்போது பங்களாதேஷ் என அழைக்கப்படுகின்ற முன்னைய கிழக்கு பாகிஸ்தானில் பரிதூர் மாவட்டம் தங்கியாரா என்ற கிராமத்தில் 1920ம் ஆண்டு மார்ச் மாதம்17ம் திகதி பிறந்தார்.

1947ம் ஆண்டு மே மாதம் 17ம் திகதி பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்து சுதந்திர நாடாகியது. இதன் போது கிழக்கு பாகிஸ்தானும் முஸ்லீம் பிரதேசம் என்ற வகையில் பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டது. தற்போதைய பாகிஸ்தான் மேற்கு பாகிஸ்தான் என்றும் தற்போதைய பங்களாதேஷ் கிழக்கு பாகிஸ்தான் என்றும் அழைக்கப்பட்டது. இரண்டிற்குமிடையே 1500மைல் நீளத்தில் இந்தியா இருந்தது. நிலத் தொடர்ச்சியற்ற நாடாகவே பாகிஸ்தான் விளங்கியது.

கிழக்கு பாகிஸ்தானில் வாழும் மக்கள் வங்காள மொழியைப் பேசினர். பாகிஸ்தானின் முதலாவது பிரதமரான முகமது அலிஜின்னா பாகிஸ்தானின் ஆட்சி மொழியாக உருது மொழியை அறிவித்தபோது கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் அதிர்ப்தியுற்றனர்.

இந்த அறிவுப்புக்கு எதிராக மாணவர் இயக்கத் தலைவர்களில் ஒருவராக முஜீபூர் ரகுமான் மக்களை இணைத்து பல போராட்டங்களை நடாத்தினார். இதே வேளை கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த மௌலானா பாஷானி பாகிஸ்தான் முஸ்லீம் லீக்கிற்கு எதிராக அவாமி முஸ்லீம் லீக் என்ற கட்சியை 1949ல் உருவாக்கினார். முஜீபூர் ரகுமான் இக் கட்சியின் பொதுச்செயலாளரானார்.

சட்டத் தரணியாக இவர் சட்டத் தொழிலைப் பார்க்காமல் முழுநேர விடுதலைப் போராளியானார். கிழக்கு பாகிஸ்தானின் வளங்கள் சூறையாடப்படுவதை எதிர்த்தார். தலைவரும் செயலாளரும் கைது செய்யப்பட்டனர். விடுதலையாகி வெளியே வந்தபோது அவாமி முஸ்லீம் லீக் என்ற கட்சியின் அனைத்து மதப் பிரிவினரையும் இணைக்கும் வகையில் அவாமி லீக் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. கிழக்கு பாகிஸ்தானில் வாழ்ந்த இந்துக்களும் அவாமி லீக்கில் இணைந்து கொண்டனர். அனைவரையும் இணைத்த ஒரு தேசிய இயக்கமாக அவாமி லீக் வளர்ச்சி கண்டது.

1970ம் ஆண்டு டிசம்பர் மாதம் பாகிஸ்தான் முழுவதற்குமான தேர்தல் இடம்பெற்றது. கிழக்கு பாகிஸ்தானுக்கு பூரண சுயாட்சி கோரி ஆறு அம்சத் திட்டத்தை முன்வைத்து அவாமி லீக் தேர்தலில் போட்டியிட்டது. தேர்தலில் அவாமி லீக் வெற்றியடைந்த போதும் ஆட்சி பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. 1971 மார்ச் மாதம் 24ம் திகதி கிழக்கு பாகிஸ்தானிலிருந்த இராணுவத்திடமிருந்து ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதோடு மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்த இராணுவத்தினர் கிழக்கு பாகிஸ்தானில் இறக்கப்பட்டனர்.

முக்தி பாஹினி என்ற ஆயுத இயக்கம் உருவாக்கப்பட்டது. அது பாகிஸ்தான் இராணுவத்திற்கு எதிராக ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டது. 1971ம் ஆண்டு ஏப்பிரல் 24ம் திகதி முக்திபாஹினி இயக்கம் சுதந்திர பங்களாதேஷ் பிரகடனத்தை விடுத்தது. ஆனாலும் இந்தியா உடனடியாக அதனை அங்கீகரிக்கவில்லை. ஒரு கோடி மக்கள் இந்தியாவிற்குள் தஞ்சம் புகுந்தனர். இந்திராகாந்தி இந்திய இராணுவத்தை பங்களாதேஷிற்குள் அனுப்பினார். பாகிஸ்தான் இராணுவம் சரணடைந்தது. 1971ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ம் திகதி பங்களாதேஷ் சுதந்திரமடைந்தது. இந்தியா உட்பட பல நாடுகள் சுதந்திர பங்களாதேஷினை அங்கீகரித்தன. முஜீபூர் ரகுமான் பங்களாதேஷின் முதலாவது ஜனாதிபதியானார். சிறிது காலத்தின் பின்னர் அவர் பங்களாதேஹின் பிரதமரானார்.

எனினும் அங்கு நடைபெற்ற இராணுவப் புரட்சியில் முஜீபூர் ரகுமான் கொல்லப்பட்டார். அவரது குடும்பத்தைச் சேர்ந்த பலரும் கொல்லப்பட்டனர். தற்போதைய பிரதமர் ஷேக் ஹசீனா மட்டும் தப்பியிருந்தார். இந்திய - பாகிஸ்தான் முரண்பாட்டிற்கு ஒரு விடுதலை இயக்கத்தலைவர் பலியானார்.

தென்னாசியாவில் தேசிய இனப்பிரச்சினை முன்வைத்து முதன் முதலில் விடுதலை பெற்ற நாடு என்ற வகையில் முஜீபூர் ரகுமானின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

### இலங்கையின்...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை என்ற ஆட்சி அதிகாரக் கட்டமைப்புக்குள் தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்குவதாயின் நான்கு முக்கியமான விடயங்கள் அதில் கட்டாயம் அடங்குதல் வேண்டும் என தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அவற்றில் முதலாவது விடயம் அதிகார அலகாகும். இந்த வடக்குகிழக்கு இணைந்ததாக இருக்கவேண்டும் என்பது தமிழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. தமிழ் மக்கள் தமது கூட்டிருப்பையும் கூட்டுரிமையையும் பேணுவதற்கு இந்த இணைப்பு மிக மிக அவசியமானதாகும். வடகிழக்கில் முஸ்லிம் மக்களுக்குத் தனியான அதிகார அலகு கொடுப்பதையிட்டு தமிழ் மக்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. முஸ்லிம் மக்கள் ஒரு சமூகமாக தமது அடையாளங்களைப் பேணுவதற்கும், கூட்டிருப்பினை பாதுகாப்பதற்கும், கூட்டுரிமையைப் பெற்றுக் கொள்வதற்கும் தனியான அதிகார அலகு அவர்களுக்கு அவசியமானதாகும்.

இரண்டாவது விடயம் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கக் கூடிய அதிகாரங்களாகும். மத்திய அரசில் சம வாய்ப்புக்களோடு கூட்டு அதிகாரத்தினை மேற்கொள்ளக்கூடிய கட்டமைப்பு உருவாகப்போவதில்லை. இதனால் மத்தியரசு என்பது சிங்கள அரசாகவே இருக்கப்போகின்றது. கூட்டு அதிகாரம் இல்லாத நிலையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கு அதிகளவு பகிர்வு அதிகாரங்கள் தேவையாகவுள்ளன. இந்த அதிகாரங்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பேணுவதாக இருத்தல் வேண்டும்.

(23ஆம் பக்கம் பார்க்க)

# நூல் அறிமுகம்

## மரணம் – இழப்பு – மலர்தல்

மரணம்-இழப்பு-மலர்தல்
இழப்பிலிருந்து வளர்ச்சியை நோக்கி ஒரு பயணம்.
தொகுப்பு – மீராபாரதி
வெளியீடு – பிரக்ஞ்சை

இழப்பிலிருந்து வளர்ச்சியை நோக்கிய ஒரு பயணமாகவே மீரா பாரதியின் மரணம் -இழப்பு - மலர்தல் வெளிவந்திருக்கின்றது. சிறு வயதிலிருந்தே பல மரணங்களை சந்தித்துக் கொண்ட நூலாசிரியர் அதன் விரக்தியின் வெளிப்பாடாகவே இதனைப் படைத்திருக்கிருக்கின்றார்.

மரணம், இழப்பு, துயரம், சோகம், துக்கம், அஞ்சலி, நினைவஞ்சலி போன்றன தொடர்பாக புலமைசார் துறைகளில் விஞ்ஞான பூர்வமாக கற்பதை மரண வியல் அல்லது இறப்பியல் என கூறப் படுகின்றது. இதனையே நூலின் தலைப்பு சுட்டிக்காட்டுகின்றது. அத்தோடு மரணங் கள் பல வகைப்படும். இவ்வாறான மர ணங்களினால் மனிதர்களுக்கு இழப்பு ஏற்படுவ தோடு அதிலிருந்து விடுபட்டு மாற்று வழியினூடாக வளர்ச்சியை நோக்கி பயணிக்க வேண்டும் என்பதையே அடிப் படையாக கொண்டுள்ளது.

167பக்கங்களைக் கொண்ட இந்நூல் முக்கிய பல தலைப்புக்களை கொண்டு காண ப் படுகின்றது. மரணம் ஒவ்வொரு கண மும் உய்தல், என்னுரை - எதற்காக இந்த நூல், மரணம் இழப்பு மலர்தல் ஒரு அறி முகம், மரணம் துயரமும் அஞ்சலியும் அடிப் படை மனித உரிமைகள்... மரண இழப்பும் துயரமும் குழந்தைகளின் எதிர் காலமும், மரண குழந்தைகளுடன் ஒரு உரையாடல், தற்கொலை ஒரு வரலாற்று பார்வை, தற்கொலை தடுக்க முடியுமா?, மரண சடங்குகள் சமூகங்களின் நம்பிக்




கைகள் பழக்கவழக்கங்கள், மரணம் வெளிப்படுத்த முடியாத சோகங்களும் அஞ் சலிகளும், தமிழ் தேசம் இழப்பிலிருந்து விடுதலை நோக்கி. மரணம் இழப்பிலிருந்து மீண்டும் வாழ்தலை நோக்கி. தேசிய துக்க நாள், மரணித்தவர்களுக்கான மரியாதை யும் இழந்தவர்களின் வாழ்வை மேம்படுத் தலும், மீண்டும் தேசம் நோக்கி செல்வோம், மரணம் ஒரு அனுபவம், ஒரு கொலை, மரணம் எதிர்ப்பை எதிர்கொள்ளல், கொலை செய்தவர்கள் யார்?, ஒரு மனிதர் ஒரு இழப்பு, இதனைப் போல இறப்பது ஒரு கலை போன்றவையாக அவை உள்ளன.

*மரணம்.... ஒவ்வொரு கணமும்...*

*மரணம்*
*ஒரு நிகழ்வு...*
*ஒவ்வொரு கணமும்*
*நடைபெறுகின்றது...*
*நாம் எதிர்கொள்கின்றோமோ?*
*இல்லையோ?*
*அது நம்முடன் இருக்கின்றது.*
*வாழ்கின்றது.*
*நம் மூச்சைப் போல*

*இறப்பது ஒரு கலை மரணம்*
*மகிழ்ச்சியானது...*

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக ஈழத்து தமிழர்களின் வீட்டு வாசல்களில் மரணம் காத்திருக்கின்றது. இது ஆயுதங் களால் செயற்கையாக முன்னெடுக்கப்படும் மரணங்கள். இந்த ஆயுதங்கள் கைகளில் இருந்திருக்காவிட்டால் பல மரணங்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். இனியும் தவிர்க்க வேண்டும். தடுக்கப்படவும் வேண்டும் (பக்கம்-165) என மீரா பாரதி கூறுகின்றார்.

- T.J.தமிழ்

# நல்லிணக்க ஆணைக்குழுவினது கால வரையறைக்குள் ஐ. நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை முடக்கப்பட்டுள்ளமை கவலையளிக்கின்றது

**- குமாரவடிவேல் குருபரன்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இலங்கைத் தீர்மானம் தொடர்பிலான தமிழ் சிவில் சமூக அமையத்தின் (Tamil Civil Society Forum) அறிக்கை

27 மார்ச் 2014 அன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையால் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னத்தை தமிழ் சிவில் சமூக அமையம் கருத்தில் கொள்கிறது. இந்த தீர்மானத்தை முன் மொழிந்த நாடுகள் மற்றும் அதை ஆதரித்து வாக்களித்த நாடுகளினது முயற்சியை வரவேற்கின்றோம். முழுத் தீர்மானம் தொடர்பில் வாக்களிப்பில் கலந்து கொள்வதில்லை என்ற இந்திய அரசாங்கத்தின் முடிவும், குறிப்பாக ஐ. நா. மனித உரிமை ஆணையாளருக்கு விசாரணை அதிகாரங்களை வழங்கும் பந்தி தொடர்பில் எதிர்த்து வாக்களித்த இந்திய அரசாங்கத்தின் முடிவும் எமக்குப் பெரும் ஏமாற்றத்தை அளிக்கின்றது.

சர்வதேச விசாரணைகளை நடாத் துவதற்கு காத்திரமான ஓர் பொறி முறையை - சர்வதேச விசாரணை ஆணைக்குழு ஒன்றை - இத் தீர் மானம் உருவாக்கவில்லை என்பது எமக்குப் பெரும் ஏமாற்றத்தை அளிக் கின்றது. மேலும் நல்லிணக்க (LLRC) ஆணைக்குழுவினது கால வரையறைக் குள் ஐ. ந. மனித உரிமை ஆணை யாளர் அலுவலகத்தின் விசாரணை முடக்கப்பட்டுள்ளமை கவலையளிக்கி ன்றது. தொடர்ந்து நடைபெற்றுக் கொண் டிருக்கும் மீறல்களை விசாரிப்பதற்கு ஆணையாளரின் அலுவலகத்திற்கு வெளிப்படையாக இந்தத் தீர்மானத்தில் ஏற்பாடுகள் இல்லை என்பது வருத்தத்துக் குரியது.

தீர்மானத்தின் பந்தி ஆறு 13ஆம் திருத்தத்தை பற்றிப் பேசுகிறது. 13ஆவது திருத்தம் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அரசியல் தீர்விற்கான அடிப் படையாக ஒருபோதும் அமையாது என்பதை மீளவலியுறுத்த விரும்பு கிறோம். தீர்மானத்தின் முகவுரைப் பந்திகள் இலங்கையில் உள்ள பிரச்ச னைகள் தொடர்பில் முன்வைக்கும் விளங்கிக்கொள்ளல், தமிழ் மக்களின் பிரச்சனைகளின் தனித்துவமான தன் மையை விளங்கிக் கொள்வதாக இல்லை என்பது ஏமாற்றம் அளிக்கின்றது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், அதற்கான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழலில் கூட தமிழ் மக்களது பிரச்சனைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருகின்றன என் பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். தமிழ் மக்களுக்கெதிராக நாளாந்தம் கட்ட விழ்த்து விடப்படும் துயரங்களில் இருந்து அவர்கள் விடுபடுவதற்கு துணிச்சலான,



திடகாத்திரமான, தீர்க்கமான முடிவுகளை சர்வதேச சமூகம் எடுக்கவேண்டும் எனச் சுட்டிக்காட்டவிரும்புகிறோம். யாழ்.சிவில் சமுகப்பிரதிநிதியும் யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரி வுரையாளருமான குமாரவடிவேல் குரு பரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

# தமிழ் நாட்டில் ஆளுநர் மாளிகை முற்றுகை

தமிழகத்தில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் சேர்ந்து மார்ச் 24ம் திகதி காலை 11 மணியளவில் சென்னை ஆளுநர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டத்தினை நடாத்தினர்.

இப்போராட்டத்துக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் கொளத்தூர் மணி அவர்கள் தலைமை தாங்கினார்.

தந்தை பெரியார் கழகத்தின் பொதுச் செயலாளர் கு.ராமகிருட்டிணன், சேவ் தமிழ் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் செந்தில், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தோழர் தியாகு, தமிழ்நாடு மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த இளையராஜா ஆகியோர் போராட்டத்தை முன்நின்று நடாத்தினர்.

இப்போது ஐ.நா மன்றத்தில் முன்மொழி யப்பட்டுள்ள தீர்மானத்தில் நீர்த்துப் போகும் நடவடிக்கைகள் எதனையும் இந்திய அரசு செய்யக்கூடாது. இலங்கை அரசு ஈழத் தமிழர்கள் மீது புரிந்த இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் மீதான சுதந்திரமான பன்னாட்டுப் புலனாய்வு ஆணையம் அமைத்திட ஐ.நா.மனித உரிமை மன் றத்தில் இந்திய அரசு உடனடியாக வகை செய்யவேண்டும் என்கின்ற இரண்டு கோரிக்கைகளை பிரதானமாக வலியுறுத் தியே இப் போராட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டப் பேரணி ஆளுநர் மாளிகையை நோக்கி முன்னேற முயன்ற போது பல்வேறு தமிழ் இயக்கங்கள் அமைப்புக்களைச் சேர்ந்த அனைவரும் சைதாப்பேட்டை நீதிமன்றம் முன்னால் வைத்து கைது செய்யப்பட்டு பஸ்களில் ஏற்றப்பட்டனர். இவர்கள் அனைவரும் தற்போது நந்தனம் YMCA மைதானத்தில் உள்ள அரங்கத்தில் தங்க வைக்கப்பட்டு விசாரணையின் பின் விடுதலை செய்யப் பட்டனர். இப்போராட்டத்தை முன்னிட்டு 300க்கும் மேற்பட்ட பொலிஸார் அப்பகுதி யில் குவிக்கப்பட்டனர்.



பெல்லட் டர்
தமிழில் - ராம்முரளி

# வாழ்க்கையை நிமிடங்களுக்குள் அடைத்துவிட முடியாது




முப்பது நீண்ட கறுப்பு வெள்ளை காட்சிகளின் கோர்வையான 'தி டூரின் ஹார்ஸ்' திரைப்படத்தை நிறைவுசெய்த கையோடு திரையுலகிலிருந்து விடை பெறுவதாக அறிவித்துள்ளார். ஹங்கேரிய திரைப்பட இயக்குனர் பெல்லட்டர். அவரது இந்த அறிவிப்பு தீவிர உலக சினிமா ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவரது ரசிகர்களை இது துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. பெல்லட்டர் சமகால நவீன சினிமாவில் தனித்து இயங்கிய மாபெரும் ஆளுமை, பெரும்பாலும் கறுப்பு வெள்ளை களங்களுக்குள்ளாகவே இயங்க விரும்பிய அவர் மிக நீண்ட காட்சிகளுக்கும் அதிக சப்தமெழுப்பாத மெல்லிய காட்சி அமைப்புக்களும் பிரசித்தி பெற்றவர் பெல்லட்டர் படங்களை பார்த்து இரசித்தவர்கள். . தியான நிலைக்கு ஒப்பானது என்பார்கள் ஏழு மணிநேரம் தொடர்ந்து ஓடக்கூடிய அவரது 'சாடேன்ஸ் டேங்கோ' திரைப்படம் உலக புகழ்பெற்றது.

1977இல் 'ஃபெமிலி நெஸ்ட்' எனும் படத்தின் மூலம் இயக்குனராக அரிதாரம் பூசிக்கொண்ட பெல்லட்டர். 2011ல் 'தி டூரின் ஹார்ஸ்' படத்துடன் தனது திரை உலாவை நிறைவு செய்தபோது அவரது வயது 56. அவரது திரையுலக சாதனைகளை பாராட்டி சமீபத்தில் ஐஸ்லாந்தில் நடைபெற்ற ரேக்ஜாவிக் சர்வதேச திரைப்பட விழாவில் பெல்லட்டருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. திரைப்படப் பள்ளி ஒன்றில் இணைந்து தற்போது மாணவர்களுக்கு சினிமாவை புகட்டிக்கொண்டிருக்கிறார் பெல்லட்டர்.

அவரிடம், திரைப்பட விமர்சகர் 'எரிக் கோன்' மேற்கொண்ட நேர்காணலின் தமிழ் வடிவம் இது.

**உங்களது ஆர்ப்பாட்டமில்லாத மெதுவான திரையுலக பயணம் முப்பது வருடங்களை கடந்துவிட்ட பின்பும் நீங்கள் உலகின் ஆகச் சிறந்த இயக்குனராக சினிமா ஆர்வலர்களால் தொடர்ந்து போற்றப்படுகின்றீர்கள். உங்களது படங்களை பார்த்து காத்திருப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது. இந் நிலையில் திடீரென்று சினிமாவிலிருந்து விலக நீங்கள் முடிவு செய்ததன் காரணமென்ன?**

நீங்கள் சொல்வது சரியானதுதான். ஆனால் சினிமா படைப்பாளி என்பவன் இக்காலங்களில் முதலாளித்துவத்தின்





அடி வருடியாகவும் அரசுக்கு சேவகம் செய்பவனாகவும் மெல்ல உருமாறிக் கொண்டிருக்கிறான். நான் அப்படிப்பட்ட கீழ்த்தரமான செயலை செய்ய விரும்பவில்லை. நவீன கலை உலகம் வகுத்துக் கொண்டிருக்கும் சினிமா கலைஞனுக்கான அடையாளங்களில் எதனோடும் என்னால் ஒன்றிட முடியாது. நான் மக்களின் பக்கமே நிற்கவிரும்புகிறேன். இந்த முப்பத்து நான்கு ஆண்டுகளில் நான் இயக்கிய படங்கள் யாவுமே மக்களுக்கு நான் சொல்ல நினைத்த செய்திகள் தான். இப்போது அவற்றை முழுமையாக நிறைவு செய்துவிட்டதாகவே கருதுகிறேன். மக்களுக்கான எனது கருத்துக்களை தொடர்ந்து திரைப்படங்களில் புகுத்தி இன்னும் நூறு படங்களை என்னால் இயக்க முடியும். ஆனால் எனது படங்களையே மீண்டும் மீண்டும் நகலெடுத்து மக்களை துன்புறுத்த விரும்பவில்லை.

**திரைப்படங்களிலிருந்து ஓய்வு பெற வேண்டுமென்று முதன்முதலாக எப்போது உங்களுக்கு தோன்றியது?**

2008ல் ஒரு நேர்காணலுக்கு பதிலளித்துக் கொண்டிருந்தபோது அப்படி ஒரு முடிவுக்கு வந்தேன். இனி ஒரே ஒரு திரைப்படத்தை மட்டும் இயக்கிவிட்டு அதோடு சினிமாவிலிருந்து விலகிவிடலாம் என்று தீர்மானமாக முடிவு செய்திருந்தேன்.


**டூரின் ஹார்சை நீங்கள் இயக்கும்போதே அது உங்களுடைய கடைசி படம் என்று தெரிந்துதான் அதனை இயக்கி முடித்தீர்களா?**

ஆமாம். எல்லோருக்குமே தெரியும் என் ஒட்டுமொத்த குழுவினருக்கும் ஆனால், அவர்கள் என்னிடம் நான் மேலும் சில படங்களை இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர். என் முடிவிலிருந்து நான் பின்வாங்க வேண்டுமென்று பலரும் தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருந்தனர். நான் அவர்களிடம் தெளிவாக சொல்லிவிட்டேன் "டூரின் ஹார்ஸ்" எனது இறுதிப்படம் அதில் எவ்வித மாற்றமும் இல்லையென்று.

**உங்களது தனித்துவமான திரைப்பட பாணியை பற்றி பொதுவாக எழும்போது நீங்கள் 'டேம்நேஷன்' படத்திலிருந்து கறுப்பு வெள்ளையில்படமாக்குவதையே தொடர்ந்து பின்பற்றி வந்திருக்கிறீர்கள் அத்தோடு உங்கள் படங்களில் நீண்ட காட்சிகள் மெதுவாக ஒலிக்கும் வர்ணனைகளும் தொடர்ந்து பயன்படுத்துவதாக எல்லோரும் சொல்கிறார்கள் ஆனால் உங்களது சில தொலைக்காட்சி படங்களும் உங்களது முழு நீள முதல் திரைப்படமான ஃபெமிலி நெஸ்ட்டும் மிகக்குறைவான நிமிடங்களில் படமாக்கப்பட்டுள்ளன. இந்த வேற்றுமைக்கு என்ன காரணம்?**

திரைப்படங்களை இயக்க துவங்கிய ஆரம்ப காலகட்டத்தில் நான் இந்த மக்களின் மீது பெருங்கோபத்தில் இருந்தேன். ஏன் எப்போதும் மக்கள் பொறுப்பற்று இயங்குகிறார்கள் என்று எனக்குள் நானே பலமுறை வருந்தியிருக்கிறேன். அதனை என் திரைப்படங்களிலும் வெளிப்படுத்த விரும்பினேன். ஆனால் பிறகுதான் இது வெறும் மனிதர்களின் தவறு அல்ல. இது பிரபஞ்சத்தின் தவறு என்று புரிந்து கொண்டேன். முழு பிரபஞ்சமும் அழுக்கில் ஊறிக்கிடக்கின்றது என்பதை மெல்லமெல்ல உணரத் துவங்கினேன். அதனால் என்னுடைய திரைப்பட பாணியும் உருமாறத் துவங்கியது. நான் சிறிதுசிறிதாக உள்ளிறங்கி செல்லத் துவங்கினேன். இந்த இறக்கம் நானறிந்திராத வேறொரு தத்துவத்தை எனக்கு போதித்தது.

**உங்களது முதல் படமான பெமிலி நெஸ்ட் நிறைய அண்மைக் காட்சிகளால் படமாக்கப்பட்டிருந்தது. ஆனால் அதன் பிறகான உங்களது படங்களில் நீங்கள் புற உலகிற்கு அதிக முக்கியத்துவம் அளித்திருக்கிறீர்கள். உங்களுக்குள் நிகழ்ந்த இந்த விரைவான மாற்றம் எப்படி சாத்தியமானது?**



ஆனால் ஒட்டுமொத்தமாக எனது படைப்புகளை ஒன்றாக வைத்துப் பார்த்தால் உங்களால் ஃபெமிலி நெஸ்ட்டை அப்படி தனியே விலக்கமுடியாது. அவை அனைத்துமே என்னால் இயக்கப்பட்டவைகள் தானே. ஃபெமிலி நெஸ்ட்டையே கூர்ந்து பார்த்தால், எனது பிற்கால படங்களின் சாயலை அதிலும் உணரமுடியும்.

**டூரின் ஹார்ஸின் தொடக்க காட்சியில், பனி திரையை கிழித்துக்கொண்டு வரும் சோர்ந்துபோன குதிரையையும் குதிரை ஓட்டியையும் பல்வேறு கோணங்களில் நீண்ட காட்சியாக பதிவு செய்திருந்தது குறித்து சினிமா ஆய்வாளர்கள் பலரும் பலவிதமாக பேசிக்கொள்கிறார்கள் அக்காட்சி குறித்த உங்களது விளக்கம் என்ன?**

முதலில் நீங்கள் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். அக்காட்சி உண்மையில் மிகமிக சாதாரணமானது தான். நாம் ஒரு படத்தை இயக்குகிறோம் என்றால் அதன் தொடக்க காட்சி மிகமிக முக்கியமானது. நான் என் கதைக் களத்தின் கனத்தை தாங்கும்படியாக அந்த தொடக்க காட்சியை வடிவமைத்தேன் குதிரையையும் குதிரை ஓட்டியையும் அதனால்தான் நீண்ட நேரம் பயணிக்கவிட்டு அதனை படமாக்கினேன். அக்காட்சியில் குறிப்பிட்டு சொல்லும்படியாக எந்தவொரு சிறப்புமில்லை.

**ஆனால் 'டூரின் ஹார்ஸ்' அடிபட்ட குதிரை ஒன்றிற்கான நீட்சேவின் கருணையை பற்றி உலவிய கட்டுக்கதைகளை குறித்த படமென்பதால் அந்த தொடக்க காட்சிக்கு இன்னும் அதிக அழுத்தமும் முறையான விளக்குதலும் அவசியமில்லையா?**

நீங்கள் ரொம்பவும் செயற்கைத்தனமாக சிந்திக்கிறீர்கள் டூரின் ஹார்சை இதயத்தால் மட்டும் உணருங்கள். விசாரணைகளும், விளக்கங்களும் அப்படத்திற்கு அவசியமே இல்லாதது. நான் ஒரு படத்தை துவங்கும் முன்பாகவே ஒட்டுமொத்த காட்சிகளும் எப்படி திரையில் குவியப்போகின்றன என்பதை உணர்ந்தே தான் துவங்குகிறேன். அதன் ஒவ்வொரு அங்குலமும் முன்பே கச்சிதமாக திட்டமிடப்பட்டு பின்புதான் காட்சி ஆகின்றது.

**நீங்கள் ஏன் தொழில்முறை நடிகர்களை உங்கள் படங்களில் பயன்படுத்துவதில்லை?**

நான் ஒரு காட்சியை உருவாக்கும்போதே, என் மனதில் அதில் பங்குபெறப்போகும் மனிதர்களின் முகங்கள் தோன்றி மறையும். அது நிச்சயமாக தொழில்முறை நடிகர்களின் முகமல்ல. எனக்கு இயல்பான மனிதர்கள்தான் தேவைப்படுகிறார்கள் அவர்களிடமிருந்து வெளிப்படும் கோபத்தில் அன்பில் கருணையில் போலித்தனம் இருப்பதில்லை. அதனாலேயே நான் அவர்களை விரும்புகிறேன்.

**உங்களுடைய சினிமாவை திரையரங்கம் அல்லாத வேறு இடங்களில் மக்கள் பார்க்கும் போது உங்கள் மனநிலை எப்படி இருக்கும்?**

நிச்சயமாக நான் அதனை வெறுக்கிறேன் இது போன்ற செயல்கள் எந்தவொரு படைப்பாளியையும் காயப்படுத்தவே செய்யும். என்னுடைய சாடேன்ஸ் டேங்கோ படத்தை ஒருவர் மொபைல் போனில் பார்க்கிறார் என்பதை போல என்னை அவமானப்படுத்தக்கூடிய செயல் வேறெதுவுமில்லை. எந்தவொரு சினிமாவும் இருண்ட திரையரங்கில் தரிசிப்பதற்காகவே படைக்கப்படுகின்றன.

**உங்களுடைய அனைத்து படங்களும் தியானத்தில் ஆழ்ந்திருப்பதை போன்ற மனநிலையை பார்வையாளர்களிடம் விதைக்கின்றன. இது முன்பே முடிவு செய்து உருவாக்கப்படுகின்றதா?**

இல்லை இல்லை, நிச்சயமாக இல்லை. சினிமா இயக்குவதை போன்ற கடினமான பணி வேறெதுவுமில்லை. நீங்கள் அனைத்தையும் எப்போதும் உங்கள் கைகளில் சுமந்து கொண்டிருக்க வேண்டும். நேரத்தோடும் வானிலையோடும் பணத்தோடும் தொடர்ந்து நீங்கள் போராடிக் கொண்டே இருக்கவேண்டும்.

நன்றி - அம்ருதா

# ரணங்கள் மறந்திட


தீப்பிளம்பில் நெருப்புத்தணல் சுவாசித்தது..
மயக்கமில்லா அறுவைச் சிகிச்சையில் ரணமாகி..
சாவின் விழுமியங்களில்
கண்ணீர் வற்றி மலர்தூவி பயணித்த
நெடுந்தூரப் பயணம் எம் பயணம்!
நா வறள குட்டைத் தண்ணீர் ருசி பார்த்து
பட்டினி பிரசவத்தை வரிசையில்
கை நீட்டி பிரசவித்து
அழுத கண்ணீர் கதைகள்,
மீள் நினைவில் அரங்கேறிட..

நெடுந்தூரமாய் எறும்பு வரிசையில்
எம் பயண யாத்திரை
ஊர்வலமாய் பெருமூச்சோடு!
குட்டிக் கனவுகள் நிழலாட..
ஆசையில் அரவணைக்கும்
உறவின் மிச்சங்கள் கூட,
தொலைதூர கடின சூத்திரத்தின்
மௌன வேலிக்குள் முடங்கிட..
தொடரும் பிரிவின் நீட்சிப்பயணம்
கூடார அரவணைப்பில்
மீண்டும் அவல யாத்திரை
அண்மையில்தான் சொற்ப உறவுகளின்
சுதந்திர சுவாசிப்பின் அரங்கேற்றம்
பிறந்த மண்ணில்
முத்துமிடல் புகுவிழா ஆரம்பம்
கொடியேற்ற திருவிழா அங்குரார்ப்பணம்
ஆனால்......
நம்மவர் வாழ்வின்
மகிழ்ச்சிப் பிரவாகம் எப்போது..!
தமிழனே!
நீ முடக்கப்பட்டதாக
நினைத்து ஏன் துன்புறுகின்றாய்!
விழுந்து விழுந்து எழுந்து தானே
நடையைப் பயின்று கொண்டோம்...
முதல் தோல்வியிலேயே
நீ துவண்டிருந்தால்-எப்படி
உன்னால் நடந்திருக்க முடியும்
தமிழா!
ரணங்கள் தான்
விடியலுக்கான ஒளி விளக்கு..
ரணங்கள் மறந்திட
புது வாழ்வு நிலைத்திட
சந்தோஷக்காற்று மண்ணில் வீசிட
அற்புத விடியலே மகிழ்ந்தாடி வா!
தமிழர் நாம் மகிழ்வுடன் வாழ..

- மாதகல் ஜமிலா -



# செல்வம்



நானே ஏழை
அந்த பூக்காரியை விடவும் தான்
அவளிடம் கொத்தாய் பூ
என்னிடம் ஏது
செல்வம் என்பது
உரிமை குறித்தெனில்
நானே ஏழை
ஆகாயக் கதிரவன் அசைமேகம்
மலையோடு காற்று
உரிமையாகிவிடுமோ
கதிரவன் ஒளி பொழிகிறான்
என்மீது
எனக்கென்று ஆகிவிடுமா?
புல்வெளி, செடிசேம்பு, வண்ணத்துப்பூச்சி
ஓடும் குதிரை நடப்பில் ஒட்டகம்
என்னது ஆவது எப்படி
செல்வம் எனதென்பது
மனிதர்களின்
செல்வம் மொத்தமாய்தான்

சீனக்கவிதைகள்
லூலு
தமிழாக்கம் - எஸ்ஸார்சி

# மரணத்தைப்பற்றிய கேள்வி

கனவுகள் இறக்கை
விரித்திருக்க
மரணத்தைப்பற்றிய கேள்வி
எழுந்தது

எழுந்து வியாபிக்க
எல்லா நிச்சயங்களும்
கேள்விக்குள்ளாகின

பனியில் காலடியெடுத்து
நடந்தேன்
சுற்றிவளைத்துக் குளிர்
களைத்து விழப் பனி
மலையெனச் சரிகின்றது

காலையில்
நான் இறந்திருந்தேன்

அருகில் யாரோ விட்டுப்போன
இரண்டு துளி கண்ணீர்

வார்த்தைகளிருந்து உடைந்து
விழுந்த சொல்லுமாய்
இறந்துகிடந்தேன்

- செழியன் கவிதைகள் -

சிறுகதை

# காலம் உனக்கொரு பாட்டெழுதும்

ரஞ்சகுமார்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருப்பிப்பார்த்தான் .

சுந்தரியக்கா!

விந்தி விந்தி நடக்கிற சுந்தரியக்கா! உதய காலத்தில் பஸ் பிடித்து வேலைக்குப்போய் மாலை மங்கி இருள் சூளும் நேரங்களில் வீட்டுக்குப் போய்ச்சேர்கிற சுந்தரியக்கா? அம்மா பதைபதைப்புடன் வாசலை பார்த்தபடியே நிற்பாளோ! இந்த விந்தல் கால் மட்டும் இல் லாவிட்டால் இந்திரன், சந்திரன் எல்லாரும் சுந்தரியக்கா பின்னால் வரிசையாக காத்து நிக்க மாட்டாங்களோ? உதயகாலத்தில் பஸ் பிடித்து வேலைக்குப்போய் இருட்டிய பிறகு வீட்டிற்குப் போய்ச்சேர உறுதியுடன் பழக்கப்படுத்திக் கொண்டாள் சுந்தரியக்கா.

சுந்தரியக்கா இவனையே பார்த்தபடி நிற்க இவன் பராக்குப் பார்ப்பவன் போல வேறெங்கோ பார்த்தான். பஸ் மெல்ல பள்ளத்தில் இறங்கிக் கொண்டிருந்தது. சுந்தரியக்கா மேலும் இவனை நெருங்கி நின்றாள். கைப்பையைத் திறந்து சில நோட்டுக்களை இவன் பொக்கேற்றுக்குள் திணித்தாள்.இவன் திரும்ப அவள் கையுக்குள் திணிக்க ஆற்றாமையுடன் இவனையே பார்த்தாள்.

"வச்சிரன்ரா"

"வேண்டாம் எனக்கொண்டும் வேண்டாம்."

சுந்தரியக்கா இவனை மேலும் கீழுமாக பார்த்தாள். பறட்டை பற்றிப்போன தலை முடியிலிருந்தது வெயிலிலும் மழையிலும் அலைந் துதிரிந்த கால்வரை செம்புழுதி படிந்திருந்தது. சாறத்தை உயரத் தூக்கி தொடை தெரியுமளவுக்கு முடிச்சுப்போட்டு இருந்தான் சேட் தோள் மூட் டில் பிரிந்திருந்தது .

"ஒரு சேட்டாவது வாங்கலாமெல்ல..."

"வச்சிரன்ரா"

"அங்கா பார் பஸ் வெளிக்கிடப் போகுது"

பெரிய கண்கள் சுந்தரியக்காவுக்கு. இவனை உறுத்துப்பார்த்தாள். கண்களுக்குள் இவனைச் சிறை பிடித்துக்கொண்டு போய் விடும் உத் வேகத்துடன் பார்த்தாள். கன்னங்கள் நனைத் துக்கொண்டு பாயுமாறு இரு வைரச் சொட்டுக்கள் உருகி வழிவதென சிந்தினாள்.

திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சுந்தரியக்காள் போனாள். கடைசி ஆளாக விந்தி விந்திப் போய் பஸ்சில் ஏறினாள். பின்புறக் கண்ணாடியூடாக இவனையே பார்த்துக்கொண்டு நின்றாள். இவன் தற்செயலாக திரும்புபவானென அந்தப் பக்கம் பார்த்தாள்.

பின்புறக் கண்ணாடி முழுவதும் விசாலித்த படி சுந்தரியக்காவின் பெரிய கண்களை கண் டான். இவன் சட்டென்று மறுபுறம் திரும்பி கொண்டான்.

"சொந்த உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்க மாட்டேன்" காற்றிடம் சபதம் செய்தான்.

இன்று எல்லாம் அசாதாரணமாக புதிய தோற்றம் காட்டின. திளைத்துக் குளித்த மேனி யைக் குளிர்காற்று தழுவிக் கொண்டு போயிற்று. இவன் வானத்தை நிமிர்ந்து நோக்கினான். 'பளிச்' செனும் நீலவானில் பஞ்சுப் பொதிகள் மிதப்பதென்ற அழகிய சித்திரைவானம் இன் றில்லை. மழைக்கோலம் காட்டிற்று. காற்று இறுக்கமாக இருந்தது. மெல்லமெல்ல கிழக்கு மூலையிலிருந்து இருண்ட மேகங்கள் பரவிக் கொண்டிருந்தன.

மைக்கேல் சேதி சொன்னான்.

"தெற்கு ரோட்டாலை சாமான் வருகுதாம்... நாங்கள் இடையில மாத்திக்கொண்டு வரவேணு மாம்..."

கோணாமலை விருட்டென எழுந்தான். பட பட வென சில உத்தரவுகளை போட்டான் .

"தெற்கு ரோட்டுத்தானே !... பயமில்லை... கனசாமான் வேண்டாம்... ஆளுக்கொண்டு போதும்..."

"பெருமாள் வெயிக்கிளை எடு... மழை வரும்போல கிடக்கு... சாமான் நனையாமல் கவனமாக மாத்த வேணும்..."

"யோசேப் இஞ்சேயே இருக்கட்டும்..."

பெருமாள் ஒரு அருமையான ட்ரைவர், ரோட்டுக்களை ஒவ்வொரு அங்குல அங்குலமாகப் படித்து வைத்திருந்தான். குண்டும் குழியுமாக இருக்கும் ரோட்டுகளிலே கியரை மாற்றாமலே ஒடித்து வெட்டியபடி பறந்து செல்ல முடியும் பெருமாளால்,

பெருமாளுக்குப் பக்கத்தில் கோணாமலை தாவி ஏறினான் அவனுக்குப் பக்கத்தில் பெரியண்ணன்.

இவன்... கேதாரி... அருள்... அன்பரசன்... மைக்கேல்... பின்புறம் புகுந்து கொண்டார்கள்.

இவன் கதவுக்குப்பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். பெருமாளைத்தவிர எல்லோருடைய உள்ளங்கைக ளிலும் பொத்தியபடி சாமான் இருந்தது. "ரெடி"யாக இருந்தார்கள் .

செம்புழுதியைக் கிளப்பியவாறு பாய்ந்து செல்லவாரம்பித்தான் பெருமாள். வானம் ஒரு முறை பெரிதாய் உறுமிற்று.

இன்னும் கொஞ்சம் தூரத்தில் மெயின் ரோட்டில் ஏறிவிடலாம். சட்டென்று செங் கோணத்தில் திரும்ப வேண்டும். பெருமாள் கியரை மாற்றுவதுக்கு ஆயத்தமானான். சந்திக்கும் இடத்தில் கிழட்டு ஆலமரத்தின் நிழலில் சனங்கள் கூடி நின்றார்கள். பெருமாள் வேகத்தைக் குறைத்துக் கொண்டான்.

கண்கள் பெரும் ஒளிவெள்ளத்தில் கூசின. உச்சியிலிருந்து கீழ்வானம் நோக்கி படர்கின்ற ஒரு கொடியாக மின்னல் பளபளத்தபடி இறங் கிற்று. வானம் மீண்டும் வஞ்சனையுடன் கனைத்தது. பெருமாள் தடுமாறினான். ஒரு கணம் நிதானித்தான்.

படபடவென ஏதோ முறிந்து விழுகின்ற சத்தம் கேட்டது. சனங்கள் விலகிச் சிதறினர். ஆலமரத்தில் பெரிய கிளையொன்று 'ஓ' வென அலறியபடி பூமியை அறைந்தது.

சனங்கள் முகத்தில் பெரும் குழப்பம் பரவிற்று. கோணாமலை "முன்னேபோ" என்றான். பெரு மாள் கிளச்சை ஊன்றி மிதித்தான்.

கோழை வழிகின்ற ஒரு நரைத்த கிழவன் கைகளை ஆட்டிக்கொண்டே முன்னே வந்தான்.

"மக்காள்"...

கோணாமலை என்ன என்னவெனப் பார்த்தான்.

"ஆல் முறிஞ்சு விழக்கூடாது மக்காள்... போற பயணம் ஆபத்து மக்காள்"

அருள் கெக்கெலி கொட்டிச் சிரிக்கவாரம் பித்தான்.

"எங்களுக்கு ஒவ்வொரு நிமிசமும் ஆபத்துதானே அப்பு!...

கிழவன் பரிதாபமும் பஞ்சாதாபமும் வழிய இவர்களைப் பார்த்தான்.

பெருமாள் லாவகமாக திரும்பியபடி மெயின் ரோட்டில் ஏறினான். மீண்டும் மின்னல் அடி வானம் நோக்கி இறங்கியது. காற்று மிகவும் கனமாக இறுக்கிக்கொண்டே போனது என்ன இது? இன்று எல்லாம் அசாதாரணமாக மாறிவிட்டன. தென்கிழக்கு மூலையிலிருந்து, இது சித்திரைமாதம் என்பதை மறந்துபோய், படு வேகத்தில் ஊதல்காற்று வீசிக்கொண்டிருந்தது.

"பெருமழை வரப்போகுது பெருமாள...

> சுந்தரியக்கா இவனை மேலும் கீழுமாக பார்த்தாள். பறட்டை பற்றிப்போன தலைமுடியிலிருந்தது வெயிலிலும் மழையிலும் அலைந்துதிரிந்த கால்வரை செம்புழுதி படிந்திருந்தது. சாறத்தை உயரத் தூக்கி தொடை தெரியுமளவுக்கு முடிச்சுப்போட்டு இருந்தான் சேட் தோள் மூட்டில் பிரிந்திருந்தது.
>
> "ஒரு சேட்டாவது வாங்கலாமெல்ல..."

கெதியா" பெருமாள் பலங்கொண்டு மிதித்தான்.

சனங்கள் பரபரத்தவாறு வீடுகளுக்குள் புகுந்து கொண்டிருந்தார்கள். பருவம் தப்பிப் பெய்யும் மழையை ஆச்சரியமும் ஆவலுமாக வரவேற்கும் பாவம் அவர்கள் முகங்களில் தெரிந்தது. இவர்களின் வான் உறுமிக்கொண்டே செல்வதை வாசல்களில் நின்று கவனமாகப் பார்த்தார்கள்.

கனத்த பெருந்துளிகளாக மழை இறங்க ஆரம்பித்தது. கண்ணாடி மங்கத் தொடங்கிற்று. கனவில் தெரியும் தோற்றமென ரோட்டும் மரங்களும் விசித்திரமாய் தோற்றம் காட்டின. பெருமாள் "வைபரை"ப் போட்டான்.

வேலை செய்யவில்லை...!

பெருமாள் இலகுவில் சளைத்து விடுபவனல்ல. கும்மிருட்டை ஊடுருவி பூனையைப் போல பார்க்க இவர்கள் பழக்கப்படுத்தப்பட்டவர்கள். கூர்ந்து பார்த்துக் கொண்டே போனான்.

என்ன மாதிரி ஒரு மழை! இவன் தனது வாழ்நாளில் காணாத மழை. புழுதி அடங் கிப்போகிற வாசனை மிகுந்தது. இவன் நாசி நிறைய வாசனையை வாங்கி அனுபவித்தான். காலைத்தூக்கி முன் சீட்டில் இலகுவாக வைத் துக்கொண்டான்.

சட்டென்று ரோட்டு வெறிச்சோடிப் போகிறது. ஏனோ? சனங்கள் எவரும் இல்லை . மழைதான் காரணமோ என்னவோ? எதிரே ஒரு வாகனம் கூட வரவில்லை. கொட்டும் மழையில் சளைக்காமல் நனைந்தபடி ஆடி ஆடிப்போன ஒரு கிழட்டு எருதைத்தவிர வெறிச்சோடும் ரோட்டு.

மூர்க்கத்தனமாக பூமியை மூழ்கடிக்கும் ஆவேசத்துடன் அம்புகளாக மழை வீழ்ந்து கொண்டிருந்தது. வானம் எச்சரிக்கிறமாதிரி அடிக்கடி பெருமிடிகளைக் கொடுத்தது. கூடவே உச்சியிலிருந்து கீழ்வானம் நோக்கி வானத்தை கூறுகளாகப் பிரிக்கும் கூர்வாளென பாயும் மின்னல்.

இவர்கள் எல்லோருக்கும் ஏனோ மயிர்க்கால்கள் குத்திட ஆரம்பித்தன. இதைவிட குருதியை உறையவைக்கும் குளிரை தாங்க இவர்கள் பழகிக் கொண்டவர்கள். ஆனால் இன்று என்னவாயிற்று? எலும்புக் குருத்துக்குள் ஊடுருவிப் புகுந்து கொள் கிற குளிர்.

அருள் கைகளை தேய்த்து சூடாக்கினான். நெஞ்சுக்குக் குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டான். இவனைப் பார்த்து இயல்பான தோழமையுடன் சிரித்தான். அருள் இன்று ஏனோ வழமையை விட அதிகமாக இளிக்கிறான். முகத் தில் ஒரு விசித்திரமான ஒளி பிறந்தது அருளுக்கு.

இவனுக்குள் ஏனோ திடீரென அம்மா, சுலோ அக்கா,சுந்தரி அக்கா எல்லோரும் உதித்தார்கள்.

மழையுடன் சேர்ந்து அம்மா மேனியில் மணக் கிற கற்பூரவாசனை வீசிற்று. மழையில் கற்பூரத்தை கரைத்தவன் எவன்?

(தொடரும்)



## வாசகர் கருத்து

**வாசகர்களை கவரக்கூடிய விடயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்**

"இது நம்தேசம் பத்திரிகை" தமிழ் மக்களின் அபிலாசைகளையும் சுயநிர்ணய உரிமைகளுக்கும் ஓங்கிக் குரல்கொடுத்து வருகின்றது என்பதில் நம் தேசத்தின் வாசகன் என்ற வகையில் பெருமைப்படுகின்றேன். இப் பத்தரிகையின் தொடர் கட்டுரைகள், சிறுகதைகள் மற்றும் ஏனைய பிரசுரங்கள் அனைத்தும் சிறப்பாகவுள்ளது.

எனினும் இப்பத்திரிகை அரசியலையே அதிகமாக அல்லது முழுமையாக கொண்டுள்ளது. இந்த நிலைகளை சற்று குறைத்து வாசகர்களைக் கவரக் கூடிய விதத்தில் உள்ளூர் விளையாட்டு செய்திகள் மற்றும் கேலிச்சித்திரங்கள், செய்திகளின் பாகுபடுத்தும் தன்மை என்பவற்றை உள்வாங்கும் பட்சத்தில் மேலும் சிறப்பான ஆதரவும் அங்கீகாரமும் தமிழ் மக்களிடம் இருந்து கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

அத்தோடு முஸ்லீம்களுடைய பிரச்சினைகளையும் உங்களுடைய எழுத்துக்கள் பின் நிறுத்தக் கூடாது என்பதையும் குறிப்பிடுவதோடு கட்டுரைகளின் முக்கிய பகுதிகள் கோடிட்டு காட்ட வேண்டும் மற்றும் புகைப்படங்களை தெளி வாக பிரசுரிக்கவும் பக்கச் சார்பு இல்லாமல் இன்று போல் என்றும் தமிழ் மக்களின் குரலாக ஒலிக்க வேண்டும்.

**பி.பிறிட்டோ**
**யாழ்.பல்கலைக்கழகம்**

.............................................................

**இது நம்தேசம் வெகுஜனப் பத்திரிகையாக இல்லை**

இது நம்தேசம் பத்திரிகை நன்றாக உள்ளது. முன்னேறிய பிரிவினருக்கு நன்றாக உதவக்கூடியது. முன்னர் வெளிவந்த திசைஇ சரிநிகர் என்பவற்றுடன் ஒப்பிடக்கூடியது ஆனால் கட்சி சாராதவர்களுக்கான படைப்புக்கள் மிகக்கறைவு. அடிமட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு போதிய இடம் கொடுக்கப்படவில்லை.இதனால் பத்திரிகை வெகுஜனங்களுக்கான பத்திரிகையாக இல்லை.

பத்திரிகை வெகுஜனத் தன்மை பெறுவது பற்றி ஆசிரியர்குழு சிந்திப்பது நல்லது. உள்ளூர் சம்பவங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சமூக விடுதலை பற்றியும் பேச வேண்டும். அரசியல் கல்வியூட்டலே அதிகம் வருகின்றது அதிலும் மாற்றங்கள் வேண்டும் உள்ளூர் தகமைகளை வளர்க்க உதவவேண்டும்.

**-நிலாந்தன்-**

**இது நம் தேசத்தின் இலக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா? அல்லது தமிழ்த் தேசியமா?**

"நல்லதொரு வாசகனே சிறந்த படைப்பாளியாக முடியும்" படைப்பாளி இல்லாமல் போனதற்கு வாசகன் பொறுப்பாளி இல்லை. வாசகனின் எண்ணங்களை அவன் படித்தவற்றை எழுதமுடியாத சூழலே வாசகனையும் படைப்பாளி உலகத்தையும் அழித்தது. இந்த வரைபுக்குள் 'இது நம் தேசம்' புதிய ஒரு தரிசனத்தை ஏற்படுத்த முனைவது மகிழ்சியான விடயம். கட்சிப் பத்திரிகை என்ற தோற்றப்பாட்டை கொண்டிருக்கும் பத்திரிகைகளுடன் ஒப்பிடும் போது சற்று வித்தியாசமான படைப்புலகத்தில் வாசகனை கொண்டு செல்கிறது. இதன் படைப்பு மட்டுமல்ல வடிவம் கட்டமைப்பு கட்டுரைகளை தேர்ந்தெடுத்துள்ள விதம் அவை கொண்டிருக்கும் உள்ளார்ந்த கருத்துக்கள் என பல விடயங்களில் மிக சுவாரசியமாகவுள்ளது.

ஊடக தர்மம் பேணப்படவேண்டும். கட்சிப் பத்திரிகை என்ற இறுமாப்புடன் செயல்படுவது சாதாரண வாசகனை திரும்பிப்பார்க்க வைக்காது. மேலும்எத்தகையபோலிகளையும் செய்தியாக்கவோ கட்டுரையாக்கவோ முடியும் என சாதனைபடைத்த பத்திரிகைகள் எங்கள் மத்தியில் இல்லாமலில்லை. அதனைக் கருத்தில் கொண்டு உண்மைகளுக்கு முன்னுரிமை கொடுத்து நியாயத்தை மதித்து பிழையை மட்டுமே கூறாது சரியையும் அதற்கான பராட்டையும் வெளிப்படுத்துவது நன்று. தமிழ்த் தேசியம் என்பதை இலட்சியமாகக் கொண்ட இது நம் தேசம் வெளிப்படுத்தும் போது திசைமாறி செல்வது போல் காணப்படுகிறது. பிற கட்சிகளை விமர்சிப்பது அவசியமானது தான். அதற்காக அதனையே ஓர் இலட்சியமாகக் கொள்ளவேண்டிய தேவையில்லை. அதனை மக்கள் பார்த்துக் கொள்வார்கள். அதற்கான களத்தை மட்டும் திறந்துவிட்டால் போதுமானது.

மேலும் கட்டுரைகளின் அளவு அனுபவமுள்ள வாசகனை மட்டும் இலக்கு வைத்துள்ளதுபோல் தெரிகிறது. அது தவிர்க்கப்பட வேண்டும். ஓரேபக்கத்தில் சிறிய எழுத்தில் வாசகனை களைப்படையச் செய்கின்றதாக அமையாது பார்த்துக் கொள்வது அவசியம். எழுத்துப் பிழைகள் இலக்கணப்பிழைகள் ஆசிரியர் தலைப்பில் முரண்பாடான கருத்துக்கள் மற்றும் தமிழ்ப் பிழைகள் என்பனவற்றுடன் இது நம் தேசத்தின் படைப்புக்கள் நம்பிக்கை இழப்பை தமிழ் சமூகத்திற்கு ஏற்படுத்தாது பாதுகாக்க வேண்டும்.

நன்றி

**கே.ரீ.கணேசலிங்கம்.**
**சிரேஸ்ட விரிவுரையாளர்**
**அரசறிவியல் பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

---

## பொது வாக்கெடுப்பு...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

பனிப்போர்க்கால நீண்ட ஆயுதப் போராட்டத்தின் பின் பனிப்போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து அதன் தென் சூடான் விடுதலையடைவதற்கான சூழல் தோன்றியது. அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் ஆதரவுடன் சூடானிய அரசுக்கும் தென்சூடான் மக்கள் விடுதலை இராணுவ இயக்கத்திற்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை மூலம் 2005ம் ஆண்டு எட்டப்பட்ட Naivasha ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2011ம் ஆண்டு ஜனவரி மாதம் நிகழ்ந்த பொதுவாக்கெடுப்பில் 98.3 விழுக்காட்டினர் பிரிந்து செல்வதற்கு சாதகமாக வாக்களித்தனர். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் முன்னாள் ஐ.நா.பொதுச்செயலாளர் கொபி அனான் உட்பட பல சர்வதேச முக்கியஸ்தர்களும் அமைப்புகளும் தேர்தல் கண்காணிப்பாளர்களாய் செயற்பட்டனர்.

கிழக்கு தீமோர் பொதுவாக்கெடுப்பு துருக்கி - சைப்பிரஸ் பிரச்சினையில் ஐ.நா. பொதுச்செயலர் கொபிஅனான் முன் வைத்த திட்டத்தின் கீழ் நிகழ்ந்த பொது வாக்கெடுப்பு மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் குறிப்பாக யூகோஸ்லாவியா 6 அரசுகளாக உடைந்தமை உட்பட்ட விஷயங்களும் இங்கு ஆழ்ந்த கவனத்திற்கு உரியவை. அவற்றை சுருக்கமாக நோக்குவோம்.

இந்தோனேசியாவில் கிழக்குத் தீமோர் பிரச்சனையில் ஆஸ்திரேலியா கிழக்குத் தீமோருக்கு சாதகமான உறுதியான நிலைப்பாட்டை எடுத்தது. ஆஸ்திரேலியாவின் வற்புறுத்தலுக்கு இந்தோனேசிய அரசு பணிவதைத் தவிர வேறு மாற்று வழி அதற்கு இருக்கவில்லை. மேற்குலகமும் கிழக்குத் தீமோருக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தது. கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட பிரிந்து செல்லும் இனங்களின் தொடர் வெற்றியானது இந்தோனேசிய அரசு பணியவேண்டியதற்கான சர்வதேச சூழலை கொடுத்தது. இப்பின்னணியில் ஐ.நா. மேற்பார்வையின் கீழான பொதுவாக்கெடுப்புக்கு இந்தோனேசிய அரசு மே 5, 1999 அன்று சம்மதம் தெரிவித்தது. இதன் அடிப்படையில் ஐ.நா. மேற்பார்வையின் கீழ் செப்டம்பர் 4,1999 அன்று பொதுவாக்கெடுப்பு நிகழ்ந்தது. இவ்வாக்கெடுப்பில் 78.5 விழுக்காடு மக்கள் பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாக ஐ.நா. பொதுச்செயலர் கொபிஅனான் அறிவித்தார். இதன்படி கிழக்குத் தீமோர் இறையாண்மையுள்ள சுதந்திர அரசாய் உருவெடுத்தது.

யூக்கோஸ்லோவியாவில் 1990 ஆண்டு ஒக்டோபர் மாதம் நிகழ்ந்த முதலாவது சுதந்திரத் தேர்தலானது யக்கோஸ்லோவியா பல அரசுகளாக பிரிந்து செல்வதற்கான ஏதுநிலையை ஏற்படுத்தியது. இத்தேர்தலில் தேசிய அடிப்படையிலான பிராந்திய அரசியல் கட்சிகள் பெரும் வெற்றிபெற்றன.

போஸ்னியா - ஹெசகோவினா குடியரசில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்த அரசாங்கமானது பிரிந்து செல்வதற்கான தனது விருப்பத்தை வெளியிட்டது. அதன்படி 1992ம் ஆண்டு பெப்ரவரி 29ம் தேதிக்கும் மார்ச் 1 ஆம் தேதிக்கும் இடையில் போஸ்னிய அரசாங்கம் பொதுவாக்கெடுப்பை நடத்தியது. அதில் 99.7 விழுக்காடு வாக்குகள் பிரிந்து செல்வதற்கு ஆதரவாக அளிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் மார்ச் 3ம் திகதி போஸ்னியா - ஹெசகோவினா இறையாண்மை கொண்ட சுதந்திர அரசாக பிரகடனப்படுத்தப்பட்டது.

உடனடியாக அமெரிக்காவும், ஐரோப்பிய பொருளாதார சமூகமும் பொதுவாக்கெடுப்பை அங்கீகரித்ததுடன் மொத்த மேற்குலகமும் போஸ்னியா - ஹெசகோவினாவின் சுதந்திர பிரகடனத்தை அங்கீகரித்தன. இந்த வகையில் யூக்கோஸ்லோவியாவின் தேசிய இனங்கள் ஸ்லோவினியா, குரோஷ்யா, சேவியா, மெசடோனியா, மாண்டிநீக்ரோ தொடர்ந்து பொதுவாக்கெடுப்புக்களின் மூலம் பிரிந்து சென்றன. இவற்றில் மாண்டிநீக்ரோ சற்று கவனிக்கத்தக்கது.

சேர்பியாவிலிருந்து மாண்டிநீக்ரோ பிரிந்து செல்வதற்கான தேவை அதிகரித்தது. பெல்கிரேட்டில் 2002ம் ஆண்டு நிகழ்ந்த பெல்கிரேட் ஒப்பந்தத்தில் பின்வருமாறு உடன்பாடு காணப்பட்டது. அதாவது மூன்று ஆண்டுகளின் பின் இதில் ஏதாவது ஒன்று விரும்பினால் பின்பு செல்லலாம் என்பதாகும். அதன்படி மாண்டிநீக்ரோ பிரிந்து செல்ல விரும்பிய நிலையில் 2006 மே 2ம் தேதி நடத்தப்பட்ட பொதுவாக்கெடுப்பில் 55.5 வாக்குகள் பிரிந்து செல்வதற்கு சாதமாக கிடைத்தன.

ஐ.நா. பாதுகாப்பு சபை நிரந்தர உறுப்பு நாடுகள் ஐந்தும் இதனை அங்கீகரித்த நிலையில் எவ்வித சிக்கலுமின்றி மாண்டிநீக்ரோ என்ற இறையாண்மை கொண்ட சுதந்திர தேசம் புவிப்பரப்பில் தோன்றியது.

1990 ம் ஆண்டிலிருந்து பொது வாக்கெடுப்பு மூலம் விடுதலை அடைந்த தேசிய இனங்கள்

| ஆண்டு | தேசிய இனங்கள் |
|---|---|
| 1990 | 1. சுலோவேனியா |
| 1991 | 1. ஆர்மீனியா |
| | 2. அசர்பைசான் |
| | 3. குரோசியா |
| | 4. எஸ்டோனியா |
| | 5. ஜார்ஜியா |
| | 6. லெத்வீனியா |
| | 7. லித்துவேனியா |
| | 8. மெஸிடோனியா |
| 1993 | 1. நகோர்னா - கரபாக் |
| | 2. உக்ரைன் |
| | 3. டிரான்நிஸ்டிரியா |
| | 4. துர்க்மெனிஸ்தான் |
| | 5. உக்பெக்ஸ்தான் |
| 1992 | 1.போஸ்னியா - ஹெர்ஸ கோவினா |
| | 2. தேற்கு ஒசேஸியா |
| 1993 | ஏரித்தியா |
| 1994 | மோல்ட்டோவா |
| 1999 | கிழக்குத்தீமோர் |
| 2006 | மாண்டிநீக்ரோ |

---

## இலங்கையின்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதைவிட தமிழ் மக்களுக்குக் கிடைத்த நீண்ட கால வரலாற்று அனுபவம் காரணமாக அதிகாரங்கள் தொடர்பான பிரதான அழுத்தி தமிழ்மக்களின்கைகளில்இருத்தல்வேண்டும் என்றே அவர்கள் எதிர்பார்க்கின்றனர். சுய நிர்ணய உரிமையைப் பிரயோகிக்கக் கூடிய அதிகாரங்கள் இருக்கின்ற போதே பிரதான அழுத்தி அவர்களின் கைகளில் கிடைக்கக் கூடியதாகவிருக்கும்.

மூன்றாவது விடயம் அதிகாரங்களுக்கான பாதுகாப்பாகும். எழுத்திலுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தாமல் விடுவதும், அதனை மீளப்பறித்து விடுவதும் இலங்கை அரசின் கடந்தகால மரபாகும். எனவே இவை நிகழாமல் தடுப்பதற்கு நுட்பமான பொறிமுறைகள் உருவாக்கப்படுதல் வேண்டும். குறிப்பாகத் தமிழ் மக்களின் சம்மதம் இல்லாமல் பகிர்வு அதிகாரங்களை மீளப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை இருத்தல் வேண்டும்.

மொத்தத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வுகள் எதுவும் வருவதற்கான வாய்ப்புக்கள் தற்பொழுது இருப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில் தமிழ் மக்கள் மீண்டும் வலிமை பெறுவதற்கான மார்க்கங்களைப் பற்றி சிந்திப்பதே நல்லது.

இதுவரை கால போராட்டங்களினால் தமிழ்த்தேசிய அரசியல் சர்வதேச சமூகத்தின் தீவிர கவனிப்புக்கு உள்ளாகியிருக்கின்றது. தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டு. அதனைத் தீர்ப்பதில் இலங்கை ஆட்சியாளர்கள் வரலாற்று ரீதியாகவே தவறிழைத்து வந்துள்ளனர் என்ற கருத்து சர்வதேச சமூகத்திடம் இன்று வலிமையாக உள்ளது.

இதனை மேலும் வலிமைப்படுத்த முயற்சிக்க வேண்டும். புலம்பெயர் தமிழர்களுக்கு இது விடயத்தில் பாரிய பொறுப்பு உண்டு. புலம் பெயர் மக்கள் தமது இடைவிடாத போராட்டங்கள் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு சர்வதேசக் கவனிப்பினை பெற்றுத் தந்திருக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரை அவர்களின் முதலாம் கட்டப் பணி வெற்றியடைந்துள்ளது.

இரண்டாம் கட்டப் பணிக்கு அவர்கள் உடனடியாகத் தயாராக வேண்டும் இதுவே வரலாற்று நிர்ப்பந்தமாக உள்ளது. இவ்வரலாற்றுக் கடமையை அவர்கள் சிறப்பாகச் செய்வார்கள் என்ற நம்பிக்கை தாயகத் தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகத் தமிழர்களுக்கும் உண்டு.

**முற்று**




கோபிதாஸின் மரணத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் - புலோலி




ஜெயக்குமாரியின் கைதினை எதிர்த்து ஆர்ப்பாட்டம் - வவுனியா




ஆசிரியர் நிரூபனின் கொலையினைக் கண்டித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தினது ஆர்ப்பாட்டம் - யாழ்ப்பாணம்



சிவநேசனின் நினைவு நிகழ்வின் போது - திக்கம்

இவ்விதழ் இல.43, 3ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் பிள்ளையார் ஓவ்செற் பிரிண்டேர்ஸ் (இல.676, பருத்துறை வீதி, நல்லூர்) இல் 01.04.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.